# திருக்குறள்

## கடவுள் வாழ்த்து

*பொன்னூர் ஜிநாலயத்தில் 8.6.1997 முதல் 12.6.97 நடைபெற்ற பஞ்சகல்யாணப் பெருவிழா*

*மற்றும்*

*ஸ்ரீகுந்த குந்தாசாரியார் திருவுருவச் சிலை நிறுவிய விழா நினைவு மலர்*


*மலர் தொகுப்பு*

**புலவர் S. தன்யகுமார், M.A., B.Ed.,**

*பொன்னூர்.*



*வெளியீடு*

**திருமதி A. புண்ணியகலா அறக்கட்டளை**

*பொறுப்பாளர்*

A. இரவிச்சந்திரன் M.Sc., M.Ed. பொன்னூர்.

முதல் பதிப்பு : 1997

உரிமை : அறக்கட்டளை

**விலை ரூ. 40.00**

---

**Laser at:** Varthamanan Computer Systems, Chennai-17.

**Printed at:** Varthamanan Printers, Chennai -17.





வீதராகாய நம:

## மேல் சித்தாமூர் ஜிநகஞ்சி மடம் அறந்தகு அடிகளார் அவர்களின்

# வாழ்த்துரை

தொண்டை நாட்டு ஜைனத்திருத்தலங்களில் ஒன்றான பொன்னூர் கிராமத்திலுள்ள ஸ்ரீ ஆதீஸ்வரர் ஜிநாலயம் திருப்பணி செய்யப்பட்டுப் பஞ்சகல்யாண பிரதிஷ்டா மஹோத்ஸவமும், ஆசாரியர் ஸ்ரீ குந்த குந்தர் திருவுருவச் சிலை நிறுவும் விழாவும் நடைபெறுவது சிறப்பான நற்பேற்றிற்குரிய நிகழ்ச்சிகளாகும்.

சீரிய இந்நிகழ்ச்சிகளின் நினைவாக மலர் வெளிவருவது சாலச்சிறந்தது. குறளாசிரியர் வாழ்த்தும் ஆதிபகவன் அருகதேவனே என்பதற்குரிய சான்றுகளைத் தன்னகத்தே கொண்டு மிளிரும் இந்நினைவு மலர் வெளியீடு காலத்தால் சிறந்த ஒரு தொண்டாகும்.

திருக்குறளைப் பல சமயத்தவரும் தங்கள் சமய நூல் என்று போற்றுவதே அந்நூலின் சிறப்பிற்கு ஒரு பெருங்காரணம். போற்றுவது சொல்லளவில் இல்லாமல் குறள் நெறியில் நிற்க முயல்வதுதான் உண்மையான

போற்றுதலாகும். குறள் நெறி எதுவோ அதுவே செந்தண் ஜைனம்! குறள் நெறி நின்று இன்றைய உலகம் உய்வதாக!

தூய ஜைன நெறி மேலும் தழைத்தோங்கவும் இவ்விழா நிகழ்ச்சிகள் சீரும் சிறப்புமாக நடந்தேறிடவும் நல்லாசி வழங்குகின்றோம்.

திருவறம் வளர்க!

ஸ்ரீமத்தபிநவ லட்சுமிசேந பட்டாரக
பட்டாசார்யவர்ய மகா சுவாமிகள்.
8.5.97 ஸ்ரீஜிநகஞ்சிமடம், மேல்சித்தாமூர்

# முன்னுரை

பல ஆண்டுகளுக்குப் பின்னர் பொன்னூர் கனக மலை ஆழ்வார் என வழங்கும் ஸ்ரீ ஆதீஸ்வரர் ஜிநாலயம் திருப்பணிகள் செய்யப்பட்டு 8.6.97 முதல் 12.6.97 வரை ஐம்பெரும் மங்கலவிழா நடைபெறுகிறது. அதுபோது திருக்குறள் ஆசிரியர் குந்த குந்தாசாரியரின் திருவுருவமும் ஓர் அழகான மணிமண்டபத்தில் நிறுவப்படுகிறது. ஸ்ரீகுந்த குந்தாசாரியருக்குத் திருவுருவம் அமைத்தல் இதுவே முதல் எனலாம். இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியின் நினைவாக ஒரு மலர் வெளியிட பலரும் விரும்பினர். மலர் வெறும் தகவல்தருவதாக மட்டும் இல்லாமல் ஆய்வு நூலாக அமையின் சிறப்பும் பயனும் உடையதாக இருக்கும் என்னும் நோக்கில் ஆய்வு நினைவு மலராக மலர்கிறது.

திருவள்ளுவர் சமணரே என்று பல நடுநிலை ஆய்வுத் தமிழறிஞர்கள் ஏற்றுக் கொள்ளுகின்றனர். சிலர் உணர்ந்தாலும் சொல்லத் தயங்குகின்றனர். பலருக்குச் சமணம் பற்றிய கொள்கைகள் தெரியாமையினால் தெளிவு காண இயலவில்லை. எனவேதான் திருக்குறள் கடவுள் வாழ்த்தில் குறளாசிரியர் இறைவனைப் பற்றிச் சுட்டும் சொற்கள் ஆதிபகவன் ஜிநனையே குறிப்பன என்பதைத் தெளிவுபடுத்துவது அவசியமாகிறது. அந்நோக்கில் ‘ஆதிபகவன்’ பற்றி சமண சமயச் செய்திகளை ஓரளவு தொகுத்து வழங்க சமணப் பேரறிஞர்களையே நாடி கட்டுரைகளைப் பெற்று மலர் வடிவம் பெற்றது.

மலருக்கு மேலும் மணம் ஊட்டும் வகையில் அமரர்கள் பேராசிரியர் சக்ரவர்த்திநைனார், ஆய்வறிஞர்

காஞ்சிபுரம் அனந்தநாத நைனார், ஜீவபந்து T.S. ஸ்ரீபால் முதலியவர்களின் ஆய்வுக் கட்டுரைகளையும், பல தமிழறிஞர்களின் கருத்துக்களையும் தொகுத்து மலரின் மணத்தைக் கூட்டியுள்ளேன். மேலும் இன்று நடுநிலை ஆய்வுப் பேரறிஞராக விளங்கும் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களது தினமணிக்கதிரில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரை ஒன்றும் மலரின் மணத்தைக் கூட்டியுள்ளது.

இம்மலரில் மணம் வீசும் அனைத்து அறிஞர் பெருமக்களுக்கும், இம்மலரை வெளியிடும் திருமதி. புண்ணியகலா அறக்கட்டளைப் பொறுப்பாளர் களுக்கும். இம்மலர் மலர்வதற்குத் தூண்டுதலாயும் துணையாயும் இருந்த பேராசிரியர் டாக்டர். கனக. அஜித தாஸ் புலவர் தோ. ஜம்புகுமார். பொன்னூர் N. அப்பாண்டை மற்றும் விழாக்குழுவினர் அனைவர்க்கும் என் உளமார்ந்த நன்றிகள் பல. இம்மலரை அழகும் மணமும் கமழ உருவாக்கித் தந்த வர்த்தமானன் பதிப்பகத்தார்க்கு நன்றி.

மலர் சிறிதாயினும் உண்மையை உணர்த்தும் பணியில் ஒரு மைல்கல். இவ்விழா நினைவு ஆய்வு மலர் திருக்குறள் ஆய்வறிஞர்களுக்கு ஒரு சிறுதுணையாக இருக்குமென நம்புகின்றேன்.

வாழ்க குறள் நெறி.!

பொன்னூர்
10.5.97

அன்பன்
S. தன்யகுமார்.

*****

# அறவாழி உருள்க!

அமரர் அணி மகுடமணி சுடரொளிக் கற்றையால்
அழகொளிரும் பதாம்புயத்தைத்
திமிரமெனும் பிறவிஅற திகட்டாத இன்பமுற
தெருளுறவே நெஞ்சிலிட்டேன்
சமணமெனும் தண்ணிலவு ஜெகத்தினில் செழிக்கவும்
சன்மார்க்க நெறிபரவவும்
அமலனெனும் பேர்பெற்ற ஆதியம் கடவுள்/நின்
அறவாழி உருள்க! எனவே.

*ஸ்ரீ தேவராஜ முனிவர்*
*இயற்றியருளிய*
*ஜிநேந்திர ஞானத் திருப்புகழ்*
*போற்றும்*
*பொன்னூர் ஸ்ரீஆதிபகவன்*

*ஓராகம்: கரகரப்ரியா*
*தாளம்:திஸ்ரஜாதி திரிபுடை*

பத்தர்க்கினி தேடரிதாகிய
சித்தத்தொடு கூறரிதாகிய
பட்சித்துணர் சோதியதானதும் இனிதாக
பட்டற்புகழ் பாடரிதாகிய
முட்டற்கொளி காணவொணாகிய
பத்மப்பதமே யருளாகியே தரவேணும்

கற்றைக்குழல் மானனையார்தன
சித்தத்தணு காதொருபோதினைக்
கற்பித்தெனை யாளுமுபாயமே புரிவாயே

கட்டப்படு மாபல யோனியில்
முட்டத்தடு மாறியே மீளவும்
கத்திக்கதி தோறுமுலாவியும் அலைவேனோ?

சுத்தத்தம ரேசர்துதித்துனைத்
தித்தித்திமி சேகெண தோகெண
தொக்குத் தொகு தோதிமி தோதிமி எனதானந்
துப்புற்றுடனே அவராடிட
மெய்ப்புத்துடன் நாரதர்பாடிட
சுப்ரக்கம லாசனமேவிய அருள்பாதா!

வெற்றித்திரு மாதொரு கேவலி
சித்தக்கரு ணாகரனாகிய
மெச்சுச் சுகமே புகழாகிய இறையோனே

மிக்கப்புக ழாகிய வீரிய
சொர்க்கப்பதி யாமெனமீறிய
மிக்கப்பொன் னூரினில்மேவிடும் பெருமானே!

*******

# விழாவின் வெற்றிக்கு உழைத்தவர்கள்

1. 1008 ஸ்ரீ ஆதீஸ்வர சுவாமி ஜிநாலய தற்கால அறங்காவலர் குழு-

தலைவர் : J. ஆதிராஜ்

செயலர் : C. இராஜகுமார்

உறுப்பினர்கள்:

D. சின்னராஜ்

V. அப்பாண்டைராஜ் நைனார்

L. வசுபால்.

2. 1008 ஸ்ரீ ஆதீஸ்வர சுவாமி பஞ்சகல்யாணப் பிரதிஷ்டா மகோத்ஸவ செயற்குழு

தலைவர். பொ. சந்திர கீர்த்தி

துணைத்தலைவர்: நே. உலகநாதன்

செயலர்: ஜெ. புருஷோத்தமன்

இணைச்செயலர்: ப. சக்ரவர்த்தி

பொருளாளர்: கி. அஜிததாஸ்.

**3. ஸ்ரீ குந்தகுந்தர் ஜைன இளைஞர் மன்றம்**
**பொன்னூர் தி.சா.மாவட்டம் பதிவு.66/94**

*தலைவர் : வ. இரமேஷ்*

*துணைத்தலைவர் : அ. அருகதாஸ்*

*செயலர் : உ. விஜயன்*

*இணைச்செயலர் : வி. அப்பாண்டைராஜ்*

*பொருளாளர் : பு. பாஸ்கரன்.*

*****

## திருக்குறளாசிரியர் ஸ்ரீ குந்தகுந்தாசாரியர்வரலாறு

*புலவர். தோ. ஜம்புகுமாரன் எம்.ஏ.*

இவ்வரலாறு ஜைனப் பெரியோர்களிடையே வழங்கிவரும் செவிவழிச் செய்திகளையும் சில வடமொழி நூல்களிலுள்ள சுலோகங்களையும், சிரவண பெளிகுளத்தின் கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகளையும் ஆதாரமாகக் கொண்டு, காஞ்சிபுரம், அமரர் தி. அனந்தநாத நயினார் அவர்களால் 1931ஆம் ஆண்டில் எழுதி வெளியிடப் பெற்ற "திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்த விளக்கமும்" என்னும் நூலில் கண்ட செய்திகளைத் தழுவியும் சுருக்கியும் எழுதப்பட்டது.

**மங்கலம் பகவான்வீரோ**
**மங்கலம் கௌதமோ கணீ**
**மங்கலம் குந்த குந்தாத்யோ**
**ஜைன தர்மோஸ்து மங்கலம்.**

மிகப் பழங்காலத்தில் வாழ்ந்த முனிபுங்கவர் ஒருவரின் வரலாறு இது; அவரே, நானிலம் புகழும் பொதுமறையாகிய திருக்குறளை இயற்றியருளிய ஏலாச்சாரியார் என்பவர். குந்த குந்தர் முதலாகிய பல சிறப்புப் பெயர்களும் இவருக்கு உண்டு; ஜைன சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஜைன ஆசாரியர்களில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கும் இவர்தம் வாழ்க்கை வரலாற்றை இனி நோக்குவோம்.

*ஆசாரியரின் முற்பிறவி செய்திகள்:*

இப்பரத கண்டத்தில் முற்காலத்தில் சிறந்து விளங்கிய நாடுகளில் 'பிடத நாடு' என்பதும் ஒன்று. அதன் தலைநகரம் குருமறை என்பது (தென்னாட்டைச் சார்ந்த குண்டக்கல் அருகில் இருக்கும் கௌண்ட குந்த புரமே அது என்பது சிலரது கருத்து) அந்நகரத்தில் கரமுண்டன் என்னும் செல்வ வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மனைவி ஸ்ரீமதி என்பாள். அவ்விருவரும் இயல்பிலேயே அருகபக்தியும், உத்தம தானம் செய்யும் நற்பண்பும், இல்லறத்தாருக்குரிய அணுவிரதங்களை அதிசாரமின்றி கைக்கொண்டொழுகும் உயர்ந்த

ஒழுக்கமும் உடையவர்களாய் விளங்கினர். அத்தகை யோருக்கு, மக்கட்பேறு இல்லாத குறை ஒன்றே மனதை வருத்திக் கொண்டிருந்தது.

### மதிவரன் கால்நடைகளை மேய்த்துவரச் செல்லல்

இவர்களுக்குக் கால்நடைச் செல்வம் மிக்கிருந்ததால், அவைகளைக் கவனித்துக் கொள்ள 'மதிவரன்' என்பான் ஒருவனை அவ்வேலைக்கு நியமித் திருந்தனர். அவனும் நாள்தோறும் பசுக் கூட்டங்களை நகரின் புறத்தே இருக்கும் காடுகளுக்கு ஓட்டிச் சென்று மேய்த்துவரலானான்.

அவ்வழக்கப்படி ஒருநாள் அவன் பசுக்களை ஓட்டிக் கொண்டு காட்டில் நெடுந்தூரம் சென்றான். அவ்விடத்தில், காட்டுத்தீயால் கருகிக் கிடந்த, மரங்களுக்கு இடையே, ஏழிலைம்பாலை என்னும் பெயருடைய மரமொன்று (சப்தசத விருட்சம்) தீயில் கருகாமல், தழைத்து, குளிர்ந்த நிழலைத் தந்து கொண்டி ருந்ததைக் கண்ட 'மதிவரன்' மிகவும் ஆச்சரியம் கொண்டான். மாடுகளை மேயும்படிவிட்டுவிட்டு, அதன் கீழே வந்தமர்ந்தவாறு, சிந்திக்கத் தொடங்கினான்.

### ஆகமம் ஒன்றைக் காணுதல்

சுற்றிலும் வளர்ந்திருந்த மரங்கள் எல்லாம் காட்டுத் தீயால் கருகி நிற்க, இம்மரம் மட்டும் தீயால் பாதிக்கப் படாமல் இருப்பதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும்! அது 'யாதாக இருக்கக்கூடும்?' என்று யோசித்தவனாய், எழுந்து, அந்த மரத்தைச் சுற்றிலும் வந்து, அண்ணாந்து பார்த்தான். அப்போது ஆங்கு அம்மரத்தின் பெரிய பொந்து ஒன்றில், தபோதனரால் போற்றப்படும் ஆகம

நூல் (ஓலைச் சுவடி) ஒன்று மிகவும் பாதுகாப்பாக யாராலோ வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு, இந்த ஆகமம் இங்கிருக்கின்ற காரணத்தினாலேயே இம்மரம் நெருப்பிற்கு இரையாகவில்லை என்று தீர்மானித்தவனாய், அந்த தெய்வீக ஆகம நூலை எடுத்து வந்து, தன் இல்லத்தில் தூய்மையானதோர் இடத்தில் வைத்து நாள்தோறும் அதை வழிபட்டு வரலானான்.

## கரமுண்ட வணிகன் முனிவருக்கு ஆகாரதான மளித்தல்

இங்ஙனம் செல்கின்ற காலத்து ஒருநாள் சுருதசாகரர் என்னும் தபோதனர் ஒருவர் ஆகாரத்திற்கு அந்நகரில் எழுந்தருளினார். வீதிவழியே மெல்லச் சென்று கொண்டிருந்த அம்மாமுனிவரை, வணிக குல உத்தமனாகிய கரமுண்டனும் அவன் மனைவி ஸ்ரீமதியும் கண்டு, மிகுந்த பக்தி பரவசத்தோடும் எதிர் கொண்டு அழைத்துச் சென்று, ஆகாரம் அளித்து உபசரித்து, அவர் கூறியருளிய அறவுபதேசங்களைக் கேட்டு மனவமைதி பெற்றனர். எனினும் தாம் மக்கள் பேறில்லாத குறையை அவரிடம் கூறி மனம் வருந்தினர்

## மதிவரன் ஆகமத்தை முனிவரிடம் தருதல்

அச்சமயம் அவ்வணிகனில்லத்தில் மாடு மேய்ப்பவனாகிய மதிவரன், உள்ளே வந்து, தான் காட்டிலிருந்து கொணர்ந்த ஆகமத்தை முனிவரின் அருகே வைத்து வணங்கி, அது தன்னிடம் வந்த வரலாற்றை எடுத்துக் கூறினான். முனிவரும் அவ்வாகமத்தை எடுத்து வாசித்துப் பார்த்து அவனை நோக்கி, நீ இந்த பரமாகமத்தைப் பூஜிக்கும் பெரும்

புண்ணியத்தைப் பெற்றனை யாதலால் மறுமையில் தேவ சம்பத்தையும்; இறுதியில் மோட்ச சுகத்தையும் அடைவாய்' என்று ஆசீர்வதித்துவிட்டு அவனை அனுப்பிய பிறகு, எதிரே பக்தியுடன் நின்று கொண்டிருந்த கரமுண்டனையும் ஸ்ரீமதியையும் நோக்கி, "புத்திரப் பேறு இல்லாதது குறித்து இனி நீங்கள் சிறிதும் வருந்த வேண்டாம். இதோ செல்கின்ற மதிவரன், ஆகம பூஜித புண்ணியச் செயலால், உங்கட்குப் புதல்வனாக வந்து பிறந்திடுவான்; ஆயின் நீங்கள் அவனை எனக்குச் சீடனாகத் தந்து விட வேண்டும்; அதன் பிறகு உங்களின் குலம் தழைக்க மற்றொரு பிள்ளையையும் பெறுவீர்கள்!" என்று அருளிச் செய்து, ஆகமத்தை எடுத்துக் கொண்டு நீங்கிச் சென்றார்.

### வணிகனுக்குக் கௌண்டேசன் பிறத்தல்

அதன்பின், சில காலம் சென்ற பிறகு, ஆவினங்களை மேய்த்துக் கொண்டிருந்த மதிவரன், சாஸ்திரதானப் பலனால், தன் ஆயுள் முடிவில் சரீரம் விட்டு, மேலே குறிப்பிட்ட ஸ்ரீமதிக்குப் புதல்வனாகச் சென்று பிறந்தான். வணிக தம்பதியினர் பிள்ளையைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து அவனுக்குக் 'கௌண்டேசன்' என்னும் திருப்பெயரிட்டு அவனை அன்புடன் வளர்த்து வந்தார்கள்.

### சுருதசாகரர் கௌண்டேசனை கல்விப் பயிற்சிக்காக ஓராசிரியரிடம் ஒப்புவித்தல்

அக்குமாரனுக்குக் கல்விப் பயிற்சி செய்விக்கும்

பருவம் வந்தது. அத்தருணத்தில் முன் சொன்ன சுருதசாகர முனிவர் அங்கு எழுந்தருளினார். கரமுண்டன் முனிவரை எதிர் கொண்டு அழைத்து வந்து, பரிவுசேர் பக்தியுடன் ஆகாரதான மளித்து உபசரித்தபின் முனிவரை நோக்கி, "ஐயன்மீர்! தாங்கள் வாழ்த்திச் சென்றபடி, எங்கட்கு ஒரு புதல்வன் பிறந்துள்ளான். அவனைத் தாங்கள் சீடனாக ஏற்றருள்க!" எனக் கூறி, மகனை முனிவரிடம் ஒப்படைத் தான். முனிவரும் அக்கௌண்டேசனை அழைத்துச் சென்று, தக்காராகி விளங்கும். பிரமசரிய விரத மேற் கொண்ட ஓர் ஆசிரியரிடம் 'கல்வி பயிற்றுக! எனக் கூறி அவனை ஒப்புவித்து விட்டுத் தவமேற் கொள்ளக் கானகம் போயினார். புதல்வனும் குருகுல வாசம் மேற்கொண்டு, அவ்வாசிரியரின் நிழல் போலப் பிரியாதுறைந்து, தத்துவம், வியாகரணம், தருக்கம் முதலாயினவற்றைச் சில காலத்திற் குள்ளேயே கற்றுச் சிறந்து விளங்கினான். ஆசிரியரும் மாணாக்கனது தேர்ச்சி முழுமையுற்றதை அறிந்தவராய் அவனை, அவன் பெற்றோர்களிடமே அனுப்பி, அவர்களுடன் சில காலம் தங்கி வருக!' எனப் பணித்தார்.

இல்வாழ்க்கையில் இயற்கையாகவே, நாட்ட மில்லாதவனாக இருந்தும், குருவின் ஆணையை, மீற அஞ்சிப் பெற்றோர்களிடம் சென்று அவர்களால் அன்பு பாராட்டப் பெற்று வளர்ந்து வரலானான்.

## முனிவர் கௌண்டேசனுக்கு அறமுரைத்து, உயிர் நீங்கல்

இஃது இவ்வாறாக, ஒருநாள் நகரின் சோலை யொன்றில் தன்னையொத்த சிறுவர்களுடன் பந்து

விளையாடுவதற்குச் சென்ற கௌண்டேசன், அங்கு ஓரிடத்தில் கண்களை மூடிக் கொண்டு யோகத்தில் இருந்த சுருத சாகர முனிவரைக் கண்டான். அச்சமயம் இவர்கள் எறிந்த பந்தானது முனிவரின் கையில் சென்று தங்கியது. அப்பந்தினை எடுத்து வருவதற்குப் பலரும் அருகில் நெருங்க அஞ்சிய வேளையில், கௌண்டேசன் மட்டும் அஞ்சாமல் சென்று, முனிவர் கையிலிருந்த பூம்பந்தினை எடுத்தான். அதனால் நிஷ்டை கலைந்து கண்விழித்த முனிவரர், முன்பு தம்மால் வணிகனிட மிருந்து அழைத்து வரப்பட்ட சிறுவனே, நம் கையிலிருந்த பந்தை எடுத்தவன்' என்பதை உணர்ந்து இவன் மிக்க ஞானியாக விளங்குவான்; இவனுக்குத் தருமோபதேசம் செய்யும் காலம் இதுவே என்று கருதித் தமக்கு ஆயுட்காலம் மிகவும் அருகி விட்டதை அறிந்து கொண் டமையால் அப்பொழுதே தம் கருத்தினை நிறை வேற்றிவிட எண்ணி, கௌண்டேசனை அருகே அழைத்து வைத்துக் கொண்டு, ஆசீர்வாதம் செய்து அவனுக்குத் துறவற நெறிகளை, அவன் மனங் கொள்ளு மாறு உபதேசித்தருளித் தம் கையிலிருந்த மயிற் பிஞ்சத்தைக் கொடுத்து, "ஸ்ரீ மந்தராய நம:" என்னும் மந்திர மொழியைக் கூறி, உயிர் நீத்தார்.

## கௌண்டேசன் துறவு பூண்டு குந்த குந்தரா தல்

அப்பொழுது முதலே, கௌண்டேசன் துறவற நெறிகளைப் பின்பற்றித் துறவியானார். முனிவர் உபதேசித்துச் சென்ற திருமந்திரத்தை எப்பொழுதும்

உச்சரித்துக் கொண்டு, குந்தி குந்தி நடந்து பஞ்ச முஷ்டியால் நமஸ்காரம் செய்து எழுவதை வழக்கமாகக் கொண்டிருந்ததால் அவருக்குக் 'குந்த குந்தர்' என்னும் காரணப் பெயர் ஏற்பட்டது.

*சமவ சரணத்தில் வாழ்த்தொலி தோன்றுதல்*

இங்ஙனம் குந்த குந்தர் தவம் புரியத் தொடங்கும் காலத்திலும் முடியும் காலத்திலும் ஸ்ரீமந்தர பகவானைத் துதிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருநாள் இவர் புதிய தத்துவ நூல் ஒன்றை எழுதத் தொடங்கிய போது வழக்கப்படி ஸ்ரீமந்தராய நம: என்று துதி செய்த அதே சமயத்தில் விதேக க்ஷேத்திரத்தில் தேவர்களால் நிர்மாணிக்கப் பட்டிருந்த ஸ்ரீமந்தரபகவானின் சமவ சரணத்தில், (குந்த குந்தரை) வாழ்த்தும் ஒலியானது எழுந்தது! அப்போது சமவ சரணத்திலிருந்த பத்மநாபன் என்னும் சக்கரவர்த்தி, பகவானை நோக்கி, "சுவாமி! காரணமின்றி வாழ்த்தொலி எழுந்ததற்குக் காரணம் என்ன"? என்று வினவினார். அப்போது ஸ்ரீமந்தர பகவான், பரத கண்டத்தில் குந்தகுந்தர் என்கின்ற க்ஷாயிக சம்யக்திருஷ்டி முனிவரர் ஒருவர் நம்மை வணங்கினார். அதன் பொருட்டு நாம் வாழ்த்தினோம்" என்று கூறியருளினார்.

*சாரணர் இருவர் குந்த குந்தரைக் கண்டு மீளுதல்*

பகவான் கூறிய இவ்வார்த்தைகளை அப்போது ஆங்கு இருந்த (ஆகாயத்தில் செல்லும் ரித்தியைப் பெற்றிருந்த) சாரணபரமேஷ்டிகள் இருவர் கேட்டு, குந்த குந்தரைக் காண வேண்டும் என்னும் ஆவலில்

பரதக்ஷேத்திரத்தில் அவர் இருக்கும் இடத்திற்கு வந்தார்கள். அச்சமயம், குந்தகுந்தர் ஆகமமாகிய நூல் ஒன்றை எழுதும் முயற்சியில் முனைப்பாக இருந்த படியால், தம்மருகே வந்த சாரணர்களுக்குத் தக்க வரவேற்பு கொடுக்காமற் போகவே, அவர்களிருவரும், மீண்டும் சமவசரணம் சென்று விட்டனர்.

## குந்த குந்தர் மேற்கொண்ட விரதம்

தாம் எழுதத் தொடங்கிய நல்ல முகூர்த்தத்தில், சாரணர் வருகை நேர்ந்ததையும், அவர்களை அச்சமயத்தில் வணங்கி வரவேற்க முடியாமற் போன சூழ்நிலையையும், பிறகு உணர்ந்த குந்த குந்தர் மீண்டும் அச்சாரணரைக் கண்டாலல்லது, தம் இருகரங்களையும் கீழே தொங்க விடுவதில்லை' என நியம விரதம் பூண்டு, கைகளை மேலே தூக்கிக் கொண்டு யோகத்தில் நின்று விட்டார்.

## சாரணர் மீளவும் குந்த குந்தரிடம் வருதல்

சமவ சரணம் திரும்பிய சாரணர்கள் இங்கு நிகழ்ந்ததைக்கூற, பகவான் தற்போதைய குந்த குந்தரின் விரதத்தை அவர்களுக்குக் கூறி, அவ்விருவரையும், குந்த குந்தரிடம் போக விடுத்தார். முனிவர் இருவரும் உடனே புறப்பட்டு, குந்தகுந்தரிடம் மீளவும் வந்து, அவரது விரதத்தைக் கைவிடும்படிக் கேட்டுக் கொண்டனர். அதனால் அவர், தியானத்திலின்றும் நீங்கி அவர்களைப் பக்தியோடு வணங்கி வழிபட்டு மகிழ்வடைந்தார்.

## குந்தகுந்தர் ஸ்ரீமந்தரரின் சமவ சரணம் செல்லுதல்

பின்பு சாரணர் இருவரும், விதேக க்ஷேத்திரத்தின்

சமவ சரணத்தில், ஸ்ரீமந்தர சுவாமியின் திருவாக்கினால் கேள்வியுற்ற செய்திகளைக் கூறவும், அவர், பகவானைத் தாம் தரிசிக்க வேண்டும் என்னும் ஆவலை முனிவர்களிடம் வெளியிட்டார். சாரணர் இருவரும் அவர் விருப்பத்தை நிறைவேற்றக் கருதி குந்த குந்தரை, அவர்களில் ஒருவர் தம் கையில் ஏந்திக் கொள்ள; ஆகாயமார்க்கமாகப் புறப்பட்டுச் சென்றனர். இவ்வாறு அவர்கள் செல்லும் போது குந்த குந்தரின் கையிலிருந்த மயிற்பிஞ்சம் நழுவிக் கடலில் வீழ்ந்து விட்டது. அதைக் கண்ட சாரணர்கள், கடல் நடுவின் ஒரு திடரில் உதிர்ந்திருந்த கழுகுகளின் இறகுகளைச் சேர்த்துப் பிஞ்சமாக்கிக் கொடுத்தார்கள். இக்காரணத்தால் இவருக்கு "க்ரத்த பிஞ்சர்" என மற்றொரு பெயரும் வழங்கலாயிற்று.

## குந்த குந்தர் ஸ்ரீமந்தர பகவானை வணங்குதல்

பிறகு சாரணர் இருவரும் குந்த குந்தரை ஸ்ரீமந்தர சுவாமியின் சமவசரணத்திற்குக் கொண்டு போய் சேர்த்தார்கள். அவர், அச்சமவ சரண விபவங்களையும், பன்னிரு கணங்களிருக்கும் கோஷ்டங்களையும், இந்திராதி தேவர்களின் கோலாகலங்களையும் கண்டு, ஜோதி ரூபியான ஸ்ரீமந்தர பகவானை மும்முறை வலங் கொண்டு வந்து வணங்கிப் பலவிதமான புகழ் மாலைகளால் தோத்திரம் செய்து பரவச முற்றார்.

## குந்த குந்தர் ஏலாச்சாரியர் ஆதல்

அச்சமயம் ஆங்கு இருந்த 500 வில் உயர முடைய பத்மநாப சக்கரவர்த்தி, குந்த குந்தரின் ஆனந்த நிலையைக்

கண்டு, பரிவுடன் அவரைத் தூக்கி எடுத்துத் தம் உள்ளங்கையில் வைத்துக் கொண்டு "ஹேலா! ஹேலா!" என்று குழந்தையைத் தாலாட்டுவது போன்று ஆட்டி, ஆங்குக் குழுமியிருந்தவர்களிடம், இவர் ஏலக்காயளவே களமுள்ளவராயுள்ளார் எனக் கூறினார். ஆதலால் குந்த குந்தருக்கு ஏலாச்சாரியார் என்று மற்றொரு திருநாமமும் உண்டாயிற்று.

பின்பு குந்த குந்தர் ஸ்ரீ மந்தர பகவானின் திருவாய் மொழி வாயிலாக ஜீவ, புத்கலாதி தத்துவங்களில் ஏற்பட்ட ஐயங்களைத் தெளிவு படுத்திக் கொண்டு பகவானின் உபதேச மாரியைத் தம் உள்ளக் கடலில் நிரப்பிக் கொண்டவராய் பகவானை வணங்கி விடை பெற்றுக் கொண்டு, மேற்கூறிய சாரண முனிவர் மூலமாய் பரதக்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்.

## குந்த குந்தர் இயற்றிய ஆகமங்கள்

இம்மாமுனிவர் மேற்கூறியபடி ஸ்ரீமந்தரபக வானைத் தரிசித்து வந்த பிறகு, பிராகிருத மொழியில் சமயசாரம் முதலாக 84 நூல்களைச் செய்தருளினார். 'தத்வார்த்த சூத்திரம்' என்னும் சமஸ்கிருத மொழியால் இயன்ற நூலும் இவரால் செய்யப்பட்டது என்று சிலர் கருதினாலும் அது 'கிருத்தபிச்சாசாரியர்' என்னும் பெயருடைய வேறொருவரால் கி.பி.2ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது' என்பது 'டாக்டர் A.N. உபாத்யாய' என்னும் ஆராய்ச்சியாளரது கருத்தாகும். குந்த குந்தருக்கு வழங்கப்பட்ட பல பெயர்களில் 'கிருத்த பிஞ்சர்' என்பதும் ஒன்று என முன்னர் கண்டோம். பெயரொற்றுமை கருதி. இத்தவறான கருத்து தோன்றியிருக்கக் கூடும் எனக் கருதலாம். அன்றியும், குந்த குந்தரது காலம்

கி.பி.முதல் நூற்றாண்டு என ஆராய்வாளர் கூறுகின்றனர் என்பதையும் ஈண்டு கருத்தில் கொள்ள வேண்டும்.

## குந்த குந்தரின் அறப்பயணம் நீலகிரியை அடைதல்

இந்தப் பரம ஞானியாகிய யோகீஸ்வரர் முனி சங்கத்துடன்பல நாடுகட்கும் சென்று ஜைன சமயக் கொள்கைகளை மக்களிடையே ஏற்குமாறு எடுத்துக்கூறி, ஆங்காங்கே உபதேசம் செய்து வந்தார். அவ்வாறு வந்தவர், தற்போது தமிழ் நாட்டின் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள வந்தவாசி நகருக்கு அண்மையிலுள்ள ஹேமகிராமம் எனப்படும் பொன் னூரில் உள்ள எல்லைக்குட்பட்ட நீலகிரி மலையை அடைந்து ஆங்கு நெடுங்காலம் சங்கத்துடன் தங்கியிருந்து, ஜைன சமயக் கொள்கைகளைப் பரப்பி வரலானார். அச்சம யத்திலேயே, உலகப் பொதுமறை யென போற்றப்படும் திருக்குறளைத் தமிழில் செய்தருளினார்.

## திருக்குறள் அரங்கேற்றம்

இத்தண்டமிழ் நீதி நூலை 'திருவுள்ளம் நயினார்' என்னும் திருநாமமுடைய தம் சீடர் ஒருவரை அழைத்து, அவரிடம் ஒப்புவித்துத் தென்தமிழ் நாட்டு மதுரை மாநகரில் அப்போழ்து இயங்கி வந்த தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றிவரும்படிச் செய்வித்தார்; அதனால் அந்நூல் யாவராலும் போற்றிப் புகழப்பட்டது; அதன் பெருமை நாற்றிசைகளிலும் பரவியது.

இதன் பின்னர் குந்த குந்தர் தம் சங்கத்துடன் ஊர் ஜயந்தகிரிக்கு (கிர்னார்) அருகிலுள்ள வனத்திற்கு வந்து தங்கினார். இருபத்திரண்டாம் தீர்த்தங்கரராகிய ஸ்ரீநேமி பகவான், இம்மலையின் உச்சியிலேயே நின்று கடுந்தவம்

செய்து முக்தியடைந்தார் என்பதும் அம்மலையின் மிசை அவருடைய இரண்டு திருவடிகள் பொறிக்கப்பட்டுள்ளன என்பதும் யாவரும் அறிந்ததே!

## ஜைனர்களுக்கிடையே சமாதானம் செய்வித்தல்

குந்த குந்தர் ஆங்குவனத்தில் தங்கியிருந்த போது, ஜைன சமயத்தின் இரு பிரிவினராகிய திகம்பரர்க்கும், சுவேதாம்பரர்க்கும், பிணக்கு ஏற்பட்டது. ஸ்ரீநேமி சுவாமியின் திருப்பாதங்கட்கு யார் முதலில் பூஜை செய்வது என்பது பற்றியதே அது. ஆசாரியர் அவர்கள் தம் தவவலிமையாலும் சாசன தேவதையாகிய ஜ்வாலா மாலினி தேவியின் துணையாலும், இரு சாரார்க்கும் ஏற்படவிருந்த கலகத்தை நிறுத்தி, இருபிரிவினரும் மனங் கொள்ளுமாறு ஒருசேர வழிபாடு செய்யும்படிக் கூறி அவர்களிடையே ஒற்றுமையை நிலை நிறுத்தினார். அப்போது அமரர்களும் தாமரை மலரை மழையெனப் பொழிந்து வாழ்த்தினர். அதனால் இவருக்குப் 'பத்ம நந்தி' என்னும் மற்றொரு திருநாமமும் வழங்கலாயிற்று. இவர் இப்பெயர் பெற்ற பிறகு "பத்ம நந்தி பச்சீஸ்" என்னும் நீதி நூலை வடமொழியில் எழுதினார். அது தமிழில் இவர் செய்த திருக்குறளைப் போன்றது' எனக் கூறப்படுகிறது. திருக்குறளில் முதல் குறட்பா ஆதி பகவனைக் குறித்து வணக்கம் தெரிவித்திருப்பது போல, அவ்வடமொழி நீதி நூலின் முதல் சுலோகமும் ஆதி பகவானைக் குறிக்கும் தோத்திரமாகவே அமைந்துள்ளது.

## வக்ரக்ரீவர் - உமாசுவாமி

இந்த யோகீந்தரர், தத்துவ நூல்களைத் தாம் ஏட்டில் எழுதும் போதெல்லாம், தம் தலையை ஒரு

பக்கமாகவே சாய்த்துக் கொண்டு எழுதிவந்தார். அதனால் அவர் சற்று சாய்ந்த தலையை உடையவரா கவே தோற்றமளித்ததால், அவருக்கு வக்ரக்ரீவர் என்னும் திருநாமமும் வழங்கப் படலாயிற்று. அன்றியும், இவர் விதேக க்ஷேத்திரம் சென்று ஸ்ரீமந்தர பகவானைத் தரிசித்து, அவர்வாய் மொழியாக உணர்ந்த் மெய்ப்பொருள்களை 84 கிரந்தங்களாகச் செய்து பேரும் புகழும் பெற்றுத் தமக்கு இணையானவர்கள் யாரும் இல்லை என்னும் பெருங்கீர்த்தியைப் பெற்றதனால், அறிஞர் பெருமக்கள் இவருக்கு உமா (சுவாமி) என்னும் திருநாமமும் இட்டு வழங்கலாயினார். இவ்வாறு கௌண்டேசன் என்னும் பெற்றோரிட்ட பெயருக்குப் பிறகு இவர் குந்த குந்தர், ஏலாச்சாரியார் முதலிய ஆறு காரணப் பெயர்களைப் பெற்றுத் திகழ்ந்தார்.

## குந்த குந்தரின் பெருமைகள்

இக்குந்த குந்தர் மூலசங்கமாகிய நந்தி சங்கத்தைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவருக்குப் பின் வந்த குரு பரம்பரையினர் தங்களைக் குந்த குந்தர் வழியினர் என்று கூறிக் கொள்வதில் இன்றும் பெருமை யடைகின்றனர். இதனை, "குந்த குந்தர் ஸ்ரீமந்தர சுவாமிகளிடத்திலிருந்து தூய உயிர்த் தன்மைகளை அறிந்து வந்து அதைப் பரப்பியிராவிட்டால் துறவியர், எங்கிருந்து நல்லறிவைப் பெற்றிருக்க முடியும்!" என்று 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தேவசேனர் தம் நூலான சாரித்திர சாரத்தில் குறிப்பிட்டுள்ளதைக் கொண்டு உய்த்துணரலாம்.

அன்றியும் பகவான் மகாவீரரையும், கௌதம கணதரரையும் அடுத்துக் குந்த குந்தாசாரியரையும்

நன்மைக்கு (மங்கலத்திற்கு) காரணமாக ஏற்று ஒவ்வொரு நற்செயல்களையும் தொடங்குவதற்கு முன், போற்றப் படும் வழக்கம் இன்றும் நம்மவரிடை இருந்து வருதலே, குந்த குந்தரின்அழியாப் பெருமைக்கு மற்றுமொரு சான்றாகும்.

## குந்த குந்தர் பொன்னூர் மலையில் தவம் பூணல்

இத்தகு பெருமைகளுக்கு உறை விடமாக விளங்கிய குந்த குந்தர் சில காலம் இப்போது மயிலாப்பூர் என வழங்கப்படும் திருமயிலையில் வந்து தங்கியிருந்தார்' எனக் கூறப்படுகிறது. பின்பு அவ்விடம் விட்டு நீங்கிப் பழையபடியே பொன்னூர் எல்லைக்குட்பட்ட நீலகிரியின் மிசை முனி சங்கத்துடன் வந்து சேர்ந்தார். அங்கு வந்தபின் அம்மாமுனிவர், ஆசாரிய பதம் முதலானவற்றைத் துறந்து, புறக்கிரியைகள் யாவற்றையும் விட்டொழித்து இரவும் பகலும் பிரதிமாயோக தாரியாய் நின்றுக் கடுந்தவம் செய்து மேற்படி மலையின்மிசை தேகவியோக மடைந்தார். அவர் தேகவியோக மடைந்தார் எனக் கூறப்பட்டாலும், நம் சமய ஆகமக் கூற்றின்படி, அவரது ஆன்மா சர்வார்த்த சித்தி என்னும் பஞ்சாணுத்தரத்தில் அகமிந்திரனாகப் போய்பிறந்து இப்பொழுது இந்திர சுகத்தினை அனுபவித்துக் கொண்டிருப்பதாகவே கொள்ள வேண்டும்.

ஆசார்ய குந்த குந்தாக்ய

வக்ரக்ரீவோ மஹாமதி:
ஹேலா சார்யோ க்ரத்த பிஞ்ச:
பத்ம நந்தீதி தன்முதி:

*மிக்க ஞானத்தை உடைய குந்த குந்தர், வக்ரக்ரீவர்,. ஏலாச்சாரியார், க்ரத்தபிஞ்சர், பத்ம நந்தி (உமாசுவாமி) ஆகிய திருநாமங்கள் பெற்ற முனிபுங்கவரான ஆசாரியரை யாவரும் துதித்து வணங்குவார்களாக!*

****

# திருக்குறளும் ஜைநசமயமும்

**பேராசிரியர் A. சக்ரவர்த்தி நைனார் I.E.S.**

*திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைந சமய சித்தாந்த விளக்கமும் என்ற நூலின் முன்னுரை*

இந்தப் புத்தகம், பிரசித்தி வாய்ந்த திருக்குறளின் ஆசிரியர், ஜைந சமயத்தினரென்று நிரூபிக்க எழுதப் பட்டுள்ளது. பல மதத்தினரும் குறளாசிரியரைத் தம்மவ ரென்று கூறுகின்றபடியால் அவருடைய மதம் இன்ன தென்று காண அவருடைய நூலின் உட்சான்றுகளே நமக்கு ஆதாரம். உட்சான்று சந்தேகமற்றதாயும் நிச்சயமானதாயு மிருக்கின்றது. திருக்குறள் அஹிம்சா தருமத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பற்ற நீதி நூலாகும்.

"ஹிந்துமதத்தின் ஒவ்வொரு பிரிவும் அந்தப்பெரிய கவியைத் தன்னுடையதாகச் சொல்லி அவருடைய செய்யுட்களுக்குத் தன்மதக் கோட்பாடுகளுக்கொப்ப உரை காண முயல்கின்றது. முக்கியமாக ஜைநர் அவரைத் தம்மவராகக் கருதுகின்றனர்; அவர்களுடைய பரிபாஷை களுள் சிலவற்றை அவர் நிச்சயமாகவே உபயோகித் துள்ளார். அம்மதத்தின் கொள்கைகளை அவர் நன்கு உணர்ந்திருந்த தாகத் தெரிகின்றது."

"ஆனால் திருவள்ளுவர் ஜைநர் என்னும் கொள்கைக்கு விரோதமாக ஒரு குறள் இருக்கின்றது. மூன்றாவது அதிகாரம் ஐந்தாவது குறளில் இந்திரனைப் பற்றிய ஒருகதை குறிப்பிடப்பட்டுள்ளது. துறவிகள், தேவர்களுக்குமேல் சக்தி வாய்ந்தவர்கள் என்பதை அது ருசுப்படுத்துவதாகக் கருதப்படுகின்றது. கௌதமர்

என்னும் ஒரு துறவி இருந்தார். தம்முடைய மனைவியாகிய அகலிகையை இந்திரன் ஏமாற்றினான். அதற்காக அவர் அவனைச் சபித்தார். ஜைந சமயத்தின்படி துறவிக்கு மனைவியிருக்க முடியாது; அவர் கோபமடையவும் முடியாது. பிறருக்கு தண்டனை விதிக்கவும் முடியாது. ஒரு ஜைநர் இந்தக் கதையை நம்பமாட்டார்; குறளாசிரியர் செய்ததுபோல இதை உபயோகப்படுத்தவும் மாட்டார்." இவ்வாறு டாக்டர் போப் கூறியுள்ளார். ஜைனசமயத்தைப் பற்றியும், ஜைனக் கொள்கைகளைப் பற்றியும் அவருக்கு ஒன்றும் தெரியாது போலும். "ஜிநேந்திரன்" என்னும் பதத்திற்குக் "கோபத்திற் கதிபதி" என்று அவர் பொருள் கூறுகின்றார். அவர் ஜைந சமயத்தை அறிந்த வரல்லவென்பதை இதுவே வெளிப்படுத்துகின்றது. "ஜிநன்" "சினன்" ஆகியவற்றிற்குள்ள வித்தியாசத்தை உணராத ஒருவர், ஜிநன் என்னும் பெயர் சினம் (கோபம்) என்னும் தமிழ்ச் சொல்லினின்றும் பிறந்ததாகக் கருதும் ஒருவர், ஜிநேந்திரன், ஹீப்ரு ஜனங்களின் கோபக் கடவுளாகிய ஜிகோவாவைப் போன்றவரென்று நினைக்கும் ஒருவர், அஹிம்சையை போதிக்கும் தமிழ் ஆகமமாகிய குறளின் ஆசிரியரைப் பற்றி அபிப்பிராயம் சொல்லச் சிறிதும் யோக்கியதையுடையவரல்லர். இந்திரன் அகலிகையோடு செய்த தீச் செய்கையையாவது, அதற்காக கௌதமர் இட்ட சாபத்தையாவது குறளின் பேராசிரியர் குறிப்பிடவில்லை என்று எடுத்துக் காட்ட வேண்டியதவசியமில்லை. இந்தக் கதை உரையாசிரியரான பரிமேலழகருடைய ஆழ்ந்ததும் நேர்மையில்லாததுமானயுக்தியிலுதித்தது. அவர் குறளாசிரியர் நினையாத அநேக கருத்துக்களைப் பலவிடங்களில் மூலபாடத்தோடு பொருத்த முயல்கிறார்.

இப்புத்தகத்தின் ஆசிரியர் சாதுரியமாகக் காட்டி யுள்ளபடி அந்தக் குறள், வேதங்களில் புகழப்படும் தெய்வங்களுக்கு முதன்மையானவனால் வணங்கப்படும் பரமவீதராகனுக்கு இந்திரன் செய்யும் தொண்டைக் குறிக்கின்றது. ஆகையால் மிகவும் தப்பாகப் பொருள் கொள்ளப்படும் இந்தக் குறளில் ஜைந தருமத்திற்கு விரோதமானது ஒன்றுமில்லை.

இன்னும் சமீபகாலத்தில் அண்ணாமலை சர்வ கலாசாலையின் சார்பில் சில கட்டுரைகள் செய்யப் பட்டன. அவற்றுள், குறளாசிரியர் தம்முடைய கருத்துக் களை வைதிக ஹிந்து மதத்திலிருந்து பெற்றாரென்றும், அவருடைய நூல் சமஸ்கிருதத்திலுள்ள போதாயனரு டைய தர்ம சாஸ்திரம், கௌடில்யருடைய அர்த்த சாஸ்திரம், வத்ஸாயனருடைய காம சாஸ்திரம் ஆகிய வற்றின் மொழி பெயர்ப்பென்றும் கூறுப்பட்டன. இந்தக் கொள்கை எவ்வளவு பொருத்தமற்ற தென்பது வைதிக தருமத்தைப் பற்றி சிறிது தெரிந்தவருக்கும் நன்கு விளங்கும்.

போதாயனருடைய தர்ம சாஸ்திரம் வைதிக மதத்தின் வர்ணாஸ்ரம தருமத்தை முற்றும் அடிப்படை யாக உடையது. அது அஹிம்சா தருமத்திற்கு நேர் எதிரானது. மனு, கௌதமர் ஆகியவர்கள் கூறியிருக்கும் நான்கு வர்ணத்தாருடைய தொழில்களையும் போதாயனர் கூறுகின்றார். உதாரணமாக மதுபர்க்கம் அல்லது அதிதிகளுக்கு விருந்தளித்தல் என்ற அதி காரத்தில் பிராமணபோஜனத்திற்குத் தகுதியான மிருகங்கள் இன்னின்ன வென்று கூறுப்பட்டுள்ளன. அவற்றுள் பசுக்களும், செம்மறியாடுகளும், மான்களும்,

காட்டுப் பன்றிகளும், காண்டாமிருகங்களும் அடங்கியுள்ளன. இது தற்காலத்தில் மாமிசம் உண்கின்ற பிராமணரல்லாதாரையும் நடுங்கும்படிச் செய்யும். இந்த தரும சாஸ்திரம் திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கு உற்பத்தி ஸ்தானமாகக் கருதப்படுகின்றது! அங்கே (தரும சாஸ்திரத்தில்) வேதானுசாரப்படி ஜீவஹிம்ஸை செய்வதே முக்கியமான கொள்கை; இங்கே (திருக்குறளில்) அதை முழுதும் கண்டித்துக் கொல்லாமையே சிறந்த தருமமென்று புகழ்வதாகும். "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று" என்றார். அங்கே பித்ருக்களுக்கும், அதிதிகளுக்கும், தேவதைகளுக்கும் மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, மான் இறைச்சி, காண்டா மிருகத்தின் மாமிசம் ஆகியவற்றைச் சிறந்த ஆகாரமாகக் கொடுக்கும்படி சொல்லப் பட்டுள்ளது. இங்கே (திருக்குறளில்) புலால் உண்பது மிகவும் இழிவாகக் கூறப் பட்டுள்ளது. புலால் ஒரு பிராணியின் புண்ணுக்குச் சமானமாகக் கூறப் பட்டுள்ளது. இவ்வாறிருக்கத் திருக்குறளின் கருத்துக்கள் போதாயனருடைய தரும சாஸ்திரத்திலிருந்து பெறப் பட்டனவாம்! இது என்ன ஆச்சரியம்!

இன்னும் திருக்குறளில் உழவுத் தொழிலைச் சிறப்பித்துக் கூறியிருப்பதை நோக்குக. வைதிக தருமப்படி நிலத்தை உழுது பயிர் செய்தல் கடை வருணத்தாருடைய தொழில். தன்னுடைய ஜாதிக்குரிய தொழிலைச் செய்ய முடியாமல் இழிந்த நிலையை அடைந்தாலொழிய ஒரு பிராம்மணனாவது க்ஷத்திரியனாவது பயிர்த்தொழிலைச் செய்ய நினைக்க முடியாது. குறளாசிரியர் நிலத்தை உழுபவனுக்கு முதன்மை கொடுத்திருக்கிறார். அவனே ஜனசமூகத்தில் முன் நிற்கின்றான். மற்றெல்லோரும்

அவன் பின்னே செல்கின்றவர்கள். நாம் இங்கே அதிகம் எழுது வேண்டியதில்லை.

குறளாசிரியரைத் தம்மவரென்று சிறிது நியாயத்தோடு கூறக் கூடியவர் பௌத்த சமயத்தினர் ஒருவரே. ஆனால் வாய்ப்பேச்சோடு நிற்கும் பௌத்த சமயத்தினுடைய அஹிம்சாதர்மக் கொள்கையைத் திருக்குறள் கண்டிக்கின்றது. பௌத்தன் தன் கையால் எந்த ஜீவனையும் கொல்லுவதில்லை. அவனுடைய அஹிம்ஸாதர்ம அனுஷ்டானம் அதோடு நின்றுவிடும். ஆனால் அவன் தன்னுடைய கொள்கைக்கு விரோதமின்றி மாமிசத்தைக் கடையிலிருந்து வாங்கிக் கொள்ளலாம். ஆனால் குறளாசிரியர். பொறுப்பைச் சரியானயிடத்தில் இறுத்துகின்றார். புலால் உண்கின்ற வர்களுடைய சௌகரியத்திற் காகக் கடைக்காரன் புலாலை விற்கின்றான். தேவைக்கு ஏற்றபடி உற்பத்தி செய்ய வேண்டியதாயிருக்கிறது. புலால் அதிகம் தேவை யானால் அதிகமாக ஜீவன்களைக் கொலை செய்ய வேண்டியது அவசியமாகின்றது. தேவை மட்டானால் கொலை மட்டாகும். தேவைக்குத் தகுந்த மாதிரியே வியாபாரமும் நடக்கும்.

இனிமேல் ஒன்றும் சொல்ல வேண்டியதவசிய மில்லை. திருக்குறள் அஹிம்சா தருமத்தை எல்லா அம்சங்களிலும் போதிக்கின்ற ஒரு பெரிய ஆகமம் என்று சொன்னால் போதுமானது. கொள்கையிலும் அனுஷ் டானத்திலும் திருக்குறளின் கருத்துக்களோடு ஒத்திருக்கும் ஒரே இந்திய மதம் ஜைநசமயமே. இவ் விஷயம் இந்தப் புத்தகத்தில் சாதுரியமாக நிரூபிக்கப் பட்டுள்ளது. இந்தப் புத்தகத்திற்கு முன்னுரை எழுதும் பாக்கியம் பெற்றதற்கு நான்பெரிதும் மகிழ் வெய்துகிறேன்.

# "பகவான் விருஷபதேவர் யார்?"

*ஜீவபந்து T.S. ஸ்ரீபால்*

"அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்ற திருக்குறள் கடவுள் வாழ்த்தின் முதற் குறளையும் அதனைத் தொடர்ந்து வரும் மற்ற ஒன்பது குறள்களையும் கடவுள் வாழ்த்தாகக் கொண்டாடு கின்றோம். ஆனால், திருக்குறள் ஆசிரியர் கருத்திற்கேற்ப, கடவுட் கொள்கையை அறிந்துள்ளோமா என்றால், அதுதான் இல்லை. நமது தமிழகத்தின் துரதிர்ஷ்டம் தருமர் போன்ற பேரறிஞர்களின் உரைகள் கிடைக் காமையால், பிற்காலத்தெழுந்த மதவாதிகளின் உரைகளே இன்று காணப்படுகின்றன. அதனால் அந்தந்த உரையா சிரியர்களின் மதக்கொள்கைகளுக்கேற்பக் கடவுட் கொள்கையும் வலிந்து உரை காணப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல! பெரும்பாலும் அம்மதக் கொள்கை களுக்கு முரணாக இருப்பதால், சிலர் இப்பத்துக் குறட் பாக்களும் இடைச்செருகல் என்று கூடக் கூசாமல் எழுதியும் பேசியும் விடுகின்றார்கள். எனவே, திருக்குறள் ஆசிரியரைப் பற்றியும் அவராற் போற்றப்படும் ஆதிபகவனைப் பற்றியும், பெரும்பாலோரால் நன்கு அறிந்துகொள்ள முடியாமற் போய்விட்டது. எனினும் திருக்குறள் சார்பான தமிழ் இலக்கியங்களும், நீதி நூல்களும், தோத்திரப்பாக்களும் ஆதிபகவனைப் பற்றியும் அவரது அறநெறிகளைப் பற்றியும், வெள்ளிடை

மலைபோல விளக்கிக் கொண்டிருக்கின்றமையால், அக்கொள்கை என்றும் நிலைத்து நிற்குமென்பது உறுதி.

**ஆதிபகவனின்** இயற்பண்புகள் அனைத்தும் பல அறநூல்களிலும், தொல்காப்பியம், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற பல நூல்களிலும், வடமொழி இலக்கியங்கள் பலவற்றுள்ளுங் காணலாம். எனவே, இப்பேரிலக்கியங்களினின்றும் **ஆதிபகவன்** என்று போற்றப்படுபவர், இல்லறம் துறவறம் ஆகிய இருபேரறங்களைவகுத்தவரும் பகவான் **விருஷபதேவரே** ஏன்பது தெளிவு.

**விருஷபதேவர்** தாம் வகுத்த அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய அறநெறிகளை முறையே வாழ்க்கையில் நடத்திக் காண்பித்தார். இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு மனைவி மக்களுடன் பல ஆண்டுகள் வாழ்ந்து மகிழ்ந்திருந்தார். பின்னர், ஆத்மார்த்திகத் துறையை விரும்பி, தமது மூத்த குமாரர் பரதனுக்குப் பட்டஞ் சூட்டிவிட்டுத் தாம்துறவறத்தை மேற்கொண்டார். பல மலைகளிலும், காடுகளிலும் அலைந்து தவமியற்றலானார்.

எனவே உலகியல் முன்னேற்றமும் ஆத்மீக முன்னேற்றமும் அவசியம் என்பதை உலகுக்கு அறிவிக்கவே தாம் இல்லறத்தினின்றும் துறவை மேற் கொண்டார் என்பது போதரும். இவ்வுண்மையை,

"மன்னுயிர் காத்தலான்மனம்விட்ட வருளினொடு
இன்னுயி ருய் கென்ன வில்லறமு மியற்றினையே

புன்மைசா லற நீக்கிப் புலவர்கள்தொழுதேத்தத்

**தொன்மைசால் குணத்தினாற் றுற வரசாய்த்**
**தோற்றினையே"**
*- யாப்விருத் சூத்ரம் 84 உரை.*

*என்ற தோத்திரத்தாலும், இல்லறம் துறவறம் ஆகிய வற்றின் சிறப்பினை,*

**"காமம் சான்ற கடைகோட்காலை**
**ஏமம் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம் புரிசுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"**
*- தொல்காப்பியம்.*

*என்ற பண்டைய நூல்களாலும் அறியலாம். உலக இயற்கையோடியந்த இவ்வற நெறிகளின் உண்மைகளை அறியாதாரே ஜைனதருமம் மக்களைக்காட்டிற்கு அனுப்பிவிடுகிறது என்று சுலபமாகக் கூறிவிடுகிறார்கள். பகவான் விருஷபதேவரின்* **துறவறம்** *மிகமிகச் சிறந்தது. அவர் முற்றுந் துறந்த முனிவரானார்.*

**விருஷபதேவர்** *ஆத்மீக மேம்பாட்டிற்காகத் துறவறமேற்கொண்டு இறுதியாகக்* **கைலாச மலையில்** *நின்று கடுந்தவம் புரிந்தார். அங்கு அவருக்குக் கேவல ஞானம் உதயமாயிற்று. வினைகளை வென்று வீடு பேறு பெற்றார். வினையின் நீங்கி விளங்கிய அறிவனாய்ப் பரிநிர்வாணம் (வீடுபேறு) அடைந்தமையால் அவரைப் பகவன், சித்தன், சிவன், சிவகதிநாயகன், எண்குணன், அருகன், அறவாழி வேந்தன் எனப் பல பெயர்களால் சான்றோர் போற்றி வணங்கினர். அவர் பரிநிர்வாண மடைந்த திருநாளைத்தான் இன்றும்* **சிவராத்திரி***யெனக் கொண்டாடிவருகிறோம். மக்கள் பண்பிற்கும்*

வாழ்விற்கும் வழிவகுத்தருளிய **விருஷபதேவரின் திருவறம்** உலகெங்கும் பரவிவரலாயின. இவ்வாறு பல நூற்றாண்டுகள் சென்ற பின்னர், வெவ்வேறு காலங்களில் விருஷப தேவரைப்போன்றே, இருபத்து மூவர் தோன்றினர். அவர்களும் விருஷபதேவர் அருளிய **திருவறங்களை** மக்களுக்குப் போதித்துத் தாங்களும் அவ்வறநெறியில் நின்று தவமியற்றி வீடுபேறு பெற்றனர். அவர்கள் அனைவரையும் பகவன், சித்தன், சிவகதி நாயகன், என்றே போற்றலாயினர். ஆகவே இவ்விரு பத்து மூவருக்கும் முதல்வராக **விருஷபதேவர்** விளங் கினமையாலும், அவர் அருளிய அறநெறிகளையே முதல் நூலாகக் கொண்டமையாலும் அவரை **ஆதிபகவன்** எனச் சிறப்புப் பெயரால் அழைத்து இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களாகப் போற்றினர். தீர்த்தங்கரர் என்றால் அறவுரை பகர்வோர் என்பது பொருள்.

*****

# திருவள்ளுவர் சமயம் யாது?

**தமிழ்த் தென்றல் திரு.வி.க**

*திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைனசமய சிந்தாந்த விளக்கமும் என்ற நூலின் அணிந்துரை*

தமிழ் நாடளித்த அறிவு மணிகள் பல. அவைகளுள் சில தாம்பிறந்த நாட்டிலேயே மிளிர்ந்து கொண்டிருக் கின்றன; ஒன்று உலகிற்கே ஒளி வழங்கிக் கொண்டிருக் கிறது. அவ்வொன்றெது? அதுவே திருவள்ளுவர் என்னும் வான் மணி. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்றார் பாரதியாரும்.

"திருவள்ளுவர் உலகிற்கு ஒருவர்" என்பதை வலியுறுத்த விரிந்ததோர் ஆராய்ச்சி வேண்டுவதில்லை. ஏறக்குறைய எல்லாச் சமயத்தவருந் திருவள்ளுவரைத் தம்மவர் என்று போற்ற விரைந்து விரைந்து முந்துவ தொன்றே "அவர் உலகிற்கு ஒருவர்" என்பதை உணர்த்து வதாகும். இவ்வாறு அவர் போற்றப்படுதற்குரிய காரணங்கள் பல உண்டு. அவைகளுள் சிறந்த ஒன்று, அவர் உலகிற்கு அறிவுறுத்திய அறத்தினிடைத் திகழும் பொதுமை யென்க. அப்பொதுமையாவது "எவ்வுயிர்க் குஞ் செந்தண்மை பூண்டொழுகல்" எனபது.

"எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகல்" என்னும் பொதுமையறத்தைத் தயை அல்லது அருள் என்று சுருங்கச் சொல்லலாம். "தயா மூலதர்மம்" என்று மறை முழங்குகிறது. தயை அல்லது அருள் நெறி, சமயம் என்றுதொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகிறது. அஃறிணை யுலகினின்றும் உயர் திணையைப் பிரித்து

நிற்பது. இவ்வருணெறி யென்னுஞ் சமயமேயாகும். அருளுடைய ஒருவனே சமய வழி நிற்பவனாவன். அஃதில்லா ஒருவன் அவ்வழி நிற்பவனாகான். அருளுடைமையைச் சமய ஒழுக்கமெனக் கொள்க.

சமயம் ஒன்றா? பலவா? சமய நெறியை ஒருமுகப் படுத்திக் கோடற்கும் இடனுண்டு. அதைப் பன்முகப் படுத்திக்கோடற்கும் இடனுண்டு. அக்கோண்முறை அவரவர் அறிவு ஆராய்ச்சித் திறத்தைப் பொறுத்து நிற்பது.

'ஒவ்வொன்றற்கும் புறமும் அகமும் இருத்தல் போலச் சமயத்துக்கும் புறமும் அகமும் இருக்கின்றன. சமயத்தின் புறத்தை நோக்கும்போது பன்மைக் காட்சியும், அதன் அகத்தை யுணரும்போது ஒருமையுணர்வுந் தோன்றும். புறப்பன்மையைச் சமயவாதிகள் சமயங் களாகக்கொண்டு கலாம் விளைக்கிறார்கள். சமயத் தின் அகத்திலேயே பொதுமை என்னுஞ் செம்பொருள் பொலிந்து கொண்டிருக்கிறது. மேலோர் அப்பொது நெறிநின்று, தம்முயிரைப் போல் மன்னுயிரைப் போற்றிவாழ்வு நடாத்துவர். மற்றவர் சமயவாத மென்னுங் குழியில் வீழ்ந்து இடர்ப்படுவர்.

கடலிடைத் தீவுகள் பலபடக் காணப்படுகின்றன. அப்பலபட்ட தலைகளைத் தாங்கி நிற்கும் அடி (நிலம்) ஒன்றா? பலவா? பன்னிறப் பசுக்களிருக்கின்றன. அவைகள் பன்னிறப் பாலையா சொரிகின்றன? பலதிற மணிகளை ஒருநாணன்றோ ஏந்தி நிற்கிறது? ஆகவே, புறப்பன்மையளவில் கட்டுப்பட்டு நில்லாது, அப்பான்மையையுறுகருவியாக் கொண்டு, உள்நுழைந்து நுழைந்து. ஒருமை காண மக்கள் முயலுதல் வேண்டும்.

சமயத்தின் புறத் தோற்றங்களாகிய பேர், கோலம், வழிபாடு முதலிய வேற்றுமைகளை, ஒவ்வொரு சமயமாக் கொண்டு, சமய வாதத்திலிறங்குதல் கூடாது. அப்புறங் குவிந்த அகத்திற்புகுந்தால் ஒருமை இன்பம் நுகர்தல் ஒருதலை. "உங்கள் பேதமன்றியே உண்மை பேதமில் லையே" (சிவவாக்கியர்) "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" "வேறுபாடு சமய மெலாம் புகுந்து பார்க்கில் விளங்குபரம் பொருளே நின் விளையாட்டல்லால் - மாறுபடுங் கருத்தில்லை" (தாயுமானார்) "பெருகியபே ரருளுடையார் அம்பலத்தே நடிக்கும் பெருந்தகையென் கணவர்திருப்பேர்புகலென் கின்றாய் - அருகர் புத்தராதி யென்பேன் அயனென்பேன் நாராயணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவனென்பேன் - பருகுசதா சிவமென்பேன் சித்திசிவ மென்பேன் பரமமென்பேன் பிரமமென்பேன்பரப்பிரம மென்பேன் - துருவு சுத்த பிரமமென்பேன் துரிய நிறை வென்பேன் சுத்தசிவ மென்பேன் இவை சித்து விளையாட்டே" (இராமலிங்க சுவாமிகள்) "வாது செய்து மயங்கு மனத்தராய் - யாது சொல்லுவிராகிலும் ஏழைகாள் - யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம் - மாதேவன்னலால் தேவர் மற்றில்லையே" "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்" (அப்பர்) "புங்கவன் பூரணன் புத்தன் புராதனன்பூண்புனையாச், சங்கரன் சக்கரன் றாமரை யோ னெனத் தாவில் செங்கட், சிங்கவன் பேரணைத் தீர்த்தனைத் தீவினைத் தெவ்வெனும் பேர், மங்கவன் றோவெள்ளை வாள் கொண்ட வீரனை வாழ்த்துவதே" "சத்திய மேயொன்று சாற்றுகின்றேன் சமயங்களெல்லாங், கத்தியஞ் ஞானங் கவல்கின்ற தேகடைச் சாரமெய்து,

முத்தியு மேக முதல்வனு மேக முதல்வனு முற்பத்தியு நாசமு மொன்று மில்லாத பரஞ்சுடரே" (அவிரோதி ஆழ்வார்) - இவ்வான்றோர் மொழிகளை நோக்குக.

உலகில் தோன்றிய சமய குரவர் மொழிகளில் புறச்சொல் வேற்றுமையில்லை என்பது எனது ஆராய்ச்சியில் யான் பெற்ற அடைவு. எனது நெறிசமரச சன்மார்க்கம். மகன் எச்சமயத்திலிறங்கினும், அஃது அவனைச் சமரச சன்மார்க்கக் கரையேற்றுதல் உறுதி.

சமரச சன்மார்க்க அகத்தினின்றும் புறமாகப் பரிணமித்த உறுப்புக்களே உலகில் பல சமயங்களாக நிலவுகின்றன. அவைகளில் ஏதாவதொன்றைப் பற்றினால், அது சமரச சன்மார்க்கக்கரை சேர்க்கும். இஃது ஆன்ம ஒழுக்க முறை.

சிலர் இவ்வொழுக்க உலகம் புகாது. சரித்திர உலகம் புகுந்து புறக்கூறுபாடுகளை ஆராய்வர். இவ்வா ராய்ச்சியும் சமரச சன்மார்க்கப் பயிற்சிக்கு (ஒருபோது) படியாக நின்று துணை செய்வதாகும்.

இவ்விரண்டில் முன்னையதற்கு அணிந்துரை வேண்டுவதில்லை. ஆகவே, மற்றைய உலகில் நின்றே, திருவள்ளுவரைச் சமயவாதிகள் எவ்வெப்போது எவ்வெவ்வாறு கொண்டனர் என்பதை ஆராய்தல் வேண்டும்.

பெரும் பெரும் மாறுதல்களை எப்பொழுதும் இயற்கையன்னை ஒரு பெரியார் வாயிலாகவே நிகழ்த்துவது வழக்கம். அந்நிகழ்ச்சி யுறுதற்கு நிலைக் களனாக நின்று பணியாற்றக் காலத்துக்குரிய பெரியாரும் (அவ்வப்போது) தோன்றுவது வழக்கம். அவ்வேளையில்

ஒரு பெரியார் தோன்றியிருந்தார். அவர் வாயிலாகஇயற்கையன்னையின் திருவருள் வெளிப் பட்டது, அவர் உள்ளத்தில் கொல்லா அறத்துக்கு இன்றியமையாத உயிர் மணி "அருள்" என்னுந் தெய்வந் கோயில் கொண்டது. அவ்வொருவர் விருஷப தேவர் என்பார். இவருக்கு ஜிநன் என்றொரு சிறப்புப் பெயருண்டு. பொறிபுலச் சேட்டைகளை வென்று வினையின் நீங்கி விளங்கிய அறிவன் எவனோ அவனே ஜிநன் ஆவன். ஆதிபகவன், அருகர் முதலிய வேறு பெயர்களும் ஜிநனுக்குண்டு. விரிவு ஜைந நூல்களிற் காண்க.

விருஷப தேவர் காலஞ் சரித்திர காலங் கடந்தது. இவர் நாள், காலக்கணக்கில் அகப்படாமையால், தொன்மை நோக்கி, இவர் காலத்தை "அநாதி" என்று கூறுப. மற்ற மற்ற சமயகுரவர் அனைவரும் இவருக்குப் பின்னர்த் தோன்றியவரே. இதனை விஷ்ணு புராணம் முதலிய நூல்களிலுங் காணலாம்.

உலகம் அருளென்னுந் தெய்வ ஒளியிழந்து, கொலை யென்னும் அரக்க இருளில் வீழ்ந்து, இடர் படுவரை விருஷப தேவர் கண்டு, மனமிரங்கிக் குழைந்து குழைந்துருகி, மன்பதையின் உள்ளத்தில் தெய்வ விளக் கேற்றினார். அன்று தொட்டு மன்பதைக்கண் அருள்ஒளி படரலாயிற்று, அவ்வொளியால் மக்கள் உலகமும் மலர்ந்தது. விருஷப தேவர் கண்ட அருள் நெறிக்கு அற்றை நாளில் ஜைநம் என்னும் பெயர் வழங்கப்பட்டது. ஜைநம் என்றால் என்ன?

மக்கள் துன்பத்தினின்றும் விடுதலையடைய முயல்கிறார்கள். ஆனால் வினைக்கட்டுள்ளவரை அம்முயற்சி பயனளிப்பதில்லை. வினைக்கேட்டிற்கு மெய்யறிவு விளங்குதல் வேண்டும். அவ்விளங்கிய

அறிவினூடே 'அருள் விளக்கு' ஒளி செய்யும். அவ்வருள் விளக்கத்துக்கு ஒழுக்கந் தேவை. ஒழுக்கத்துக்குப் பொருந்திய உணவு, பொறி புலன்களின் காப்பு முதலியன தேவை. (பொறி புலன்களின் காப்பென்பது, பொறிபுலன்களைக் கெடுத்துக் கொள்வதன்று; அவைகளைத் தீயவழியிற் செலுத்தாது, செந்நெறியிற் செலுத்துவதாகும்.) அருள் விளக்கத்தின் பொருட்டு, ஒழுக்கத்தை யோம்பிப் பொறி புலன்களைக் குறும்பு களினின்றுங் காக்கும் பயிற்சித் துறைகள் அந்நாளிற் கோலப்பட்டன. அத்துறைகளில் நண்ணி, 'வினையின் நீங்கி விளங்கிய அறிவ'னாகிய ஜிநனை வழிபடுவோர் ஜைநர் என்று அழைக்கப்பட்டார். இவரது கொள்கைக்கு ஜைநம் என்று பெயர். பொருந்திய உணவு கொண்டு, பொறிபுலச் சேட்டைகளை யொடுக்கி, வினையினின்றும் நீங்க, அருளொழுக்கங் காக்கும் ஒரு நிலை ஜைந மென்பது. சமணம், ஆருகதம் முதலிய பெயர்களாலும் ஜைநம் வழங்கப்படுகிறது.

அருணெறிக்குரியார் இன்னார் என்னுங் கட்டுப் பாடு அற்றை நாளில் இல்லை. அருணெறி எல்லார்க்கும் உரிய ஒன்று. எவரும் அந்நெறியிற்றலைப் படலாம். இப்போது நெறியே பண்டை நாளில் ஜைநம் என்னும் பெயர் பெற்றிருந்தது. இச்சமயம் மன்பதைக்குரிய பொது நெறியா அல்லது குறிப்பிட்ட சிலர்க்கு மட்டும் உரிய குறுகிய நெறியா என்பது உன்னற்பாலது.

பொது நெறியாகத் தோன்றிய ஜைநம், பிற்றை நாளில் கட்டுப்பட்ட சமயமாகச் சிலரால் கொள்ளப் பட்டது. ஜைநன் பிள்ளை ஜைநனாகக் கருதப்படும் ஒரு நிலை இந்நாளில் உருக் கொண்டது.

விருஷபதேவர் அருளொழுக்கத்தை ஓரினத்தார்க் கென்றாதல், ஒரு நாட்டார்க்கென்றாதல், ஒரு நிறத்தார்க் கென்றாதல், ஒரு மொழியார்க் கென்றாதல் அறிவுறுத் தினாரில்லை. அவர் உலகிற்கே பொதுவாக அருளொழுக் கத்தை அறிவுறுத்தினார். அவ்வருளொழுக்கமே சமயம் சமயம் என்பது. (சமயமாவது, விலங்குணர்வினின்றும், மக்களைப் பிரிக்க நல்ல அருணெறி யென்க.)

திருவள்ளுவர், விருஷபதேவர் வழிநின்று அரு ணெறி யோம்பினார். ஆனால் அவர் வெளிப் படையாக ஜைநம் என்னுஞ் சொல்லை ஆண்டாரில்லை. அச்சொல் அவர் நூலில் யாண்டுங் காணோம். இதற்குக் காரணம் என்னவாயிருக்கலாம்? அருக தேவர்க்கும் திருவள்ளு வர்க்கும் இடையில் (பன்னூறு ஆண்டுகளில்) உற்ற மாறுதல்களாயிருக்கலாம்.

அருக தேவர்க்குப் பின்னே, அவர் கண்டு அருணெறியில் நின்ற மக்களுக்குள் சில பிரிவுகள் தோன்றின. அவைகள் திருவள்ளுவருக்கு முன்னர்ச் சிலவும், பின்னர்ச் சிலவுமாகத் தோன்றின. அரு ணெறியை ஒல்லும் வகை முற்றுங் கொண்டோர் ஒரு தனிக் கூட்டத்தவராகவும், அதை ஒரோ வழிக்கொண் டோர் வெவ்வேறு கூட்டத்தவராகவும், மற்றவர் மற்ற மற்ற கூட்டத்தவராகவும் பிரிந்தனர் இப்பிரிவின் மாறுதல் சில கட்டுக்குள் கடவின. அக்கட்டுப்பட்ட ஜைநத்தி னிடை நாளடைவில் பௌராணிகம் புகுந்தது; கண்மூடி வழக்கங்கள் நுழைந்தன; சமயப் போர், மறுப்பு, பிரிவு முதலிய கறைகள் படிந்தன; இயற்கைக்கு மாறுபட்ட பலதிறச் செயற்கை முறைகள் அரசு பெற்றன என்று சுருங்கச் சொல்லலாம்.

பின்னை அருணெறி சைவம் என்னும் பெயர் பெற்றது. நாளடைவில் அச்சைவமுங் கட்டுப்பாடு என்னும் பேயால் பீடிக்கப்பட்டது. பின்னே பின்னே பிரிவுக்குள் பிரிவுகள் கிளைத்தன. இப்பிரிவுகள், சிதறுண்ட தீவுகளைப்போல் இந்நாளில் காட்சியளிக் கின்றன. ஆயினும் அவைகளின் அடியில் அருணெறி ஆணிவேர் போல் நின்று கொண்டிருக்கிறது. அதுவே சமயங்களின் உயிர் நாடியாகும்.

உலகில் அவ்வப்போது, தோன்றிய சமயகுரவர் அனைவரும். கால தேசவர்த்தமானத்திற்கேற்ப, அருணெறி யென்னும் பொது நெறியை ஓம்பவே போந்தனர். கால நிலைக்கேற்றவாறு சிலர் ஒழுக்கத்தை வலியுறுத் தினர்; மற்றுஞ் சிலர் உயிருண்மையை வலியுறுத்தினர்; இன்னுஞ் சிலர் கடவுளுண்மையை வலியுறுத்தவே, சமயகுரவரென்போர் போதருவது வழக்கம். அவர் வழி வழி வருவோர் சிற்சில காரண களை முன்னிட்டு, உயிர் நாடியை மறந்து, கட்டுப்பாடு களால் பிரிவுகளை உண்டு பண்ணி. ஒருவரோடொருவர் பிணங்கித் தொல்லை விளைக்கிறார். இவ்விடைப் பிரிவுகள் செந்நெறியின் புறத்தளவில் நிற்குந் தன்மையனவே யன்றி, அதன் அகத்தில் நுழைந்து உயிர்நாடியைக் கல்லிக் கொல்லுந்த தன்மையனவல்ல.

திருவள்ளுவர், காலதேச வர்த்தமான நிலை நோக்கியும், உலக நலன் கருதியும் போருக்குரிய குறியீடு களை விலக்கிச்சமயத்தின் அகப்பொருளாம் அருளமிழ்தந் தேங்கத் தமிழ்மறை யருளினார். உயிர் கட்குச் செந்தண்மை பூண்டொழுகுஞ் செம்மையறம் -

ஜீவகாருண்யம் - உலகில் நிலவவெண்டுமென்பது திருவள்ளுவர் வேட்கை, அவ்வேட்கை திருக்குறளாகப் பரிணமித்தது. ஆகவே, திருவள்ளுவர் நெறியை என்னென்று கூறுவது? திருவள்ளுவர் நெறியை விருஷப தேவர் வழிப்பிறந்த ஜைநம் அல்லது அருணெறியென்று கொள்ளலாம். விருஷபதேவர் அறிவுறுத்திய கொல்லா அறமும் பிறவும் திருக்குறளில் வெள்ளிடை மலையென விளங்குதலும், திருவள்ளுவர் கொல்லாமையை வலியுறுத்தியைப் போல அவர் காலத்திருந்த மற்றப் புலவர் பலர் வலியுறுத்தா தொழிந்தமையும் ஈண்டுப் பெரிதும் உன்னற் பாலன.

திருவள்ளுவர் காலத்தில் பொது நெறிக்கண் சில கவடு கோடுகள் விட்டிருந்தன. அவர் நாளில் சைவம் வைணவம் முதலிய சமயங்களிருந்தன. அந்நாளில் ஜைநம் அறவோரால் ஒருவாறாகவும், மற்றவரால் மற்ற மற்ற வாறாளவுங் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும், சமயப்புற நோக்குடையாரிடைச் சிறுமைப் பிணக்குகளும் நிகழ்ந்திருக்கலாம். கொல்லாமை யென்னும் அருணெறி யால் பிணக்குகளைப் போக்கத் திருவள்ளுவர் முயன்றிருப்பர்.

அந்நாளில் கொல்லா அறம் ஜைநருடையது என்னும் ஒருவழக்கு மக்களிடைப் பரவியிருந்தமையான், அவ்வறத்தை அறிவுறுத்திய திருவள்ளுவரை, அந்நாளைய சைவ வைணர் முதலியயோரும் பெரும்பான்மையோர், ஏற்றுப் போற்ற உளங் கொண்டாரென்று சொல்லுதற்கு இடனில்லை. சைவ வைணவம் முதலியனவும் பொது நெறியின் பாற்பட்டனவே என்றுகொண்ட மிக மிகச்சிலரே திருவள்ளுவரை ஏற்றுப்போற்றியிருப்பர்.

இதனை வலியுறுத்தத் தொன்று தொட்டு வழக்கில் வந்து கொண்டிருக்கும் இரண்டோர் உலகியல் முறைகளைமட்டும் ஈண்டுப்பொறிக்க விரும்புகிறேன். பிற விரியுமாகலின் என்க.

திருவள்ளுவர், நாயன்மார் ஆழ்வார்கட்கு முற்பட்டவர். அவர் அருளிய திருக்குறளோ மன்பதைக்குரிய அருள் மறை; பொது மறை. அத்தகைய ஒருவர் திருவுருவம் சைவ வைணவக் கோயில்களில் ஏன் அமைக்கப்படுவதில்லை? சைவ வைணவ நூல்களில் அடியவர் வாழ்த்தில் அவர் ஏன் சேர்க்கப்படவில்லை? அவர் நூல் பூசைக்காலங்களில் ஏன் ஓதப்படுவதில்லை. அன்பர்கள் உன்னுவார்களாக. முன்னாளில் திருவள்ளுவர் ஜைநர் என்றுகொள்ளப்பட்ட வழக்கே, அவரைச் சைவவைணவக் கோயில்களும், நூல்களும் சம்பிரதாயமும் புறக்கணிக்கக் காரணமாக நின்றிருக்க லாம் என்று எவரும் ஊகிக்கக் கூடும். பின்னே போந்த சைவ வைணவ அறிஞர்கள், திருவள்ளுவர் அறவுறுத்திய அருணெறியின் பெற்றியுணர்ந்து, அவரை ஏற்றுப் போற்றுவதோடு, அவரைத் தம்மவர் தம்மவர் என்று கொள்ளச் சொற்போரும் நிகழ்த்தலானார்கள்.

திருவள்ளுவர் அறிவுறுத்தியது பொதுநெறி அருணெறி ஜீவகாருண்ய ஒழுக்கம். அந்நெறியை எவர் பெயரிட்டழைப்பினும் அழைக்க. திருவள்ளுவரைச் சைவரெனில், வைணவரெனில், பிறரெனில், அவரது சைவமும் வைணவமும் பிறவும் அருகதேவர் கண்ட அருணெறியின் பாற்பட்டனவென்க. அருகர் குறிப்பிட்ட ஒரு கூட்டத்தார்க்கு மட்டும் உரியரல்லர். அவர் உலகிற்கே உரியர். அருணெறி யோம்பப் போந்த ஆசிரியர்

பலரும் உலகிற்குரியராவர். அவரைச் சமயவாதிகள் தங்கள் தங்களுக்கே உரியர் என்று கருதிக் கொள்கிறார்கள். அச்சுட்டறிவு பொது உணர்விற்கே கேடு சூழ்கிறது. சுட்டி இடுக்கில் நுழைதல் கூடாது. இடுக்கு இடுக்கணுறுத்தல் இயல்பு. பரந்த பொது வெளியில் உலவ முயல்வதே அறிவுடைமை. அவ்வறிவு சிறப்பளிக்கும்.

திருவள்ளுவர் காலத்திருந்த சமயக் கணக்கர் பலர், திருவள்ளுவரைப் பற்றிக் கொண்ட மனோநிலை மேலே குறிக்கப்பட்டது. ஜைநர்கள் மட்டுந் திருவள்ளுவரை அன்றும் ஏற்றுப் போற்றினார்கள்; இன்றும் ஏற்றுப் போற்றுகிறார்கள். ஜைநர்களிடத்தும், அவர்கள் நூல்களிடத்தும் நெருங்கிப் பழகுவோர்க்கு இவ்வுண்மை விளங்கும் (குந்தகுந்தாச்சாரியார், ஏலாச்சாரியார் முதலிய பெயர்களால் திருவள்ளுவரை ஜைநர்கள் போற்றிவரல் கண்கூடு.)

சமண முனிவரர்பால், முன்னொரு காலத்தில், சில மரபுகள் நிலவியிருந்தன. அவைகளுள் ஒன்று, அவர்கள் தங்கள் நூல்களில் முன்னோர் மொழி பொருளை எடுத்துக்காட்ட நேரும்போதெல்லாம், அம்மொழிப்பொருள் பிற சமயத்தவர்களுடையதாயின், அதன் ஆக்கியோன் பெயரைப்பொறித்தலும், அம் மொழிப் பொருள் தஞ்சமயத்தவருடைய தாயின் அதனை"எம்மோத்து" என்று குறித்தலுமாகும். அந்நாளில் எழுந்த சமண நூல்களுள், திருக்குறளும் அடிகண்மார்களால் தங்கள் ஓத்து என்றே கொள்ளப்பட்டது. விரிவுநீலகேசியுரை முதலிய ஜைந நூல்களிற் காண்க.

ஈண்டொன்றைச் சிறப்பாகக் குறிக்க விரும்புகிறேன். "பிரபோத சந்திரோதயம்" என்றொரு வேதாந்த நாடக நூலுண்டு. அந் நூற்கண் பல சமயக்கூத்தர்கள் நடிக்கிறார்கள். அவர்கள் நாடக மேடை ஏறும்போது தங்கள் தங்கள் சமயமந்திரங்களை யோதிச் செல்கிறார்கள். ஜைநர் எதை ஓதிச்செல்வதாக அந்நூல் கூறுகிறது. வடமொழிப் "பிரபோதயம்" "அஹிம்ஸா என்பதையும் தென்மொழிச் ''சந்திரோதயம்'' "அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று" என்பதையும் ஜைநர் சார்பில் சாற்றியிருக்கின்றன. "பிரபோத சந்திரோதயம்" தமிழில் பெயர்த்தெழுதப் பெற்ற நாளில் திருக்குறள் ஜைந நூல் என்னும் ஆட்சி, நாட்டிடை நிலவியிருந்தது போலும்!

திருவள்ளுவர் திருக்குறளில், கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய இவைகள் பாயிரமாக நின்று அழகு செய்கின்றன. இவைகளிற் போந்துள்ள பொருள்கள் மக்கள் அனைவராலும் ஏற்கத் தக்கன என்பதில் ஐயமில்லை. ஆயினும் இவைகளை நூல் மரபில் வழி வழிக் கொண்டு வருவோர் எவர் என்பதை ஆராய்தல் வேண்டும். அறத்தைப் பாயிரத்தில் அமைக்கும் மரபாட்சி எவர் வயத்திலிருக்கிறது என்பதையுங் கூர்ந்து நோக்கல் வேண்டும். இன்னோரன்ன பிறவற்றைச் சரித்திரக் கண் கொண்டு பார்த்தால், இவைகள் ஜைந மரபாட்சியி லிருத்தல் இனிது விளங்கும்.

திருவள்ளுவரருளிய திருக்குறளிலுள்ள கடவுள் வாழ்த்தைச் சிறப்பாகத் தங்கள் வாதத்துக்குப் பொருளாக் கொள்வது சமய வாதிகள் வழக்கம். முதற்றிருக்குறளில் கோயில் கொண்டுள்ள "ஆதிபகவனை" ஆராய்ச்சிக்

காரர்கள் படுத்தும் பாட்டை என்னென்று கூறுவேன்? அப்பாட்டை அவ்வாதி பகவனே அறிவன். எல்லாருந் தம் பொருள் தம் பொருள் என்று கொள்ளுமாறு "ஆதிபகவ" னுக்குத் தமிழ்க் கோயில் அமைத்த பெருமை திருவள்ளுவருடைய தாகும்.

ஆதிபகவனை அவரவர் தத்தங் கடவுளாகக் கொள்கிறார். இக்கொள்கையால் எவ்விதக் கேடும் விளைவதில்லை. இக்கொள்கை வழி நின்றொழுகினால் நலனே விளையும். ஒழுக்கத்தில் கருத்திருத்தாது "ஆதிபகவன்" 'உன் தெய்வம்' 'என் தெய்வம்' என்ற உறுத்தலில் கருத்திருத்துவது கேட்டையே விளைக்கும். திருவள்ளுவர் உலகை நோக்கியே "ஆதிபகவன்" என்றார். "முதற்றே யுலகு" என்று பிற்றைத் தொடர்ந்து பெய்த குறிப்பால் இதையுணரலாம்.

திருவள்ளுவர் எவரை உளங்கொண்டு "ஆதிபகவன்" என்று அருளினாரென்பது அவருக்கே தெரியும். பின் வந்தார் ஆராய்ச்சிக்குக் கருவியாக நிற்பது அவர் அருளிய நூலேயாகும். அக் கருவிகொண்டு ஆராய்ச்சி யுலகில் நுழைந்து, புலவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடுகிறார்கள். இக்கருத்துக்களை ஆராய்ச்சி யுலகிற்குப் பெரு விருந்தாகக் கொள்வதே சிறப்பு. அவைகளை முடிந்த முடிபுகளாக் கொண்டு போர்த்துறை நண்ணுவது மடமை; கயமை.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தில் ஓரிடத்தில் ஒரு திறவு வைத்துள்ளார். அதற்கு அரணாக நூலினுள்பல குறிப்புக்களுண்டு. "பொறி வாயில் ஐந்தவித்தான்" என்பது அத்திறவு கொண்டு கடவுள் வாழ்த்தைத் திறந்து பார்த்தல் வேண்டும்.

"பொறி வாயில் ஐந்தவித்தான்" என்பது ஒருபோது பொறி வாயில் ஐந்துடையானைக்குறித்தல் வெள்ளிடை மலை. முதலில் பொறி வாயில் ஐந்துடையனாயிருந்து, பின்னே அவ்வைந்தவித்த ஒருவனைத் திருவள்ளுவர் "ஆதி பகவன்" என்று போற்றியிருக்கிறாரென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குவதொன்று. பொறி வாயில் ஐந்துடையனாய்ப் பின்னே அவ் வைந்தவித்த ஒருவனை ஆதிபகவனாகப் போற்றுவது எச்சமயம்?

எங்கும் நீக்கமற நிறைந்து அசைவற்ற ஒன்றை ஜைநம் மறுக்கின்றதில்லை. அவ்வசைவற்ற ஒன்று ஐந்தொழில் புரியா தென்பது ஜைந சித்தாந்தம். "உற்பத்தியு நாசமும் ஒன்றுமில்லாத பரஞ்சுடரே" என்பது ஜைநர் திருநூற்றந்தாதி. ஜைநம், வழிபாட்டிற்குப் பொறி வாயில் ஐந்தவித்துக்கடந்த நிலையை ஆதியில் பெற்ற விருஷபதேவரையே ஆதிபகவனென்று கொண்டிருக் கிறது.

முதற்றிருக்குறளைப் பற்றியும், பிறவற்றைப் பற்றியும் எழுந்த ஆராய்ச்சி மற்றவர்களை விடச் சைவப்புலவர்கள் நிகழ்த்திய ஆராய்ச்சியே அதிகம். அவர்கள் தடைவிடை களால் திருவள்ளுவரைச் சைவரென்றும், ஆதிபகவனைச் சிவன்என்றும் நிறுவிக் காட்டியுள்ளார்.

சைவரென்போர்க்கும் ஜைநரென்போர்க்கும் பிணக்கு உண்டு. ஆனால் சைவத்துக்கும் ஜைநத்துக்கும் மிகநெருங்கிய இணக்கமேஉண்டு. அவ்விணக்கத்தை நூற்றுக்குத் தொண்ணூற்றென்பதே முக்காலே அரைக்கால் வரைப்பொருத்திக் காட்டலாம்.

“எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு” என்று “சைவ சமய நெறி” கூறுகிறது. “எவ்வுயிர்க்கும் அன்பாயிருத்தல்” ஜைநத்தின் மூலதர்மம். இங்கே சைவம் ஜைநம் என்னும் வேற்றுமை சொல்லளவிலேயே நிற்கிறது. பொருளில் வேற்றுமை காணோம். “இஃது ஒழுக்க நிலை. இதன்கண் ஒற்றுமை காட்டல் பொருந்திய தொன்றாகாது. பொருளுண் மையில் இரண்டிற்கும் ஒற்றுமையுண்டா?” என்று சிலர் வினவலாம்.

பொருளுண்மையிலும் ஜைநத்துக்கும் சைவத்துக்கும் ஒற்றுமையுண்டு. உலகு உயிர் கடவுள் என்னும் முப்பொருளுண்மை இரண்டிற்கும் பொது. அவைகளின் இயல்களைப் பற்றிய கொள்கையிலும் இரண்டுக்கும் பெரிதும் ஒற்றுமை யுண்டு. கடவுளியலில் மட்டும் இரண்டு மிகச் சிறிய வேற்றுமையைப் புலப்படுத்துகின்றன. அச்சிறுமை சமரச சன்மார்க்கத் தாரை மயக்குறுத்தாது. ஆனால் அஃது ஆராய்ச்சி யுலகை மயக்குறுத்தியே தீரும்.

எங்கும் நிறைந்த அசைவற்ற ஒன்றை ஜைநமும் ஏற்கிறது; சைவமும் ஏற்கிறது. ஜைநம் அசைவற்ற ஒன்றற்கு ஐந்தொழில் கூறுவதில்லை. சைவம் பரம்பொருளுக்கு இருநிலை வகுத்து, ஒன்றற்குத் தொழிலின்மையும் மற்றதற்குத் தொழிலுண்மையுங் கூறுகிறது. அவ்விருநிலை சொரூபம் தடத்தம் என்பன. சொரூப சிவத்துக்கு ஒன்றுமில்லை. “சிவனரு வுருவுமல்லன் சித்தினோட சித்துமல்லன் - பவமுதற் றொழில்களொன்றும் பண்ணிடுவானுமல்லன்” (சைவ சாத்திரம்). தடத்த சிவத்துக்கு ஐந்தொழிலுண்டு.

தடத்த சிவத்தைப் 'பொறிவாயில் ஐந்துவித்த ஆதிபகவ'னாக கோடலாகாதோ வெனில், சைவ சாத்திர முறைப்படி கோடலாகா தென்க. பிறவியெடுத்தல், பொறி வாயில் ஐந்து பெறல். பின்னே அவைகளை அவித்தல் முதலியன பசு விலக்கண மெனச்சைவ சாத்திரஞ் சாற்றுகிறது. தடத்த சிவத்தையும் பசு வர்க்கத்தில் சைவ சாத்திரஞ் சேர்த்ததில்லை. ஆதலால் திருவள்ளுவர் வழுத்திய ஆதிபகவனைத் தடத்த சிவமாகக்கோடற்கு மிடமில்லை யென்க. கடவுளியலில் ஜைநமும் சைவமும் பிரியுமிடமிதுவாகும்.

சிவன் திருமால் முதலிய சொற்களை மட்டுங் கொண்டு சிலர் சமய முடிபுகளை வெளியிடுகிறார். வெறுஞ் சொற்களை மட்டுங்கொண்டு சமய முடிபுகளை வெளியிடுதல் இயலாது. இந்திய நாட்டிற்றோன்றிய பொது நெறியினின்றும் பிரிந்த சமயங்களிலெல்லாம் சிவன் திருமால் முதலிய பெயர்களிருத்தல் காணலாம். ஜைநர்களும் தங்கள் கடவுளாகிய விருஷப தேவரைச் சிவன் திருமால் முதலிய பெயர்களால் வழிபடுகிறார்கள். சைவ வைணவ நூல்களில் காணப்படுங் கடவுளின் ஆயிர நாமங்களைச் சமண நூல்களிலுங் காணலாம் "வந்தே ப்ரம்ஹாணமாத்யம் வ்ரஷபம் - அரிஹரம் த்ரம்பகம் விஷ்ணும் ஈசம்" (ஸ்ரீ புராணம்.)

திருக்குறட்கண் போந்துள்ள சில சொற்களையும், சில சொற்றொடர்களையும் எடுத்துக் காட்டிச் சிலர் திருவள்ளுவரை 'இச்சமயத்தார் அச்சமயத்தார்' என்று கூறுப. சிலர் ஜைந நூல்களை நேரே ஆராயாது. மற்றவர்கள் ஜைநத்தைப் பற்றி வரைந்துள்ள நூல்களைப் பயின்று, ஆராயச்சித்துறை நண்ணிக் கருத்தை

வெளியிடுகிறார். ஜைநம் கடவுளுண்மை மறுக்குஞ் சமயமென்றும், பௌத்த மதத்தினின்றும் ஜைநம் பிறந்ததென்றும், மஹாவீரர் காலத்திலேயே ஜைநம் தோன்றிற்றென்றுஞ் சிலர் எழுதிச் சென்றார். அவருள் மேல் நாட்டவருஞ் சிலருளர். அவர் கூற்றுக்கள் இப் பொழுது சரித்திரக்காரர்களால் மறுக்கப்பட்டு வரு கின்றன. அவரவர் தத்தமக்கு அவ்வப்போது கிடைத்த கருவிகளைக் கொண்டு சரித்திரஞ் செப்பஞ் செய்திருக் கலாம். அந்நூல்களைப் படிக்கலாம். ஆனால் அவை களையே வேதமொழியாக் கொண்டு இடர்ப்படலாகாது. ஒல்லும் வகை முயன்று மூல நூல்களைப் படித்து ஆராய்ச்சியிற் புகுவதே அறமாகும். ஆராய்ச்சி யாளர்க்குத் துரபிமானங் கூடாது. ஆராய்ச்சி யென்னும் பெயரால் இந்நாளிற் சிலர் விளைத்துவரூஉம் அநர்த்தங்கட்கோர் அளவில்லை!

ஆதிபகவனையொட்டி நமது நாட்டில் திரண்டுள்ள பொய் மூட்டைகள் பல; குப்பைமேடுகள் பல. அம்மூட்டைகளை அவிழ்க்கவோ, அக்குப்பை களைக் கிளறவோ நான் புகப்போவதில்லை. ஆனல் ஒன்றை மட்டுஞ் சிறிதாதல் கிளறாது செல்ல எனது மனமெழ வில்லை.

ஆதியென்னும் புலைச்சிக்கும், பகவன் என்னும் பார்ப்பானுக்கும் திருவள்ளுவர் பிறந்தாராம்! அந்நினைவுக் குறியாகத் தாய் தந்தையர் பெயரைக் கடவுள் வாழ்த்தில் முதலில் திருவள்ளுவர் குறிப்பிலுணர்த்தினாராம்! இப்பொய்க் கதையொன்று நாட்டில் உலவுகிறது. ஆதி, பகவன் என்னுஞ்

சொற்களைக் கொண்டு எழுங் கதைகளெல்லாம் வெறுங் கதையுலகிலேயே நின்று கொண்டிருக்கும். அவைகளைச் சரித்திரவுலகமாதல்,ஆராய்ச்சியுலகமாதல் ஏற்குங்கொல்!

திருக்குறளை முதன்முதல் அச்சிற் பொறித்து வெளியிட்டவர் ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானாவர். அவர் பதிப்பில் திருவள்ளுவர் வரலாற்றைக் காணோம். இப்பொழுது உலவும் போலிவ்ரலாறு, நாவலர் காலத்தில் உலவவில்லைபோலும்! நாவலர் பதிப்பில் திருவள்ளுவர் வரலாறின்மை கண்ட எவரோ ஒருவர் "கபிலர் அகவல்" என்றொரு நூல் யாத்துத் திருவள்ளுவர் வரலாற்றைச் ஆசெப்பஞ் செய்திருத்தல் வேண்டும். (அவர் திருத்தணிகை வீர சைவப்புலவருள் ஒருவர் என்று ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் சொல்ல யான் கேட்டிருக்கிறேன்.)

நமது நாட்டு ஆசிரியன்மார் தமது வரலாற்றைத் தாமே எழுதுவதில்லை. தம்மால் இயற்றப்படும் நூல்களிலுந் தம் பெயர் பொறித்தலாகாது என்னும் நியதியைப் பழைய அடிகண்மார் பூண்டிருந்தா ரென்றுஞ் சொல்லப்படுகிறது. எவ்வுயிரையுந் தம்முயிராக் கொண்டு வாழ்ந்த அன்னார் தம்மொழிகளையுந் தம்முடையன வாகக் கருதுவதில்லை போலும்! முனைப்பற்றுத் தமக்கென வாழாது, மற்றவர் பொருட்டு வாழ்வுநடத்திய பெரியோர்கள் தங்கள் வரலாற்றில் தாங்கள் கருத்துச் செலுத்துவதில்லை போலும்! அவர்கள் வரலாறுகள் பெரிதும் அவர்கள் பின்வந்தவர்களால் எழுதப்பட்டன. அவ்வரலாறுகளைக் கொண்டு முதலாசிரியர்களையே சிலர் தாக்குகிறார். இஃது அறிவுடைமையாகாது. எடுத்துக் காட்டாக ஈண்டொன்று சொல்கிறேன்.

திருஞான சம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றினாரென்பதற்குப் போதிய சான்றில்லை. அவர் பின் தோன்றிய சிலரால் எழுதப்பெற்ற புராணங்களின் கூற்றுக்களைக் கொண்டு, அவர்மீது பழி பாவங்களைச் சுமத்துகிறார் சிலர். இத்தகைய மடமை நாட்டை விடுத்து என்று அகலுமோ அறிகிலேன். திருஞான சம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றினார் என்பதற்குச் சமண நூல்களில் சான்று ஒன்றுமில்லை என்பதும் ஈண்டுக் கருதற்பாற்று.

திருஞான சம்பந்தர் சமண சமயத்தையே அழிக்கப் போந்தாரென்றுஞ் சிலர் கூறுப. இது, நிகழ்ச்சிகளைச் சரித்திர முறையில் ஆராயாதார் கூற்றாக முடியும். திருஞானசம்பந்தர் ஜைந தர்மத்தை அழிக்க முயன்றாரென்பதற்கு அவரருளிய தேவாரத்தில் சான்றேயில்லை. அவர் காலத்தில் விருஷபதேவர் அறிவுறுத்திய அறவொழுக்கத்துக்கு மாறுபட்ட வினைகளை நிகழ்த்திய மறவோர் திறங்களை (கொள்கைகளை) அவர் தாக்கியிருத்தல் உண்மை. "சமண் சாக்கியம் ஆக்கிய வாறே" என்னுந் திருமொழியில் 'சமண சமயமும் ஆண்டவனால் ஆக்கப்பட்டது' என்று உணர்த்திய ஞானசம்பந்தரா ஜைந தர்மத்தை அழிக்கமுயன்றிருப்பர்? நன்று! நன்று! இது குறித்துத் "தமிழ் நூல்களில் பௌத்தம்" என்னும் நூலிலும், அதன் முன்னுரையிலும் எனது கருத்தை வெளியிட்டிருக்கிறேன்.

"இன்னவுரு இன்ன நிறம் என்றறிவதேலரிது நீதி பலவும் தன்னவுருவாமெனமிகுத்தவன் நீதியொடுதான

மார்விடம்” இது திருஞான சம்பந்தர் திருவாக்குகளுள் ஒன்று. “நீதி பலவும் தன்னவுருவாமென மிகுத்ததவன்” என்னுங் கருத்து, ஜைந தர்மத்தை அரண் செய்வதா அல்லது முரண் செய்வதா என்பது உன்னற்பாலது. இவ்வுரை வழங்கிய ஒருவரா ஜைந தர்மத்தை யழிக்க எண்ணியிருப்பர்?

திருக்குறள் கடவுள் வாழ்த்தைப் பீடிகையாக் கொண்டு, இந்நூலாசிரியர் அரியதோர் ஆராய்ச்சி நிகழ்த்தித் திருவள்ளுவர் ஜைநர் என்று நிறுவிக் காட்டியுள்ளார். இம்முடிவைத் திருவள்ளுவர் நெறி அருணெறி அல்லது பொது நெறிக்குரிய விருஷபதேவர் ஜைநம் என்றும், பிற்காலத்தில் பல திறக்கட்டுக்களால் கட்டுண்டு குறுகிற ஜைநம் அன்றென்றும் பாகுபடுத்தி ஏற்க என் மனம் ஒருப்படுகிறது.

24.7.1930 திரு.வி.கலியாணசுந்தரன்.

******

# கவிராஜ பண்டிதர்

## திருக்குறள் உரையாசிரியர்

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

*(இதன் பொருள்) எழுத்துக்களுக்கெல்லாம் அகரவெழுத்து முதலாய் இருப்பதுபோல், உலகத்துக் கெல்லாம் சருவக்கியனான சுவாமியே முதல்; (என்றவாறு).*

*(விளக்கவுரை) உலகு என்பது மனிதசமூகத்தைக் குறிக்கும்.*

*பகவன் என்ற சொல் வினையின் நீங்கி விளங்கிய அறிவனாகிய முற்றும் உணர்ந்த முனைவனைக் குறிக்கும். அவன் வடமொழியில் சர்வக்ஞன் எனப்படுவான். ஜைன சமயத்தில் அவருக்குத் தீர்த்தங்கரர் என்று பெயர். விருஷபதேவர் முதல் வர்த்தமானர் ஈறாகத் தீர்த்தங்கரர்கள் இருபத்துநால்வர். இவர்களுள் முதல் வராகத் தோன்றிய விருஷபதேவர் ஆதி பகவனாவார்.*

*ஜைன ஆகமத்தின்படி முன்பு இப்பூமி போகபூமியா யிருந்தது. போகபூமியில் வாழ்ந்த மக்கள் உழைப்பின்றித் தாம் வேண்டியவற்றை யெல்லாம் கல்பதருமூலம் பெற்று இன்புற்று வாழ்ந்து வந்தனர். திடீரென்று போகபூமியின் நிலைமை மாறிற்று. கல்பதருக்கள் மறைந்தன. மக்கள் விரும்பியவற்றைப் பெறமுடியாது திகைத்தனர். உண்ணுவதற்கும் உணவின்றிப் பசியால் வருந்தியவர்*

விருஷபசுவாமியை அடைந்து, தம்முடைய கஷ்டத்தை முறையிட்டனர்.

சுவாமி அவர்கள் அஞ்சன்மின் என்று ஆறுதல் கூறி உணவு பெறும் வழியைக் காட்டினார். நிலத்தைப் பண்படுத்தி உழுது வித்திட்டு விளைந்த பொருளைச் சேகரித்து வைத்துக் கொண்டு வாழும் முறையைக் கற்பித்தார்; இவ்வாறு உழவுத்தொழிலை முதன்முதல் கற்பித்து அத் தொழிலுக்குத் தக்க மக்களை உழவர்களாக வேளாளரை வகுத்தார்; இவ்வாறு கண்ட உணவுப் பொருள்களை இல்லாத விடங்களுக்குக் கொண்டு சேர்த்து விலைக்கு விற்று உதவுமாறு வாணிபத் தொழிலை நியமித்து வணிகர்களை வகுத்தார்; இவ்விருதிறத்தாரும் தம் தொழிலை இடையூறின்றிச் செய்து வருமாறு அவர்களைக் காத்துவரும் பொருட்டு வாளை யேந்துந் தொழிலைக் கற்பித்து வலிமையுள்ள படையாளர்களை வகுத்தார்; இவ்வாறு ஜனசமூகத்திற்குப் பொருளாதார வகைகளை நியமித்த பிறகு மக்களின் அறிவு வளர்ச்சிக்காகக் கணிகளை நியமித்து எழுத்து, கல்வி, சிற்பம் ஆகிய மூன்றைப் பாடம் கற்பித்தார். சமூக வளர்ச்சிக்கு முக்கிய காரணமான இல்வாழ்க்கையைத் தாமே மேற்கொண்டு, தக்க மனையாளை மணம்புரிந்து மக்கட்பேறு பெற்று, சமூகம் நலியாது பெருகுமாறு மற்ற மக்களுக்கு இல்லற வாழ்க்கையின் இயல்பைத் தெரிவித்தார்.

இவ்வாறு சில காலம் சென்றபின், இராஜ்ய பாரத்தைத் தம் புதல்வனாகிய பரதேஸ்வரனுக்கு ஒப்படைத்துத் துறவுபூண்டார்; இராஜ சின்னங்களாகிய ஆபரணங்களையும் ஆடைகளையும் கழித்தெறிந்தார்; தபோவேடம் பூண்டு பலகாலம் தவமியற்றிக்,

*கர்மங்களைக் கெடுத்து கேவலஞானமடைந்தார்; கேவல ஞானத்தினால் தாம் கண்ட உண்மையை மக்களுக்குப் போதித்தார்.*

*இவ்வாறு மக்கள் நன்மைக்காக உழவுத்தொழில், வாணிபம், வாளேந்துந் தொழில், எழுத்து, சிற்பம், கல்வி என்று அறுதொழில்களையும் வகுத்து, இல்லற துறவற நெறிகளையும் விளக்கி அவரே சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் கலைவளர்ச்சிக்கும் தர்மநெறிக்கும் காரணமாயிருந்தபடியால் "ஆதி பகவன் முதற்றே உலகு" என்றார். இவ்விஷயங்களை விரிவாய் மகாபுராணம், ஸ்ரீபுராணம் போன்ற நூல்களில் காணலாம்.*

*இவ்விடத்தில் சயாதரம் என்ற நிகண்டில் தெய்வப் பெயரியல் எனும் முதல் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள ஜினேஸ்வரரைக் குறிக்கும் பெயர்களைக் கொண்ட அடியிற்கண்ட செய்யுள் கவனிக்கத்தக்கது.*

"கோதில் அருகன் திகம்பரன் எண்குணன் முக்குடையோன்
ஆதி பகவன் அசோகுஅமர்ந் தோன்அற வாழியண்ணல்
சோதி முனைவன் ஜினேந்திரன் பொன்னெயில் நாதன்சுத்தன்
போதில் நடந்தோன் அதிசயன் சார்ந்தநல் புங்கவனே"

*இந் நிகண்டை இயற்றியவர் ஒரு பிராமணக் கவிஞராவர்.*

"வரைவொடு தொழிலே வித்தை வாணிகம் உழவே சிற்பம்
உரைசெயும் போக பூமி ஒழிவினில் ஆதி காலம்

**விரைசெறி பிண்டி வேந்தன் விதித்தலின் அஃதே யம்ம**
**கருமபூ மியென் னும்பேர் கண்டதொன்றுண்டு நூலின்"**

என்னுஞ் சூடாமணி நிகண்டுச் (12 : 64) செய்யுளையும் காண்க. ஆதிபகவனை "ஆதிநாள் அறக்கதிர்ஆழி தாங்கிய, சோதியான்" (சூளா, மந்திர 147) என்றும் "ஆதிக் காலத் தந்தணன்" (சீவகசிந் 366) என்றும், "ஆதி வேதத்து நாதன் புரு" (மேரு 187) என்றும், "ஆதிபகவன் சோக வசலன்" (அருகசரண அகவல்' திருப்பாமாலை) என்றும் நூல்கள் கூறுகின்றன.

இன்னும், "ஆத்யே பரோக்ஷம்" என்னுந் "தத்வார்த்த சூத்திரம்" 11ஆம் சூத்திரத்திற்கு உரை எழுதுகையில் ஸ்ரீ அகளங்கதேவர், "ஆதிசப்தம் அநேக பொருள்களுடைய தென்றும், சிலவிடங்களில் முதல் என்னும் பொருள் செய்யப்படுகின்றதென்றும் கூறி, அதற்கு உதாரணமாக "அகாராதயோ வர்ணா: ரிஷபாதயஸ்தீர்தகரா இதி" என்று எழுதுகின்றார். இதற்கு "எழுத்துக்கள் அகரத்தை முதலாக உடையன; தீர்த்தங்கரர்கள் ரிஷபதேவரை முதலாக உடையவர்" என்பது பொருள். திருக்குறளின் முதற் செய்யுளின் கருத்தையே ஸ்ரீ அகளங்கதேவர் வட மொழியில் ஆதி சப்தத்திற்கு உதாரணமாகக் காட்டி யுள்ளது கவனிக்கத்தக்கது.

*****

**1** **அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

## குறளாசிரியரும் ஆதிபகவனும்

**வித்யாபூஷண் பண்டிட்**
மல்லிநாத் ஜெயின் சாஸ்திரியார்
**நியாயதீர்த்தா, பிரவிண்.**

*ஒவ்வொரு நூலாசிரியரும் தாம் படைக்கும் நூலைத் தொடங்கும்போது தாம் வழிபடும் கடவுளரையே வணங்கி வாழ்த்தித் தம் நூல் இடையூறின்றி நிறைவுபெறத் துதிக்கின்றனர். இது மரபு.*

*இக்கருத்தின் அடிப்படையிலேயே குறளாசிரியர் குந்த குந்தரும் தாம் வழிபடும் ஆதிபகவனை (விருஷப தேவரை) குறள் நூலின் பாயிரத்தில் வாழ்த்தி வணங்கி நூலைத் தொடங்கியுள்ளார்.*

*இக்கருத்து எவ்வளவு பொருத்தமாக விளங்குகின்றது என்பதை மதக்காழ்ப்பின்றி நடுநிலை நோக்கோடு நோக்கும் அறிஞர்கள் மறுக்காமல் ஏற்பர்.*

*ஆனால் தற்போது குறளாசிரியர் சமணரே, அவர் வழிபடும் ஆதிபகவன் விருஷபதேவரே என அழுத்தந் திருத்தமாகக் கூறும் பேரறிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திருமிகு திரு.வி.க, ஸ்ரீநிவாசாசாரியார், ஆறுமுகஞ் சேர்வை, வேங்கடராஜுலு ரெட்டியார், ஐராவதம் மகாதேவன்*

பேரா Dr. க.ப. அறவாணன், கொற்றன்காரி முதலான ஆய்வறிஞர்களாவர். இப்பெருமக்கள் சமய, இனக் காழ்ப்பின்றி பொது நோக்கோடு நூலை ஆராய்ந்து உள்ளபடியே கூறியுள்ளனர். இப்பெருமக்களின் கருத்தை விளக்குவதாயின் விரிவடையும்.

தற்போது பகவான் விருஷபதேவர் யார்? அவர் எங்கு தோன்றினார்? அவரைத் தமிழ் இலக்கியங்கள் எவ்வாறு போற்றுகின்றன? என்பதைச் சுருக்கமாகக் காணலாம்.

பகவான் விருஷப தேவர் மூன்றாம் காலத்தில் (ஜைன காலப்பகுப்புப்படி) அயோத்தி மாநகரத்தின் பேரரசரான நாபிமகாராஜ னுக்கும், அவருடைய அன்பு மனைவியான மருதேவி அம்மைக்கும் மகனாகத் தோன்றினார். இவர் தோன்றிய காலம் மிகமிகத் தொன்மையானதாகும். இவர் தீர்த்தங்கரர் எனப் போற்றப் பட்டார். இப்பெருமகன் பேரறிவு படைத்தவராக விளங்கினார். இவர் தோன்றிய காலம் இன்ப நுகர்ச்சி (போகபூமி) என்ற சமத்துவகாலம் மாறி தொழில் துவக்க கர்மபூமி - (உழைத்துண்ண வேண்டிய) காலம் தோன்றி இருந்தது. அப்போது நாடு, நகரங்கள் போன்ற அமைப்புகள் அமைந்திருந்தன.

இயற்கை அறிவால் சிறந்து விளங்கிய விருஷபதேவர் உலக நிலையைக் கூர்ந்து நோக்கினார். அறிவுக்கும் ஆற்றலுக்கும் பொருந்தாத சமுதாயம் அமைந்திருப்பதைக் கண்டார். அப்பெருந்தகை மக்களைத் துன்பத்திலிருந்து எங்ஙனம் விடுவிப்பதெனச் சிந்திக்க லானார். அவரது சிந்தனையில் பற்பல திட்டங்கள் உருவாயின. அத்திட்டங்களைக் கொண்டு

புதியதோர் சமுதாயத்தை உருவாக்கினார். வாள், வரைவு, வாணிபம், உழவு, சிற்பம் போன்ற தொழில்களைச் செய்ய வழிவகுத்தார். இவைகளைச் சரிவர நடத்த அரசர், வணிகர், வேளாளர் என்ற மூன்று பிரிவுகளை வகுத்துத் தந்தார். இம்மூன்று பிரிவுகளும் செய்தொழில் வேற்றுமையாலன்றிப் பிறப்பினால் ஏற்பட்டவை அல்ல. இக்கருத்தை:

**ஆதிநாள் அரசர் தங்கள் அருங்குலம் ஐந்தும் ஆக்கி**
**ஓதநீர் உலகின் மிக்க ஒழுக்கமும் தொழிலும்தோற்றித்**
**தீதுதீர்ந்து இருந்த பெம்மான் திருவடி சாரச் சென்று**
**நீதிநூற்று உலகம் காத்து நிலம்திரு மலர நின்றான்**
**- சூளாமணி535**

என்று தோலாமொழித் தேவர் ஆதிபகவனாம் விருஷப தேவரைப் புகழ்ந்து கூறியுள்ளார்.

அத்துடன்அப்பெருமகனார் மாந்தரின் அறிவு வளர்ச்சிக்காக அகர முதலாகிய எழுத்துக்களையும், ஒன்று, இரண்டு முதலான எண்களையும் தோற்றுவித்தார். கல்வியையும், பற்பல கலைகளையும் மக்களுக்கென வளர்த்தவர் அப்பெருமகனேயாவர். இக்கருத்தை நம் இலக்கியங்கள் விளக்கிக் கூறியுள்ளதைக் காணலாம்.

**வரைவொடு தொழிலே வித்தை வாணிகம் உழவே சிற்பம்**
**உரைசெயும் போகபூமி ஒழிவினில் ஆதிகாலம்**
**விரைசெறிபிண்டி வேந்தன் விதித்தலின் அஃதேயம்ம**
**கருமபூமி யென்னும் பேர் கண்ட தொன்று உண்டு நூலின்.**
**- (சூளா, நிகண்டு 12வது தொகுதி 64)**

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

- திரு. கு. 377

திருக்கிளர் தேவர் கோமான் ஏவலிற் குபேரன் செய்த
விருப்புறு பொன்னெயிற்குள் விளங்க எண்
எழுத்திரண்டும்
பரப்பிய ஆதிமூர்த்தி .....

(சூ.நி.மரப்.தொ.காப்பு)

சொல்வகை யெழுத்தெண் எல்லாம் தொல்லைநாள்
எல்லையாக
நல்வகையாக்கும் பிண்டி நான்முகன் ...

(சூ.நி.12-வது தொகுதி)

எண்ணொடு எழுத்திரண்டும் இயம்பிய ஆதிமூர்த்தி
செல்வளம் பிண்டி வேந்தன் சிநேந்திரன் ஆதிகாலம்
பல்வளம் பெற்ற ஆதிப் பரதனே முதல்வராகச்
சொல்லிய நூற்றுவர்க்கும் துறைவிழாக்கலைகள்யாவும்
கல்வி பயில் களப்பேர் கழகம் கல்லூரியாமே.

(சூ.நி.)

இதனால் பகவான் விருஷபதேவர் அறுவகைத் தொழில் களைத் தோற்றுவித்து, எண்ணையும் எழுத்தையும் கற்பித்தார் என்பது நன்கு விளங்கும். இதையே குறளாசிரியர் 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்று கூறி எழுத்தைத் தோற்றுவித்த ஆதிபகவனாம் விருஷபதேவரை முதற்குறளில் வணங்கி யுள்ளதை உணர்ந்து கொள்ளலாம்.

இவ்விலக்கியச் சான்றுகளை மெய்ப்பிக்க வரலாற்றுத்துறை பேராசிரியர் N.N. பாசு (N.N. Basu) இந்தி விஸ்வலோசனா கோஷ் (Hindi Visvalochana Kosh) என்னும் நூலில், முதன் முதல் எழுத்துக்களையும் எண்களையும் பகவான் விருஷபதேவரே தோற்றுவித்தார், பிராமி எழுத்துக்களையும் கண்டுபிடித்தவர் அவரே எனக் கூறியுள்ள வரலாற்றுப் பேருரைகள் நமக்கு மேன் மேலும் துணை புரிகின்றன.

அத்துடன் பகவான் விருஷபதேவர் மக்கள் அனை வரும் ஒற்றுமையுடனும், அன்போடும், பண்போடும் வாழ அஹிம்சா தருமம் எனும் அருளறத்தையும் வலியுறுத் தினார். கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறர் மனை நயவாமை, மிகுபொருள் விரும்பாமை எனும் ஐம்பெரும் ஒழுக்கங்களின் பாதையில் இல்லறம், துறவறம் என்னும் இருபேரறங்களை வகுத்துத் தந்தார். இக்கருத்தை;

கொலைபொய் களவுகாமம் தேன்கொடிய
தென்றுரைத்தாய்
இரவுணல் இலையென்று உறுதிமொழியுரைத்தாய்
இயலாம் அடியார் தமக்கு மெய்நூல் மலைவில்லாத
ஆறேழும் வகுத்தாய், செகத்தாய் மகத்தான
நிலையா அருகாவென நினைத்தார் பிறவி
தொலைத்தாரே.

எனவரும் துதிப்பாடல் உறுதி செய்கிறது. இல்லறம மக்களின் நல மேம்பாட்டிற்கும், பண்பாட்டிற்கும் உரிய அறவாழ்க்கையாக அமைந்துள்ளது. குறள் இல்லறத்தை அடிப்படையாகக் கொண்ட நூல் என்பதை நன்கு உணர்தல் வேண்டும். இக்கருத்தை

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.**

*என்று இல்லறத்தினால் அடையும் மாண்பைக் கூறினார். வாழ்வாங்கு வாழும் இல்லறத்தான் துறவறத் திற்குத் தகுதியுடையவனாகின்றான். மேலும் குறள்;*

**அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.**

*என்று அறம் ஒன்றிருக்குமேயாகில் அது பிறர் பழிக்காத இல்லறமேயாகும் என்கிறார். இங்ஙனம் இல்வாழ்க்கையை வலியுறுத்துவதற்கெனவே தோற்று வித்த நூல் திருக்குறள் எனில் மிகையாகாது.*

*அத்தகைய இல்லறத்தானுக்குத் துறவறம் வீடுபேறு பெறும் சிறந்த வாழ்க்கையாகும். இவ்விரு அறநெறிகளில் இல்லறமே துறவறத்திற்குத் தாயகமானது. இல்லறம் இரும்புச் சுரங்கம், துறவறம் பொன்சுரங்கம். பொன் சுரங்கத்திலிருந்துப் பொன்னை வெட்டியெடுக்க இரும்பு இன்றியமையாதது. அதுபோன்று துறவறம் மேற்கொள் வோர் இல்லற நெறி வழுவாது வெற்றிகாண வேண்டும். இல்லையேல் துறவறத்தில் வெற்றிகிட்டாது. இல்லற நெறிகள் பாகுபாடின்றி அனைவருக்கும் உரியதாகும். இத்தகைய அறக்கருத்தைப் பகவான் விருஷபதேவர் செய்தொழில் வேற்றுமையின்றி பிறப்பால் மக்கள் அனை வரும் ஒன்றேயெனும் சகோதர உணர்வை அன்றே கூறிவளர்த்தார். இக்கருத்தைக் குறளாசிரியர்:*

**பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்** - *எனக் கூறியுள்ளார்.*

*மக்கள் பசி, பிணி, மற்றும் பகையின்றி வாழ பொருளாதார சமத்துவம் இன்றியமையாதது. இதை அன்றே பொதுவுடைமை தத்துவமான மிகுபொருள் விரும்பாமை எனும் பகுத்துண்டு வாழும் பண்பினை ஐம்பெரும் அறங்களில் ஒன்றாக அமைத்துத் தந்தார். இக்கருத்து வேறு சமயங்களில் எங்கும் காணக் கிடைக்காத தாகும். அத்தகைய உயரிய இப் பேரறங்களை மதமென்றோ, சமயமென்றோ அழைக்காமல்; அறம் என்றே அழைத்து உலக அமைதி மேம்பாட்டிற்காக அறவுரை பகர்ந்தார். இவ்வாறு அருளறத்தின் அடிப் படையில் பொதுவுடைமை தத்துவங் கொண்ட புது சமுதாயத்தினைப் படைத் தருளினார். இது மக்களுக்கு இன்றியமையாததாக விளங்கியது.*

*அப் பெருமகன் ஆதிபகவனை மக்களேயன்றி பிற மன்னுயிரும் தேவருலகமும் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்தனர். நல்லதொரு வாழ்க்கைக்கு வழிகாட்டிய வள்ளலென வாழ்த்தி வணங்கினர். அப் பெருமகனின் திருமொழியை சிரமேற் கொண்டு வழிபட்டனர். அவர் வகுத்துத் தந்த ஒழுக்க நெறிகளில் வழுவாது நின்று வாழ்க்கையில் வளம்பெற்றுச் சிறந்து விளங்கினர். இவ்வரலாற்று நிகழ்ச்சியையே திருக்குறளாசிரியர் பொய்யா மொழிப் புலவர் 'ஆதிபகவன் முதற்றே உலகு' என தேற்றேகாரத்தால் உறுதிபடக் கூறியுள்ளார் என்பதை அறிஞர் உலகம் நன்கு அறிதல் வேண்டும். இக்கருத்தை,*

ஊழிமுன் றாவது ஓய்ந்து இறுதி மன்னுயிர்
சூழ்துயர் பலகெடச் சோதி மூர்த்தியாய்
ஏழ்உயர் உலகுடன் பரவ ஈண்டுஅருள்
ஆழியங் கிழமையெம்அடிகள் தோன்றினார்.- சூளாமணி
எனவும்;

ஆதிநாள் அரசர் தங்கள் அருங்குலம் ஐந்து மாக்கி
........ நிலந்திரு மலர நின்றான். சூளா. 535.

எனவும் சூளாமணி ஆசிரியர் தோலாமொழித் தேவர் பகவான் விருஷப தேவரைப் போற்றியுள்ளார்.

ஆதிபகவன் வி(நஷபதேவர் சுநந்தை, யசஸ்வதி என்ற மனைவியர்களுடன் இனிதே இல்லறம் நடத்தி அறவாழ்வு வாழ்ந்து, பரதன் முதலிய நன் மக்களைப் பெற்றெடுத்து உலக மக்களுக்கு இல் வாழ்க்கையின் சிறப்பை நடத்திக் காட்டினார். அம்முறையே இன்றும் நடைமுறையிலுள்ளது.

பின்னர் துறவறமெய்தி கடுந்தவம் புரிந்து ஆன்மாவின் பண்புகளைக் கெடுக்கும் காதி என்ற வினைகளை வென்று கேவல ஞானம் (வாலறிவு) என்கிற முழுதுணர் அறிவைப் பெற்றார். வானவர் தலைவன் இந்திரன் அறவுரை மண்டபம் அமைக்க அதிலமர்ந்து உலகிற்கு அறவுரை யாற்றி வழிகாட்டினார். அச்சமவ சரணம் பல நாடு களுக்கும் சென்றது. அதுபோது இறைவன் வானவர்கள் அமைத்த தாமரை மலர்மீது சென்று அறவுரை நிகழ்த்தினார். அந்நிகழ்ச்சியை, பண்டைய தமிழ் நூல்கள் பலவும் போற்றிக் கூறுகின்றன. அதுபோல் வடநூல்கள் பலவும் கூறுவதைக்

காணமுடிகிறது. அந்நூல்கள் பலவும் திருக்குறளின் கருத்துக்கு வலிவும் பொலிவும் தருவனவாகும்.

ஈண்டு ஆதிபகவனை - விருஷபநாதரை - அந்நூல்கள் எவ்வாறு போற்றுகின்றன என்பதை மட்டும் ஒருசில காணலாம்.

குறளாசிரியர் கூறியுள்ள ஆதிபகவன் விருஷப தேவரேயாகும். இலக்கியங்களில் அப்பெயர் கை யாண்டுள்ளன வற்றைக் காணலாம்.

1. மன்னிய பேருலகனைத்தையும் -
   நின்னுள்ளே நீ ஒடுக்கினை,
   நின்னின்று நீ விரித்தனை -
   நின்னருளின் நீ காத்தனை,
   என வாங்கு;
   ஆதிபகவனை, அருகனை
   மாதுயர் நீங்க வழுத்துவம் பலவே. - திரு.கல.109.

2. ஆதிபகவன் அசோக வசலன் சோதி முதல்வன்
   ஜினவரன் திகம்பரன் - திருப்பாமாலை.

3. அத்தனே என்னை ஆளீர் சரணம்
   ஆதிபகவன் அருளே சரணம். - தோத்திரத் திரட்டு

4. ஆதிவேதம் பயந்தோய்நீ - சிந்தாமணி

5. வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும் - தொல்காப்.

6. போது சாந்தம் பொற்ப ஏந்தி
ஆதிநாதர் சேர்வோர்
சோதிவானந் துன்னுவாரே. - யா.காரிகை மேற்கோள்.

7. இசையினால் எண்ணெழுத்தும் இயம்புவித்தாய் நீ
- ஆதிநாதர் பி,த.

*இவ்வாறு ஜைன இலக்கியங்கள் பலவற்றுள்ளும் 'ஆதிபகவன்' என்ற சொல்லாட்சியைப் பரவலாகக் காணலாம்.*

*மேலும் கி.பி.1763ல் வாழ்ந்ததாகக் கூறப்படும் வைதீக அந்தணர் கயாதரர் என்னும் சைவசமயப் புலவர் இயற்றிய 'கயாதர நிகண்டில்' பகவான் விருஷபதேவரைப் பற்றிய சிறப்புப் பெயர்களாவன;*

கோதில் அருகன் திகம்பரன் எண்குணன்
முக்குடையோன்
ஆதிபகவன் அசோகமர்ந்தோன் அறவாழி அண்ணல்
சோதி முனைவன் சினேந்திரன் பொன்னெயில்
நாதன் சுத்தன்
போதி நடந்தோன் அதிசயன் சாந்தன் நற்புங்கவனே.

இதில் திருக்குறள் கடவுள் வாழ்த்தில் கூறப்பட்ட பெயர்கள் பலவும் விரஷப தேவரின் பெயர்களாகக் கூறப்பட்டுள்ளமையைக் காணலாம்.

தமிழகப் புலவர்களுள் சிறந்து விளங்கிய திரு.வி.க. அவர்கள் தமது 'அருகன் அருகே அல்லது விடுதலை. வழி' எனும் நூலில்;

**ஆதிபகவன் சோதி நாதன்**
**விருஷபதேவன் புருஷநாயகன்**
**அவனே இறைவன் அவனே ஈசன்**
**அவனே மாயன் அவனே நான்முகன்**
**அவனே சித்தன்அவனே அருட்சினன்**
**அவனே தர்மம் அவனே அகிம்ஸை**
**அவனேஅருகன் அருகே அணைந்தால்**
**விடுதலை வழியைக் கடிதில் பெறலாம்.**

- என்று கூறியுள்ளதைக் காணலாம்.

மேலும் பல தமிழ் நூல்களிலும். வடமொழி நூல்களிலும், ஆதிபகவன் விருஷபதேவரே என்பதும், அவரே முதற் கடவுள் என்பதும், எழுத்துக்கள் எல்லாம் அவர் முதலாகத் தோன்றின என்பதும் காணக் கிடைக்கின்றன.

அவ்விருஷபதேவர் பற்றி; ருக் வேதம் 10,12,166-ஆம் சூத்திரங்கள், யஜுர்வேதம் 19-ஆம் அதிகாரம் மந்திரம் 14-ல், ஸ்கந்த புராணம் அதிகாரம் 4-லிலும், விஷ்ணுபுராணம் அதிகாரம் 1லும், பாகவதம் 5-வது ஸ்கந்தத்திலும் முதல் இறைவனாகக் குறிக்கப் பட்டுள்ளதைக் காணலாம். விரிவஞ்சி விடுகின்றேன்.

இத்தகைய சிறப்புகள் மிக்க ஆதிபகவன் விருஷப தேவர் இறுதியில் கடின தவத்தின் வாயிலாக அனைத்து வினைகளையும் வென்று கைலாய மலையில் வீடுபேறு பெற்றார். அத்தினமே சிவராத்திரி விழாவாக நாம் கொண்டாடுவது.

எனவே திருக்குறளாசிரியர் முதற்குறளில் ஆதிபகவன் என்று போற்றுவது பகவான் விருஷப தேவரையே என்று தெளிவு பெறலாம்.

வாழ்க ஜிநவறம்.

******

**2**

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

## வாலறிவன்

பிரதிஷ்டாசார்ய
அ. சிம்மச்சந்திர ஜைன் சாஸ்திரியார்

*ஒருவன் நூல்கள் பலவும் கற்று அந்நூற் பொருளில் தெளிவும் திட்பமும் உடையவனாயினும் கேவல ஞானத்தை உடைய இறைவனது திருவடிகளைத் தோத்திரம் செய்யாது விட்டால் அவனுக்கு ஒரு பயனுமில்லை.*

*இக்குறளில் இறைவன் 'வாலறிவன்' என்ற சொல்லால் சுட்டப்படுகிறார். வாலறிவு என்பது எது? அவ்வறிவைப் பெற்றவன் யார்? என்ற வினாக்களுக்கு விடை கண்டால் குறளாசிரியர் போற்றும் இறைவன் யார் என்பதைத் தெளியலாம்.*

*வாலறிவு என்பது கேவலஞானம். சுக்கிலம், வால் என்பன வெண்மையையும், வெண்மை தூய்மையையும் குறிக்கும். கேவல ஞானம் தூய முழுதுணர் ஞானமாகும்.*

**மதி சுருதா- அவதி மந: பர்யய கேவலாநிஜ்ஞானம் - த.சூ.**

என்று மதிஞானம், சுருதஞானம், அவதி ஞானம், மனப் பர்யய ஞானம், கேவல ஞானம் என ஞானம் ஐந்து என்பர். பொறிகளால் அறியப்படுவது மதிஞானம், அவ்வாறு அறிந்ததை மேலும் சிறப்பாக அறிவதும் ஆகமங்கள் மூலம் அறிவதும் சுருத ஞானம், புலன்கள் மற்றும் மனதின் துணையின்றிச் சில பருப்பொருள்களை அளவுடன் அறிவது அவதிஞானம், பிறர் மனதில் நினைத்ததை அறிதல் மனப்பர்யய ஞானம், மூன்று உலகத்திலும், முக்காலத்திலும் உள்ள பொருள்களையும், அதன் மாறுதல்களையும் குறைவின்றி முற்றுமாக ஒரே சமயத்தில் அறியும் ஞானம் கேவல ஞானம். இது காதி வினைகளின் கேட்டிற்குப் பின்னர் தோன்றுவதால் - தூய (வெள்ளை, வால்) அறிவு என்பதால் வாலறிவு என்பர். இதையே 'வினையின் நீங்கி விளங்கிய அறிவு' என்றும் கூறுவர். இந்த ஐந்து வகை ஞானங்களைப் பற்றி ஜிந ஆகமங்கள் மிகவும் விரிவாக விளக்கிக் கூறுகின்றன.

**ஸர்வத்ரவ்ய பர்யாயேஷு கேவலஸ்ய - த.சூ.**

உலகிலுள்ள ஜீவன் முதலான அனைத்துப் பொருள் களையும், அப்பொருள்களில் தோன்றும் மாறுதல் களையும் ஒரே சமயத்தில் முற்றுமாக அறிவது கேவல ஞானம்.

யஸ்ஸர்வாணி சராசராணி விவித
திரவ்யாணி தேஷாம் குணான்
பர்யாயாநபி பூதபாவி பவத:
ஸர்வாந் ஸதா சர்வதா
ஜாநீதே யுகபத் ப்ரதிக்ஷணமதஸ்
ஸர்வஞ்ந இத்யுச்யதே
ஸர்வஜ்ஞாய ஜிநேஸ்வராய மஹதே
வீராய தஸ்மை நம! - **கிரியாகலாபம்.**

*இந்தத் துதிப்பாடலில் கேவலஞானத்தின் தன்மையைக் கூறி, அதையுடைய அருகனைப் போற்று கின்றார். உலகிலுள்ள அனைத்து இயங்கும் மற்றும் நிலையுயிர்கள் அனைத்தையும் அவைகளின் முக்கால குணங்களையும், மாற்றங்களையும் முழுதுமாக ஒருங்கே ஒரே சமயத்தில் அறிவதே கேவல ஞானம். அந்த ஞானத்தை யுடையவர் ஜிநேஸ்வரர். அவரை நான் வணங்குகிறேன்' என்கிறார். முழுதுணர் ஞானமான வாலறிவின் தன்மையை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.*

*மேலும் மேருமந்தர புராணம்,*

அமலநல ஆடியகத்து ஆனநிழல்போல
துமிலமிடை மூவுலகும் தோன்றும் அறிவு ...... 1025

*குற்றமற்ற தூய்மையான சிறந்த கண்ணாடியில் உண்டாகும் உருவப் பிரதிபலிப்பைப் (சாயை) போல ஒலிக்கு முதற் காரணமாகிய பரமாணுக்கள் செறிந்த இம் மூவுலகும் (அதிலுள்ள பொருள்களும் அதன் மாற்றங்களும்) தோன்றுகின்ற அறிவு என்று உவமைகூறி விளக்குகிறது.*

*இத்தகைய முழுதுணர் ஞானம் உயிர்களிடத்து எப்போது தோன்றும்?*

**மோஹ க்ஷயாத் ஜ்ஞாந தர்ஸநாவரணாந்தராய க்ஷயாச்ச கேவலம். த.சூ.349.**

*மோகனீய வினை கெடுவதனாலும், ஞாணாவரணம், தர்சனாவரணம், அந்தராயம் ஆகிய வினைகள் கெடுவதனாலும் கேவலஞானம் உண்டாகும் என்று தத்து வார்த்த சூத்திரம் கூறுகிறது. உயிரை அழுத்திக் கொண்டுள்ள காதிவினைகள் நான்கும் விலகிய பின்னர் இந்த வாலறிவு தோன்றி விளங்கும். இதுவே சகல பிரத்யக்ஷ ஞானம், முழுதுணர் ஞானம். இந்த ஞானத்தால்:*

**திரைலோக்யம் ஸகலம் திரிகால விஷயம்**
**ஸாலோக மாலோகிதம்.**
**ஸக்ஷாத்யேந யதாஸ்வயம் கரதலே**
**ரேகாத்ரயம் ஸாங்குலி - அகளங்காஷ்டகம்.**

*விரல்களோடு கூடிய உள்ளங்கையில் மூன்று ரேகைகளை ஒளிமறைவுயின்றி மனிதர்கள் நேரிடையாகப் பார்க்கிறார்களோ அப்படி மூவுலகம், அதற்கு அப்பாற் பட்ட அலோகம் அதிலுள்ள முக்கால விஷயங்களையும் பிரத்யக்ஷமாகப் பார்த்தறியும் கேவலஞானம் என்று சுட்டிக் காட்டுகின்றார் அகளங்கர்.*

*முதல் நூலுக்கு இலக்கணம் வகுக்கும் தொல் காப்பியனார் வினைகளை வென்றபின் தோன்றும் இந்த கேவல ஞானத்தை 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின்' என்ற சூத்திரவழி வாலறிவு எப்போது தோன்றும் என்றும்; அத்தகைய குற்றமிலா தூய அறிவை*

உடையவன் தனது நிறை ஞானத்தால் உணர்ந்து கூறியனவே 'முதல்நூல்' என்றும் அதுவே குறையற்றது, முரணற்றது, உண்மையானது என்றும் குறிப்பால் உணர வைத்துள்ளமையைக் காணலாம். இதனால் வினைகளுக்கு ஆட்பட்டு, விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகி, பிறவியில் சிக்கி உழலுபவரது அறிவு வாலறிவாக; முழுதுணர் அறிவாக விளங்க இயலாது என்பது உணர்க.

உலகில் யாவற்றையும் பற்றறத் துறந்து, ஞான தியானத் தவங்களில் சிறந்து நின்று, புதிதாக வினைகளை வராமல் தடுத்து, ஏற்கனவே ஈட்டிய வினைகளை வென்று ஒழித்தவர்கள். இக் கேவல ஞானத்தை அடைந்து என்றும் நின்று விளங்குவர். முக்தியடையும் ஜீவன்கள் எல்லாம் கேவலஞானிகளே. ஆயினும் யாருடைய கேவல ஞானத்தால் உலக உயிர்கள் பயன்பட்டதோ அவர்களே அருகர், தீர்த்தங்கர்கள் எனப் போற்றப்படுகின்றனர்.

தீர்த்தங்கர நாம நல்வினையெனும் சிறப்பு நல்வினையால் இவ்வுலகில் தோன்றி, பல சிறப்புகளுக்கும் உரியவராகி, துறவு நோற்று பொறிகளை வென்று, விருப்பு வெறுப்பின்றி, காதிவினை நான்கையும் வென்றபின் கேவலஞானம் தோன்றியதை அறிந்த சௌதர்மேந்திரன், தேவர் குழாமொடுவந்து வணங்கிப் போற்றித் துதித்தபின், அவரால் இவ்வுலகுயிர் உய்யும் பான்மையறிந்து, சமவ சரணம் எனும் அறவுரை அரங்கு அமைக்க, தீர்த்தங்கரர்கள் அதிலமர்ந்து அங்கு வந்துள்ள கணதராதி பன்னிருகணங் கட்கும், தமது வாலறிவால் விளங்கிய உலகியல் மெய்ப் பொருள்களையும், தத்துவங்களையும், தர்மத்தையும் எடுத்துரைக்கின்றனர் அவர்கள் அறு நான்கு தீர்த்தங்கரர்களாவர்.

அவர்களையே ஜைநர்கள் பஞ்சபரமேஷ்டிகளில் முதல்வராக வைத்து வணங்கி வழிபாடு செய்கின்றனர். ஆதிபகவன், வாலறிவன் என்றெல்லாம் திருக்குறளாசிரியர் போற்றுவதும் இவர்களையே.

அறிவன், வாலறிவன், அறிவுவரம்பு இகந்தோன், முழுதுணர் ஞானி, சர்வஜ்ஞன், கேவலஞானி, விளங்கிய அறிவன், மூவுல குணர்ந்தோன், அலகிலா ஞானவாரி என்றெல்லாம் நூல்கள் பலவும் அருகனைப் போற்றிப் பரவுவதைக் காணலாம்.

ஆதிவேதம் பயந்தோய் நீ ......., 1242
அறிவன் அடிக்கீழ் அரசு அஞ்சித் துறந்தவாறும் ....,
27
உலகுணர் கடவுள் ..... 2713 - (சீவக.சிந்)
உலகெலாம் உணர்ந்த மூர்த்தி . . . . 6.
உலகெலாம் ஞானவாரி . . . . 1.
எம்மடிகள் முன்னாள் ஏமமாம் முதல்நூல் சொல்ல ...
சூடா.2.
வையம் நின்ற பெற்றி முற்றும் உரைத்தான்
உரை ஈரொன்பதுஆய தொன்றால் . . . . 1.
அறிவினால் அறியாத அறிவன் . . . . 630.
மதிகள் நான்கையும் கடந்தனை அடைந்தனை
உலகெலாம் மதியொன்றின் . . . . 173 (மே.ம.4)
கடையிலா ஒண்ஞானக் கதிர்விரித்தாய் . . . 65.
அறிவர் அடிமுதல் ஆர்வம் பெருக்க (சூளா.துற.172)
எல்லாம் உணர்ந்தான் . . . நீல.1.
அறம்பகர்ந்த அறிவன் நீயே . . . சீவ.சம்.போ.29.
தொன்மறையை விரித்தோய் நீ . . . திருக்கல.1.
அறிவனது அடியிணைப் பரவப் பெறுவர்
யாவரும் பிறவா நெறியே . . . யா.க.வி.93.

இவை போன்ற பல எடுத்துக்காட்டுகளால் 'அறிவன்' என்னும் பெயர் கேவலஞானி என்பதை உணர்த்துவதையும், அது அருகனையே குறிக்கும் என்பதையும் உணரலாம்.

மேலும் வைதீக சமய நூல்களிலும் சான்றுகள் காணக் கிடைக்கின்றன. **'இதி நாநா யோக சர்யா சரணோ பகவான் கைவல்ய பதி ருஷப:'** ஆதிபகவன் என்னும் முதல் தீர்த்தங்கரர் விருஷபதேவர் கேவலி என்று அழைக்கப் பட்டுள்ளார் என்கிறது.

**ஆப்தோ, அர்ஹன், வீதராகஸ்ச, கேவலி**
ஜிந புங்கவ! - வாலறிவனின் திருநாமங்கள் இவை! **இறைவன்நீ ஈசன் எண்குணத் தலைவன்நீ பொறியிலா அறிவன்நீ பூசனைக்கிறைவன்நீ** - என்றெல்லாம் போற்றப் பெறும் வாலறிவன் ஜைனர்கள் வணங்கும் அருகனையே என்பது உணர்ந்து திருக்குறளாசிரியர் வாழ்த்தும் கடவுள் விருஷப தேவர் முதலான இறைவனையே என்று தெளியலாம்.

முதற்குறளில் நூல்களுக்குக் கருவியான எழுத்து முதலானவைகளை உபதேசித்தவன் ஆதிபகவன் விருஷபதேவரென்று கூறி; அடுத்த குறளில் அந்நூல்களைக் கற்றதனாலாகிய பயன் அவ்விறைவனை வணங்குதலே என்றும்; அடுத்து வரும் குறள்களில் அவனை வணங்குவதால் வினைகளை வென்று வீடுபெற்று உலகுச்சியில் பிறவாநிலை பெற்று நிலைத்து வாழ்தலே என விளக்கியுள்ளமையை அறிந்து உண்மையை உணர்ந்து கொள்ளலாம்.வாலறிவன் வழி நிற்போமாக.

வாலறிவன் வழி நிற்போமாக.

******

**3**

மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

## மலர்மிசை ஏகினான்

**விருதூர் K.P. விமலநாத ஜைன் சாஸ்திரியார்**

*திருக்குறள் கடவுள் வாழ்த்தின் மூன்றாவது குறள் இது. தாமரை மலர்மீது நடந்தவனது பெருமை சான்ற திருவடியை அடைந்தவர்கள் இவ்வுலகின் உச்சியிலுள்ள முக்தியுலகில் நிலையாக வாழ்வர் என்பது இதன் பொருள்.*

*இக்குறளில் கடவுளை 'மலர்மிசை ஏகினான்'*

*என்று குறிப்பிடுகின்றார். மலர்மிசை ஏகிய இறைவன் யார்? அவரே அருகன் ஜிநன் என்று பொதுப் பெயரால் குறிக்கபடும் ஜைனர்கள் வணங்கும் தீர்த்தங்கரர்கள் ஆகும். அவர்கள் ஆதிபகவன் விருஷப தேவர் முதல் மகாவீரர் வரையிலான அறுநால்வர் ஆவர்.*

*தீர்த்தங்கர புண்ணியத்துவம் பெற்ற ஒரு ஜீவன் நான்கு காதிகர்மங்களைக் கெடுத்ததும், கேவலஞானம் எனும் வாலறிவால் விளங்கப்படுகிறார். தீர்த்தங்கரர்கள்*

*அப்போது முப்பத்தி நான்கு அதிசயங்கள் நிரம்பப் பெற்று விளங்குகின்றார். இயல்பாதிசயங்கள் 10, கர்மக்ஷயாதிசயங்கள் 10, தெய்வீகாதிசயங்கள் 14. இந்த தெய்வீகாதி சயங்களில் 13-ஆவது 'தாமரை மலர்மீது நடந்து' செல்வது. இறைவன் சமவசரணமெனும் அறவுரை மண்டபத்திற்குச் செல்லும் போதும், நாடுவிட்டு நாடு ஸ்ரீவிகாரம் (திருவுலா) செய்யும் போதும் முன்னும் பின்னும் தாமரை மலர்களின் வரிசையைத் தேவர்கள் தோற்றுவிக்க அதன்மீது பாதம்படியாமல் நடந்து செல்வார்.*

*இதை மகாபுராணம் 25-ஆம் பர்வம் 271-ஆம் சுலோகமும், ஸ்ரீ புராணத்திலும் விரிவான வருணனை களைக் காணலாம்.*

*இதையே சிலப்பதிகாரத்தில்;*

**மலர்மிசை நடந்தோன் மலரடி அல்லதென்**
**தலைமிசை உச்சி தானணிப் பொறாது**

*- என்று இளங்கோ அடிகளும்,*

**விரிபூந் தாமரை மேற்சென்ற**
**திருவார் அடியேத்தி - (2814)**

*- என சிந்தாமணியில் திருத்தக்கதேவரும்,* **கமலமீது உலவும் உனைக் காதலிப்பார் அரியரே**

*- என்று மேருமந்தர புராணத்தில் (66) வாமன முனிவரும்,*

**தேனாரும் அரவிந்தம் சென்றேந்தும் போழ்து**
**திருவடிகள் செந்தோடு தீண்டாவே யாகி**

*- என்று சூளாமணி (துறவு 69)யில் தோலாமொழித் தேவரும்*

தாவின்றி எப்பொருளும் கண்டுணர்ந்து தாமரைப்
பூவின்மேற் சென்றான் புகழடியை

*- என்று அறநெறிச் சாரமும்*

கடலெழும் இரவுகோடி கால்சீத்துப் பொடித்த தென்ன
மடலவிழ் கமலவூர்தி வந்தவாமனையே போற்றி

*- என்று மண்டல புருடரின் சூளாமணி நிகண்டிலும் காணலாம்.*

வாகனமாகம் பூத்த மலர்மேல் ஏகும் ஏகனை
- திருக் கலம்பகம்
நாகநினை தாமரைமேல் நடந்தேகிய நற்றவனே
- திரு நூற்றாந்தாதி
ஏடவிழும் நளினமிசை ஏகுமவர் அடியிணையே
- திருக்கலம்பகம்

'அத்தனேஅமலா கமல வாகனனே'
'ஊரும் அம்புயத் தேரேறி'
'எழில்மா மலர்கண் வருமால்'
'எழில் மலர்மேல் வரும் பதமோர் இரண்டு'
'கமல வாகனா'
'குலமலர் மேல் நடந்தானடி'
'சீர் கொண்ட செங்கமலத் தேரேறி வந்தாய்'.

*- என்றெல்லாம் பல ஜைன சிற்றிலக்கியங்களில் காணலாம். மேலும் பலநூறு மேற்கோள்களை அனைத்து*

சமணநூல்களிலும் கண்டு தெளிவு பெறலாம். எனவே தாமரை மலர்மிசை ஏகினான் என்பது ஆதிபகவன் முதலான அருகருக்கே பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

இது இவ்வாறிருக்க 'மலர்மிசை ஏகினான்' என்பதற்கு அடியாரது நெஞ்சமாகிய தாமரை மலர்மீது நடந்தவர் என்று வலிந்து பொருள் கூறுவது சரியோ? மலர்மிசை இருந்தான் எனில் அப்பொருள் பொருந்தலாம். அவ்வாறு உரைப்பதிலும் மனம் என்பதை வருவித்து வலிந்து கூற வேண்டியிருப்பதாலும் அது பொருந்தாமைக் காண்க.

ஜிநன் ஆர்வமும் செற்றமும் நீக்கி அவை நமக்கும் நீங்குமாறு பதினெண் மொழியால் மாண்பொருள் முழுவதும் விளக்கினவன், பெண்ணாசையை விட்டுப் பெரியோன் ஆனவன், பேரா இயற்கை அடைந்தவன், உலக மூன்றுடையான், காமம் வெகுளி மயக்கமெனும் மனக் கோட்டம் போக்கும் பரமாகமங்கள் தந்தவன், உலகின் மெய்ப்பொருள்களை விளக்கியவன், நாற்பிறவி யொழிய மும்மணி அமுதத்தை ஊட்டியவன், மலையினும் மாணப்பெரிய அடக்கத்தால் உயர்ந்தவன், மனை நீங்கி மாதவம் ஏற்று வீடடைந்தான் அறிவால் நிறைந்த அறமாண்புடையான், முத்தியின்பம் தர வல்லவன், தேவேந்திரனால் போற்றி வணங்கப் பட்டவன், நால்வகை தேவர்களாலும், சக்ரவர்த்திக ளாலும் வணங்கப் பட்டவன், எங்கும் உலக இருள் நீங்க இருந்தவன், வினையரசை வென்றுயர்ந்த வீரன், வினை கெடுக்கும் வீரன், பிறவிக்கடலில் வீழ்ந்த வருக்குத் தெப்பம் போன்றவன், இன்னோரன்ன பல சிறப்புகளுக்கு உரியவன், அவனது திருவடிகளே மாணடியாம் என்பது தெளிவு.

அத்தகைய ஆதிபகன் ஜிநனது மாண்புடைய திருவடிகளை அடைந்தவர்களே முத்தியுலகில் நிலைத்து வாழ்வர்.

நிலமிசை என்பது இவ்வுலகின் உச்சி. அது முத்தி உலகம், சித்தலோகம், மோட்சபூமி என்றெல்லாம் போற்றப் படுவது. மூவுலகின் வடிவம், அமைப்பு, அளவு போன்றன வற்றைத் துல்லியமாக அளவுகளோடு விளக்குவது லோகாணி என்ற ஜைன பூகோள நூல். அது உலகத்தை லோகம் அலோகம் என இருவகையாகப் பிரித்துக் கூறுகிறது. லோகம் ஜீவன் புத்கலம் தர்மம் அதர்மம் ஆகாசம் காலம் என்ற ஆறுபொருள்களும் உள்ளடங்கியது. இதில் ஆகாசப் பொருள் மட்டும் உடையது அலோகாகாசம். இவை என்றும் நிலைத்தவை, மாறாதவை.

மேற்சொன்ன அறுவகைப் பொருள்களில் மூன்றாவதான தர்மப்பொருள் உலகத்தின் அகத்தே நீக்கமற அமைந்த பொருள். பிற பொருள்கள் இடம் விட்டு இடம் நகர இந்த தர்மாஸ்திகாயம் உதவுகிறது. அடுத்து அதர்மாஸ்திகாயம் நகரும் பொருள்கள் நிற்க முயலுங்கால் நிற்பதற்கு உதவி செய்வது. இம் மூவுலகின் வெளிப் பகுதியாகிய அலோகா காசத்தில் தர்ம அதர்மாஸ்திகாய முதலான பிற ஐந்து பொருள்களும் இல்லையெனப் பார்த்தோம். எனவே வினைக்கட்டிலிருந்து விடுபட்ட தூய ஆன்மா (மோட்ச உயிர்கள்) இந்த உலகின் உச்சிவரை சென்று - அதாவது தர்மப் பொருள் உள்ள இடம்வரை சென்று, அதற்கு மேல் நகருவதற்கு உதவி புரியும் தர்மம் பொருள் இன்மையால் - தடுக்கப்பட்டு நிலையாக நின்றுவிடும். வினைகள் விடுபட்டு தனது தூய இயல்பு நிலையை அடைந்த ஜீவன் நேராக மேல் எழும்பிச்

செல்லும் ஆற்றலுடையது. அவ்வாறு செல்வதற்கும் தர்மாஸ்திகாயத்தின் துணை வேண்டும். எனவே தர்மாஸ்தி காயம் இருக்கும்வரை சென்று, அதற்குமேல் செல்லாமல் இவ்வுலகின் உச்சியில் இம் மோட்ச உயிர்கள் நின்று விடும். இதுவே இந்த உலகின் மேற்பகுதியில் - உச்சி உள்ள முக்தியுலகம் (சித்தலோகம்). அங்கு சென்று தங்கிய முக்தியுயிர்கள் தம் இயல்பான எண் குணங்களோடு நிலையாக இருக்கும். இதையே குறளாசிரியர் 'நில மிசை நீடு வாழ்வார்' என்றார் .

எனவே குறளாசிரியர் 'மலர்மிசை ஏகினான்' என்பது ஆதிபகவன் விருஷபதேவர் முதல் ஜைனர்கள் வணங்கும் அருகனையே என்பதைத் தெளிவாக உணரலாம். அவனது பெருமை பொருந்திய திருவடிகளை வணங்கியவர் முக்தியுலகில் நிலைத்து வாழ்வர் எனவும் அறியலாம்.

ஆகவே நாம் தாமரை மலர்மேல் நடந்தான் தாள்வழித் துறந்து, மூவமுதம் உண்டு, எண்வினை வென்று, பெறுதற்கரிய பேரா இயற்கையாம் வீடுபேற்றினை அடைந்து என்றும் ஈண்டு வாராது நீடு வாழ முயல்வோமாக.

******

4 வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல்.

# வேண்டுதல் வேண்டாமையிலான்

வித்வத் ரத்ன, ஆகம பூஷண
ஆத்மபந்துப.S. பரதச்சக்ரவர்த்திசாஸ்திரியார்
நியாயதீர்த்தா

திருக்குறள் தமிழ்மறை, உலகப் பொதுமறை என்றெல்லாம் போற்றப்படுகிறது. இந்நூலின் கருத்துக்கள் முக்காலும் அனைத்து உயிர்களுக்கும் ஏற்புடையனவாகும். இதனால் பல சமயத்தினரும் தமது நூல் என்று கூறிக் கொள்ளுகின்றனர்.

ஒரு நூலாசிரியரின் சமயத்தை உறுதிப்படுத்த அந்நூலின் கடவுள் வாழ்த்தும், நூலில் காணப்படும் அச்சமயத்தின் சிறப்புக் கொள்கைகளுமேயாகும். திருக்குறளை நோக்கும் போது அந்நூலாசிரியர் குந்த குந்தர் எந்தவித ஊகத்திற்கும் இடமில்லாமல் ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை யேகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இருவினையும் சேரா இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமையில்லாதான், எண்குணத்தான் என்ற

சொற்களால் போற்றியுள்ளார். இவைகளனைத்தும் ஜைனம் போற்றும் ஜிநபகவானுக்கே பொருந்துவன. இச்சொற்களுக்கு இணையான சொற்களும், விளக்கங்களும் வடமொழி ஜைன நூல்களில் ஏராளமாக உள்ளன.

ஜைனர்கள் தாங்கள் வணங்கும் விருஷபதேவர் முதல் மகாவீரர்வரை இருபத்தி நால்வரும் குணத்தால் ஒருவரே. அவர்களையே ஜிநர், அருகர் என்றெல்லாம் கூறி வழிபடுவர். இதில் விருஷபதேவர் ஆதிபகவன் ஆவர். இவரை ஆதிநாதர், ஆதிபிரம்மா, யுகாதி புருடர் என்று பல திருநாமங்களால் அழைப்பர். இந்த யுகத்துக்கு முதலில் தோன்றி, மக்களுக்கு முதன்முதல் வாழ்க்கை நெறி. வாழும் கலைகள், எண் எழுத்துக்கள் முதலானவற்றை முதன்முதல் கற்றுத் தந்தவர். அத்துடன் பிறவியிலிருந்து விடுபடும் நெறியைக் கூறியதுடன் நின்று காட்டிய வருமாவர். எனவே இவர் ஆதிபகவன் எனப்பட்டார். இவரைப் பற்றிய தெளிவான குறிப்புகள் வேதங்களிலும், புராணங்களிலும் கூட காணப்படுகின்றன. இதனால் இவர் வேத காலத்திற்கு மிகவும் முற்பட்டவர். இதை வரலாற்று அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆதியெனில் முதன்முதல் என்றும், பக எனின் ஞானம் என்ற பொருளும் உண்டு. இத்துடன்அன்விகுதி சேர்த்து ஆதிபகவன் என்றாகி; இந்த யுகத்தில் முதல்முதல் வாலறிவை (கேவலஞானம் - முழுதுணர் அறிவு) பெற்றவர் என்று போற்றப்பட்டார். இதனையே தொல்காப்பியரும் 'வினையின் நீங்கி விளங்கிய அறிவன்' என்றார். அதாவது வேண்டுதல் வேண்டாமை (ராகத்வேஷம்) எனும் அகவினை

வழிசேர்ந்த ஞானாவரணீயம் முதலான புறவினைகளை நீக்கியவன் என்பதாம்.

மேலும் குறளாசிரியர் இறைவனைக் குறிப்பிடும் அடைமொழிகள் இருகருத்துக்களைத் தெளிவுபடுத்துகின்றன. தோற்றமுதலே ஒருவர் கடவுள் தன்மையோடு உள்ளார் என்ற நித்தியக் கடவுள் கொள்கையை மறுக்கின்றன. அடுத்து கடவுள், இறைவன் என்று ஒருவனைப் போற்ற இன்னின்ன லட்சணங்கள் இருப்பது இன்றியமையாதது என்றும் வலியுறுத்தியுள்ளார். அவர் கடவுள் வாழ்த்தில் இறைவனுக்கு ஒரு இலக்கணமே வகுத்துள்ளார் எனலாம்.

இன்று சிவனை வணங்குவோர் சைவர், விஷ்ணுவை வணங்குவேர் வைணவர், புத்தரை வணங்குவோர் பௌத்தர் என சமயங்கள்ஒருவர் பெயரால் அழைக்கப் படுகின்றது. ஆனால் ஜைனம் ஆதிபகவன் முதல் மகாவீரர் வரையிலான இருபத்திநான்கு ஜிநர்களின் பொதுப் பெயரால் ஜைனர் என்று அழைக்கப்படுகின்றனர். இவ்விருபத்தி நால்வரும் நம்மைப்போல் இருவினைகளின் வழி பிறவியில் உழன்று, துன்புற்று, மெய்ப்பொருள் தேர்ந்து, பிறவிக்குக் காரணமான வினைகளை வென்று, நின்று காட்டி, பிறவா நிலையாம் முக்தியை அடைந்து பரமாத்ம நிலையில் உயர்ந்தவர்கள். இவர்களே ஜைனர்கள் வணங்கும் பகவான், இறைவன், ஜிநன் என்று போற்றப்படுபவர்கள். இவர்கள் நமக்குப் போதித்த, எல்லா உயிர்களும் அந்நிலை அடைய காட்டிய அறநெறிகளே 'தர்மம்' எனப்படுகிறது. இவர்களாக எதையும் கற்பனை செய்து கூறவில்லை. என்றும்

நிலையாக உள்ளனவற்றைத் தங்களின் வினைவென்று விளங்கிய 'வாலறிவால்' அறிந்து; உலக உயிர்கள் உய்ய போதித்தவர்கள். இவர்கள் இல்லாததை தோற்றுவித்தவர்கள் அல்ல. இருப்பதை அறிந்து போதித்தவர்கள். போதித்தவழி நின்றும் காட்டியவர்கள்.

நம்மைப்போல் மனைவி மக்கள், நண்பன் பகைவன், வேண்டுதல் வேண்டாமை, காமம் குரோதம் ஆகியவற்றில் சிக்கி உழல்பவன், நம்மைப் போன்று வரம்பிற்கு உட்பட்ட அறிவை உடையவன், பின்விளைவை அறிய இயலாது வரம், சாபம் தருபவன், ஒன்று உலகிற்கே ஒளி வழங்கிக் கொண்டிருக்கிறது. அவ்வொான்றெது? அதுவே திருவள்ளுவர் என்னும் வான் மணி. "வள்ளுவன்தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு'' என்றார் பாரதியாரும்.இகழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் வசப் பட்டவன் இத்தகையவர்களை இறைவனாக ஏற்க முடியுமா? குறையிலே உழல்பவர் பிறர் குறைகளை நீக்க முடியுமா? எனவே அனைத்திலும் நம்மினும் உயர்ந்தவர், குற்றங்கள்இல்லாதவர், விருப்புவெறுப்பு அற்றவர், குணத்தால் நிறைந்தவர், அவனே இறைவன். இதனால் தான் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ 'தெய்வம் தெளிமின்' என்றார், தொழுமின் என முதலில் கூறவில்லை. இதற்கேற்ப அகளங்கதேவர் தனது இறைவணக்கத்தில்;

**யோ விஸ்வம், வேதவேத்யம் ஜனன ஜலநிதே**
**பங்கின பாரத்ருஸ்வா**
**பௌர்வா பர்யா விருத்தம், வசனமனுபமம்**
**நிஷ்களங்கம் யதீயம்**

**தம் வந்தே சாதுவந்த்யம் சகல குணநிதிம்**
**த்வஸ்த தோஷத் விஷந்தம்**
**புத்தம்வா வர்த்தமானம் சததலநிலயம்**
**கேசவம்வா சிவம்வா**

*(க.து.) உலகின் அனைத்துப் பொருள்களையும் அறிபவன் (வாலறிவன்), பிறப்பு இறப்பு எனும் அலைகடலைக் கடந்தவன் (பிறவாநிலையை அடைந்தவன்) உவமையற்ற, குற்றங்களில்லாத, முரண்பாடற்ற சொற் களை உடையவன், சாது புருஷர்களால் வணங்கப் படுபவன். குணக்கடலாக விளங்குபவன், குற்றங்களை முழுதுமாகக் களைந்தவன் எவனோ அவனை நான் வணங்குகின்றேன். இக்குணங்களையுடையவன் புத்தன், வர்த்தமானர், விஷ்ணு, சிவன், கேசவன் என்று எப்பெயரால் அழைக்கப் பட்டாலும் அக்குணங்கள் இருத்தல் வேண்டும் இதனால் ஜைனம் கடவுளை அவரது குணங்கள் கொண்டே போற்றுவது அறியலாம்.*

இதேபோல் தார்க்கிக சூடாமணி ஆசார்யர் சமந்த பத்திரர் தமது ஆத்மமீமாம்சாவில் இறைவனது இலக்கணத்தை வரையறுக்கின்றார். இந்நூலுள் சமயக் கடவுளர்கள் அனைவரும் ஓர் அணியாக நின்று தங்கள் பெருமைகளைக்கூறி தங்களை வணங்கலாம் என்கின்றனர், அவர்கள் கூறுவனவெல்லாம் இறைவன் தன்மைக்குப் பொருந்தாததோடு தனக்குப் பாதகமாக உள்ளதைச் தர்க்கரீதியாக சுட்டிக்காட்டி வணங்க மறுத்து விடுகின்றார். இறுதியில் மகாவீரர் தோன்றி கூறுவது போன்ற ஒரு கற்பனை காட்சி. “நான் வான்வழி நடக்கின்றேன், தேவரெல்லாம் வணங்குகின்றனர்.

வெண்சாமரம் வீசுகின்றனர். தாமரைமீது பாதம் படியாமல் செல்கின்றேன். எனவே என்னை வணங்கலாம்" - என்கிறார். சமந்தபத்திரர் "இவைகளை மாயாஜாலக்காரன் கூட செய்யலாம். இக்காரணங் களுக்காக நீவணக்கத்திற்குரியவனாகாய்." என்கிறார். 'அப்போது நீ வணங்கப்படும் தெய்வம் யார்? என;' நீதான் என்றுகூறி சொல்லுகின்றார்;

**ஸத்வமே வாஸி நிர்தோஷோ யுக்தி சாஸ்த்ரா**
**விரோதிவாக்!**
**அவிரோதோ யதிஷ்டம்தே ப்ரசித்தேன ந பாத்யதே!**

*- ஆப்தமீமாம்சா.*

நீ குற்றமற்றவன். உன்னால் சொல்லப்பட்ட சொல்லில் (ஆகமங்களில்) முரண்பாடில்லை. குற்றமுள்ள வனுடைய (ராக உணர்வு) சொல்லில் முன்னுக்குப்பின் முரண்பாடு இருந்தே தீரும். அத்தகைய குறையில்லாததால் நீயல்லால் நான் வணங்கப்படும் தெய்வம் வேறு யார்? என்றார்.

இதுவரை பார்த்த சிறிய விளக்கமே விருப்பு வெறுப்பற்ற இறைவனையே - அருகனையே - குறளாசிரியர் போற்றுகின்றார் என்பதை அறிந்து கொள்ளலாம்.

இனி வேண்டுதல் வேண்டாமை பற்றி பார்ப்போம். இதை விருப்பு - வெறுப்பு, ராக - துவேஷம், பரிக்ரஹம். இதன் வழியாகத் தோன்றும் ஆசை வெகுளி மயக்கம் என்று கூறுவர். இந்த பரிக்ரஹம் இருவகை. அக, புற பரிக்ரஹங்கள் என்பன.

உலகில் நாம் காணும் பொன் பொருள் மனைவி மக்கள், வீடுவாசல், சுற்றம் நட்பு இது போன்ற கணக்கற்ற பொருள்கள் மற்றும் இந்த உடல். இவைகளைக் காணும்போது நமக்கு அனுகூலமானவற்றில் விருப்பும், பிரதிகூலமானவற்றுள் வெறுப்பும் தோன்றுகிறது. இதுவே ராகத்துவேஷமாகும். இத்தகைய புறப்பொருள்களைப் புறப்பரிகிரஹம் என்றும், அவைகளின்பால் தோன்றும் உணர்வுகளை அகப்பரிக்ரஹம் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன. அதாவது ஆன்மாவில் தோன்றும் ஆசை, வெகுளி, மயக்கம் மற்றும் கஷாயவடிவ பரிணாமங்கள் அனைத்தும் அகபரிக்ர ஹங்கள்.

நான் (ஆன்மா) அல்லாத உடல் முதலியவற்றை நான் என்று தவறாக எண்ணுவது அஹங்காரம், (அஹம் பின்னே வஸ்துன் அஹம் இதி புத்தி; அஹங்காரம்). எனது (ஆன்மா) அல்லாத மனைவி, மக்கள், பொன், பொருள், வீடு போன்ற புறப்பொருள்கள் என்னுடையது என்ற எண்ணம் மமகாரம். (மம பின்னே வஸ்துனி மம இதி புத்தி: மமகாரம்.) இதையே 'யான் எனது எனும் செருக்கு என்றார் குறளாசிரியர். இதனால் இருவகை பரிக்ர கத்தையும் புரிந்து கொள்ளலாம்.

தத்துவார்த்த சூத்திரம் 'மூர்ச்சா பரிக்ரஹ:' என்கிறது. அதாவது மமத்துவ பரிணாமம் பரிக்ரஹம். இது அகபரிக்ரஹம். இதையே குறளாசிரியர் 'வேண்டுதல் வேண்டாமை' என்றார். இப்பரிக்ரகமே பற்று எனப் படுவது. ஆச்சார்யர் குணபத்திரர் தமது ஆத்மானு சாசன நூலில்;

**ராகத்வேஷெ ப்ரவ்ருத்திஸ்யாத்**
**நிவ்ருத்தி: தன்னி ஷேதனம்!**

**தௌச பாஹ்யார்த்த சம்பந்நௌ**
**தஸ்மாத்தான் சுபரித்யஜேத்!! (237)**

வேண்டுதல் வேண்டாமை (ராக துவேஷம்) இரண்டையும் பிறவிமார்க்கம் என்றும், இவை தோன்றாத நிலையைப் பிறவியிலிருந்து விலகும் முக்திநெறியென்றும் விளக்குகின்றார். இப்படி பல்வேறு நூல்களில் அகபரிக்ஹத்திற்கு முக்யத்துவம் கொடுத்துள்ளனர்.

இந்த உலகம் ஜீவன், புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாயம், காலம் என்ற ஆறு மெய்ப்பொருள்கள் நிறைந்தது. இவை ஒவ்வொன்றும் தம்தம் அஸ்தித்வ (இருத்தல்) தன்மையால் அனாதியாக உள்ளது. அனந்தகாலம்வரை தொடர்ந்து இருந்துவரும். இவைகளை ஆக்கியவர்களும் இல்லை. அழிக்கவும் முடியாது. சுதந்திரமானவை. ஒன்றின் இயல்பில் மற்றொன்றின் குறுக்கீடும் இருக்க முடியாது. இவைகளில் ஜீவன் ஒன்றே அறியும் தன்மையுடையது. நன்மை தீமைகளை உணரும் தன்மையுடையது. எனவே தனது தனித்தன்மையைப் பெற பிறபொருள்களின் தொடர்பிலிருந்து ஒதுங்க வேண்டியது ஜீவனே. அதுவே முக்தி. இந்த ராக துவேஷ (வேண்டுதல் வேண்டாமை) விகார உணர்வுகளை - தனது இயல்பில்லா உணர்வுகளை - வென்றவன் ஜிநன். (ராகத்துவேஷாதீன் ஜெயதீதி ஜிந:). இதையே இறைவனுக்கு அடைமொழியாக்கி 'வேண்டுதல் வேண்டாமையிலான்' என்று குறளாசிரியர் கூறியுள்ளார்.

அடுத்து ஜீவன் இந்த விபாவ (இயல்பல்லா) குணமாகிய வேண்டுதல் வேண்டாமையை ஒரே சமயத்தில் எளிமையாக நீக்கிவிட முடியாது. காரணம்

ஜீவன் அநாதிகாலமாக தவறுகளில் உழன்றுவருவதே. இதை உணர்ந்த ஆதிபகவன் இவற்றினின்றும் முறையாக விலகும் மார்க்கத்தை அவரவரர்கள் ஆற்றல், மனவலிமைகளுக்கு ஏற்றவாறு இரண்டாக வகுத்துப் போதித்துள்ளார். அவையே இல்லறம், துறவறம் என்பன. இவைதாம் 'யாண்டும் இடும்பை இலாத' நிலைக்கு வழியாம்.

இவ்விரு அறங்களுக்கும் அஹிம்சையே அடிப்படை. இதனால் 'அஹிம்சா பரமோ தர்ம:' என்றனர். இக் கொல்லாமையைக் காக்கும் வேலியாக பொய்யாமை கள்ளாமை, காமமின்மை, அபரிக்கிரகம் என்ற நான்கையும் அமைத்துள்ளனர். இவைகளை இல்லறத்தான் குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்டு கடைபிடிப்பதால் அணுவிரதம் என்றும், இவைகளை முழுமையாகக் கடை பிடிக்கும் துறவறத்தார்க்கு மஹாவிரதம் என்றும் கூறுவர். துறவறத்தில்தான் 'அபரிக்ரகம்' - பற்றின்மை முழுமை பெறுகிறது

**ராகாதீனாம் அனுபத்திரேவ அஹிம்சா**
**தோஷமேவோத்பத்தி : இம்சா இதி ஜிநாகமஸ்ய**
**சம்க்ஷேபக்** - புருஷார்த்த சித்தி உபாயம்.

ஆன்மாவில் ராகம் முதலானவற்றின் தோற்றமே இம்சை. அதனினின்றும் தப்புவதே அஹிம்சை என்று ஜிந ஆகமங்கள் கூறும். மேலும் புறப்பொருள்கள் பரிக்ரகம் அல்ல. அவைகளின் மீது தோன்றும் வேண்டுதல் வேண்டாமை உணர்வே பரிக்ரகம் என்று அழைக்கப் படுகிறது. இவ்வாறு ராகத்துவேஷமே வினைகளுக்குக் காரணமாயும், அவ்வினைகளே

பிறவிக்குக் காரணம் என்பதை உணர்ந்து, ராகத்துவேஷத்தை வென்று வேண்டுதல் வேண்டாமை இலாதவனாய் நமக்கும் அம்மார்க்கத்தைக் காட்டிய ஜிநனே குறளாசிரியர் வழிபடும் கடவுள் என்பதைத் தெளிவாக உணரலாம்.

நிறைவாக ஆதிபகவனே 'வேண்டுதல் வேண்டாமை' இலான் என்று உறுதிப்படுத்தி நானாக எதையும் எழுத வேண்டிய அவசியம் இல்லை என்று உணருகிறேன். மற்றவர்கள் கூறும் கடவுள் தன்மையையும், குறளாசிரியர் கடவுளுக்குக் கூறும் அடைமொழிகளையும் குறிப்பாக 'வேண்டுதல் வேண்டாமை யிலான்' என்பதையும் தெளிவாக நோக்கின் திருக்குறள் கடவுள் வாழ்த்து ஆதி பகவனையே ஜிநனையே போற்றுகிறது என அறியலாம்.

என்கருத்தாகச் சில கூறுகின்றேன். ஆதிபகவன் எவற்றையெல்லாம் விலக்கத்தக்கது என்று கூறினாரோ; அதாவது ஆசை, வெகுளி, மயக்கம், கஷாயம் உடற்பற்று, வேண்டுதல் வேண்டாமை, மனைவி, மக்கள் துஷ்ட நிக்ரகம் சிஷ்ட பரிபாலனம் போன்றவற்றிற்கெல்லாம் ஒட்டுமொத்த குத்தகைக் காரர்களாக காட்சி அளிக்கும் கடவுளர்களுக்கு வேண்டுதல் வேண்டாமையிலான் என்ற அடைமொழி எவ்வாறு பொருந்தும்? அறிஞர் உலகம் விருப்பு வெறுப்பின்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மேலும் ஜீவன் தன்னை வீதராக நிலைக்கு உயர்த்திக் கொள்ள விரும்புகிறது என்றால்; அந்நிலையை அடைந்தவனை அன்றோ அடைக்கலம் புக வேண்டும். இதைக் குறளாசிரியரே;

பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு (350)

எனக் கூறியுள்ளதால் அறியலாம். இவ்வாறு பற்றற்றவன் ஆதிபகவனே. அவனே வேண்டுதல் வேண்டாமையிலான். அவனே விருஷபதேவன். இதை மேலும் தர்க்கம், பிரமாணம், ஆகமங்கள் வழி விளக்க முடியும். விரிவு அஞ்சி நிறைவு செய்கின்றேன்.

*****

5

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

## இறைவன்

**புலவர் S. தன்யகுமார் M.A.,B.Ed.,**

எல்லா சமயத்தவர்களுமே தங்கள் தங்கள் இறைவனை வணங்குகின்றனர். அதில் பலரும் ஏதோ ஒரு நம்பிக்கையில் இறைவனை வணங்குவதால் தங்கள் துன்பம் விலகும் என்பதற்காகவும், தங்கள் குறைகள் நீங்கும் என்பதற்காகவுமே வணங்குகின்றனர். தங்கள் வேண்டுதலை இறைவன் பூர்த்தி செய்வான் என்றே நம்புகின்றனர். இறைவன் யார்? அவனை ஏன் வணங்க வேண்டும்? என்பதில் அவர்களில் எத்தனைபேர் தெளிவுடையவர்கள் என்று கூறமுடியாது. இறைவன்யார்? அவனை ஏன் வணங்க வேண்டும் என்பதில் தெளிவு வேண்டுமானால் திருக்குறளின் கடவுள் வாழ்த்தில் தெளிவு பெற்றால் போதும்.

திருக்குறளாசிரியர் முதற்குறளில் இவ்வுலகிற்கு ஆதிபகவனே முதல்வன் எனத் தொடங்கி அடுத்துவரும் குறள்களில் அவ்வாதி பகவனாகிய இறைவன் யார்? அவனது குணங்கள் என்ன என்பதைச் சில சொற்களால் சுட்டிக் காட்டுகின்றார். அவ்வாதிபகவன் வாலறிவன்,

மலர்மிசை நடந்தோன், வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன், பொறிவாயில் ஐந்தையும் அவித்தவன், தனக்கு உவமையில்லாதவன், அறவாழி அந்தணன், எண்குணத்தான் என்ற சொற்களால் சுட்டுகின்றார்.

பல சமயத்தவர்களும் திருக்குறளைத் தங்கள் சமயத்தது என்று கூறுவதற்காகக் குறளாசிரியர் இறைவனைச் சுட்டக் கூறிய மேற்கண்ட சொற்களைத் தங்கள் இறை வனைச் சுட்டுவனவே என்று வலிந்துகூறிக் குழப்பத்தைத் தோற்றுவித்தனர். ஆறாவது குறளில் இறைவனை 'பொறிவாயில் ஐந்து அவித்தான்' என்பர். ஒருகாலத்து ஐந்து பொறிகளோடு புலனின்பம் நுகர்ந்து பின்னர் அவைகளைத் தீயது என்று ஐம்பொறிகளின் வழி செல்லும் மனநிகழ்ச்சியை அடக்கினான். ஐம்பொறிகளையும் அகத்தடக்கினான். ஐம்பொறிகளின் வழியாக எழும் ஐந்து அவாவினையும் அறுத்தான் என்றும், நான்காவது குறளில் வேண்டுதல் வேண்டாமை இலான், அதாவது பிறவிக்கு மூலகாரணமான விருப்பு வெறுப்பு எனும் ராகத் வேஷங்களை வென்றவன் என்றும், மூன்றாவது குறளில் மலர்மிசை நடந்தவன் என்றும் கூறுவது ஜைனர்கள் வணங்கும் ஜினனையே என்பது தெளிவு. ஜைன ஆகம நூல்களில் பயிற்சியுடையார் இதை மறுக்காமல் ஏற்றுக் கொள்வர். இவ்வாறே பிற கடவுள் வாழ்த்துக் குறள்களில் இறைவனைச் சுட்டும் சொற்களும் சிறப்பாக அருகனையே சுட்டுவன என்பதில் ஐயமில்லை.

எட்டு குறட்பாக்களில் இறைவனை குணத்தாலும், செயலாலும் சுட்டிக் கூறியவர் ஐந்தாவது மற்றும் பத்தாவது குறள்களில் 'இறைவன்' என்ற பொதுப் பெயராலேயே கூறியுள்ளார்.

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

- இதுவே அக்குறள்.

உண்மையாய் இருக்கின்ற இறைவனது புகழை விரும்பி வணங்கி வழிபாடு செய்கின்றவர்களுக்கு; காதிவினை அகாதிவினை என்று சொல்லப்படும் இரண்டு வினைகளும் சேரா.

மனிதனது குறிக்கோள் - மனிதப் பிறவியால் மட்டுமே இயல்கின்ற செயல் - பிறவியை ஒழித்து பிறவாநிலையை அடைவது. இதைப் பெரும்பாலும் அனைத்துச் சமயங்களுமே கூறுகின்றன. காரணம் பிறவி துன்பம் என்பதாலும், அதை ஒழித்தல் மனிதனால் மட்டுமே ஆவது என்பதாலும் இவனது சீரிய குறிக்கோள் பிறவியை ஒழித்தலே, அம்மட்டுமின்றி அம்முயற்சியை வேறு எந்த பிறவியிலும் செய்ய இயலாது. தேவராலும் பிறவியை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட இயலாது.

பிறவியை ஒழிக்க வேண்டுவது ஏன்? பிறவி உயிரின் துன்பங்களுக்குக் காரணமாவது. பிறப்பு, இறப்பு, பிணி, மூப்பு எனும் துன்பங்களுக்கு உரியது. இப்பிறவிக்குக் காரணம் வினைகள். அவ்வினைகளே உயிர்களைப் பிறவியில் சிக்கிச் சுழல வைப்பவை. அவ்வினைகளை ஒழித்தால் பிறவாப் பேரின்ப நிலையை அடையலாம்.

அவ்வினைகளை இரண்டு வகையாகக் கூறுவர். காதிவினை, அகாதிவினை என்பன. அவை ஆன்மாவின் சுபாவ (இயல்பான) குணங்களை மறைக்கும் வினைகள் காதிவினை. உயிரைத் துன்பத்திற்கு உள்ளாக்குவது. அது ஞான ஆவரணீயம், தரிசன ஆவரணீயம், மோகனீயம், அந்தராயம் என்பன. இந்நான்கும் அகன்றதும் உயிர் தன்னியல்பான, அனந்த ஞானம்

(கடையிலா அறிவு) அனந்த தர்சனம் (கடையிலாக் காட்சி), அனந்த வீர்யம் (கடையிலா வீரியம்), அனந்த சுகம் (கடையிலா இன்பம்) என்பன பெற்று விளங்குகின்றது.

அகாதி வினைகள் என்பன உயிர் பற்பல சரீர தோற்றங்களை எடுப்பதற்குக் காரணமான நாமகர்மம், தேவ மனித விலங்கு நரக ஆகிய நான்கு கதிகளில் பிறந்து தனக்குக் குறிப்பிட்டக் காலம்வரை வாழ்வதற்குக் காரணமான ஆயுள்கர்மம், இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்குக் காரணமான வேதநீயகர்மம், உயர்ந்த அல்லது தாழ்ந்த வம்சங்களில் தோன்றுவதற்குக் காரணமான கோத்திர கர்மம் எனும் நான்காகும்.

இவ்விருவினையும் மயக்கமாகிய இருள் நிறைந்த பிறவியில் உயிரைப் பிறக்கச் செய்தலின் 'இருள்சேர் இருவினை' என்றார்.

இறைவன் யார்? ஜிந ஆகமங்கள் பலவும் இறைவனை அவனது குணங்களை விளக்கமாகக் கூறியிருப்பதைக் காணலாம். கிரியா கலாபம் என்ற நூல்.

யஸ்ஸர்வாணி சராசராணி விவித த்ரவ்யாணி
தேஷாம்குணாந்
பர்யாயாநபி பூதபாவி பவத: ஸர்வாந்ஸதா ஸர்வதா
ஜாநீதே யுகபத் ப்ரதிக்ஷணமதஸ் ஸர்வஜ்ஞ
இத்யுச்யதே
ஸர்வஜ்ஞாய ஜிநேச்வராய மஹதே வீராய தஸ்மை
நம:

எவர் அனைத்துவகை இயங்கு மற்றும் நிலை உயிர்களையும், பலவகைப் பொருள்களையும் அவைகளின் குணங்களையும் முக்கால பரியாயங்கள் முதலான அனைத்தையும் எக்காலத்தும், ஒவ்வொரு சமயந்தோறும் ஒருங்கே அறிகின்றாரோ; அந்த கேவலஞானத்தை (வாலறிவு) யுடைய அவர் ஸர்வக்ஞன், முழுதுணர் ஞானி என்று சொல்லப்படுகின்றார். அத்தகைய கேவல ஞானத்தினால் அனைத்தையும் அறிந்தவரும், வினை வென்றவர் யாவரினும் சிறந்தவராகிய அருகனை வணங்கு கின்றேன் என்கிறார். முழுதுணர் ஞானமும் வினையின் நீங்கி விளங்குவதும் தலையாய இறை குணம்.

**ஸ்ரீமதே ஸகலக்ஞான சாம்ராஜ்ய பதமீயுஷெ!**

**தர்மசக்ரப்ரதே பத்திரதே நம: சம்சாரபீ முஷெ!!**

- என்று மகாபுராண ஆசிரியர் கூறுகின்றார். கேவலஞான பதத்தை அடைந்தவர், பிறவிக்கு அச்சத்தைத் தருகின்றவர், அறஆழியைத் தரித்தவர் என்று போற்று கின்றார்.

**குற்றங் குறைத்துக் குறைவின்றி மூவுலகில்**
**அற்ற மறைத்தாங்கு அருள் பரப்பி - முற்ற**
**உணர்ந்தானைப் பாடாத நாவல்ல அல்ல**
**சிறந்தான் தாள்சேராத் தலை.**

- என்று அறநெறிச்சாரம் கூறியுள்ளதைக் காணலாம். **'பண்ணவன் எண் குணன் பாத்தில் பழம்பொருள்'** என்கிறது சிலம்பு.

பூமாலை முதலாய புனையாத திருமூர்த்தி
காமாதி வென்றுயர்ந்த கடவுள் - என்று

மேருமந்தர புராணம் கூறும். அவரே;

அருகன் நீநல்ல பூசைக் கருகனாய்ப்
பெரியை யாயினை பெண்ணாசை யின்மையால்

என்கிறார்

அருங்கலச் செப்பு இறைவன் இயல்புகளை;
குற்றமொன்று இன்றி குறையின்று உணர்ந்து அறம்
பற்ற உரைத்தான் இறை
பசி வேர்ப்பு நீர்வேட்கை பற்றுஆர்வம் செற்றம்
கசிவினோடு இல்லான் இறை.
கடையில்அறிவு இன்பம் வீரியம் காட்சி
உடையான் உலகுக்கு இறை.

என்று தெளிவாகக் கூறுவதைக் காணலாம்.

குற்றம் ஒன்றும் இல்லாமல் அனைத்துப் பொருள் களையும் குறையில்லாது உணர்ந்து உயிர்கள் பற்றி நிற்கு மாறு அறத்தை உரைத்தவன் இறைவன்.

உலகிலுள்ள வரம்பற்ற பொருள்களை உள்ளது உள்ளவாறே அறிந்து உரைப்பதற்கு விருப்பு வெறுப்பு (வேண்டுதல் வேண்டாமை) அற்றவனாய், முழுதுணர் அறிவுடையவனாய் இருத்தல் வேண்டும். இன்றேல் வாரம்பட்டுழித் தீயவும் நல்லவாம்; தீரக்காய்ந்துழி நல்லவும் தீயவாம் என்ற தன்மையால் குறையுடையதாகிவிடும். அடுத்து கேட்பவர்களுக்கு ஐயம், திரிபு, மயக்கங்களைத் தோற்றுவித்துவிடும். சொல்வதிலும் சரியாக பிறர்மனம் கொள உரைத்தல் வேண்டும். இவ்வாறு உரைத்தவன் இறைவன்.

பிறப்பு - பசி - வருத்தம் - வெறுப்பு - அச்சம்

இறப்பு - தாகம் - சிந்தனை - சோகம் - உறக்கம்

பிணி - ஆசை - வியர்வை - வெகுளி

மூப்பு - வியப்பு - மோகம் - மதம்

எனும் பதினெட்டு குற்றங்களும் இல்லாதவரே உண்மையான இறைவன். உலகியல் உயிர்களிடம் காணப்படும் இந்த குற்றங்களை அருந்தவ யோகத்தால் அகற்றித் தூய நிறைவான குணங்களால் உயர்ந்தவன் இறைவன். உலக உயிர்கள் இக்குற்றங்களால் மறைக்கப்பட்டு உண்மை அறிய இயலாது பிறவியில் உழல்கின்றன. இவைகளில் இருந்து நீங்கி, நீக்க வழி காட்டியவன் இறைவன்.

காதிவினைகள் நான்கையும் கெடுத்து கடையில் (வரம்பற்ற) ஞானம், சுகம், வீரியம், தரிசனம் எனும் அனந்த நான்மையும் பெற்றவன் இறை. இவ்வாறு அருங்கலச் செப்பு இறைவனது இயல்பை சுருக்கமாகக் கூறுகின்றது. இவைகளை உடையவனே அருகன். திருக்குறளாசிரியரும் இத்தகைய இறைவனையே கடவுள் வாழ்த்தில் போற்றுவதைக் காணலாம்.

இக்குறளுக்கு உரை எழுதும் பரிமேலழகரே 'இறைமைக் குணங்கள் இலராயினாரை உடையார் எனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின் அவை முற்றும் உடைய இறைவன் புகழே பொருள் சேர்புகழ்' என்பர். அதையே நான் உண்மை தேறும் நெஞ்சத்தார்க்கு நினைவுறுத்த விரும்புகின்றேன்.

**'உடையும் அறுசுவை ஊணும் ஒண் பூணும்**
**ஒன்னாரை வெல்லும்**
**படையும் படைவிழியாரும் இல்லாத பரம்பரரே.**

*என்று திருநூற்று அந்தாதியார் அருகனைப் போற்றும் முகத்தான் பிற கடவுளர்களின் இயல்பைச் சுட்டிக்காட்டு கின்றார்.*

*வாதகேசரி ஆசார்யர் அகளங்க தேவர் தமது நூலில்;*

பிரம்மா சர்மாக்ஷ சூத்ரி, சுரயுவதிரதா
வேஷ விப்ராந்த சேதா:
சம்பு: கட்வாங்கதாரீ கிரிபதிதனய:
பாங்க லீலானு வித்த:
விஷ்ணு சக்ராயுத: சன்து ஹிதரமகத்
கோபநாதஸ்ய மோஹாத்
அர்ஹன்வித்வஸ்த ராகோ ஜிதபய மரணே
கோயமேஷு ஆப்தநாத:

**- அகளங்காஷ்டகம்.**

*பிரம்மா மான் தோலை அணிந்திருப்பவன், ருத்திராக்ஷமாலை அணிந்தவன். நான்முகன் தேவமாதின் அழகில் மயங்கியவன். ஈஸ்வரன் புலித்தோல் அணிந்து விபூதியோடு திரிசூலம் ஏந்தியவன். பார்வதியின் மோகத்தில் மயங்கியிருப்பவன். விஷ்ணு சுதர்சன சக்கரத்தையுடையவனாய், கோபிகைப் பெண்களின் மோகத்தில் ஆழ்ந்தவன். ஆனால் அருகன் ராக உணர்வை முற்றிலும் கெடுத்து மரணத்தை வென்றவன்.*

இவர்களில் உன் வணக்கத்திற்குரியவர் யார் என்பதை நீயே முடிவு செய்து கொள் என்கிறார்.

திருக்குறளாசிரியரே;

**படைகொண்டான் நெஞ்சம்போல் நன்று ஊக்காது ஒன்றன்**
**உயிர்செகுத்து உண்பார் மனம்.**

என்று உவமை வாயிலாகக் கூறியிருப்பது இறைவனுக்குப் பொருந்தாதோ? இவைபோன்றவற்றினால் திருக்குறள் கடவுள் வாழ்த்து காட்டும் இறைவன் யார் எனத் தெளிவு பெறலாம்.

அடுத்து முன்னர் விளக்கிய இருள்சேர் இருவினையும் ஆதிபகவனாம் அருகனை வணங்குவார்க்குச் சேராவாகும்.

**அருள்புரி அழலஞ்சோதி ஆழியான், ஆதியில்லான்**
**மருள்புரி வினைகட்கு என்றும் மறுதலையாய வாமன்**
**இருள்புரி உலகஞ்சேரா வியன்னெறி பயந்த பெம்மான்**
**பொருள்புரி விழவுகாண்பார் புண்ணிய உலகங் காண்பார்.**

**- சூளா. துறவு.27**

அருள்புரியும் ஒளிவடிவினனான அருளாழி யுடைய வனும், ஆதியந்தம் இல்லாதவனும், உயிர்களை மயங்கச் செய்யும் தீவினைகட்கு என்றும் பகையான வாமனும், அஞ்ஞானத்தை அடைவிக்கும் நாற்கதிகளிலும் சேராத தூயநெறியைத் தெரிவித்தவனும் ஆகிய எம்பெருமானது அறிவுப்பொருள் சேர்ந்த விழவு

காண்பவர் புண்ணிய உலகங் காண்பார். குறளின் 'பொருள் சேர் புகழ் புரிந்தார்' என்ற சொற்றொடரின் பொருளை இப்பாடல் விளக்கு வதைக் காணலாம்.

யசோதரகாவியம் 'இருள்புரி வினைகள் சேரா, இறைவனது அறத்தை எய்தின்' என்கிறது.

**இரிய இருவினைப் பகைவர் இகல்வாட்டி ஐம்புலவெங்**
**கரிய கதக் கடக்களிறு காய்ந்தது நின்னருள்**
**- திருக்கலம்பகம்.**

**உலக மூன்றும் ஒருங்குணர் கேவலத்து**
**அலகிலாத அனந்த குணக்கடல்**
**விலகி வெவ்வினை வீடு விளைப்பதற்கு**
**இலகு மாமலர்ச் சேவடி யேத்துவாம்.**
**- யசோதர காவியம்.**

வினைகளில் இருந்து விடுபட்டு வீடு அடைய அருகாது சேவடியை வணங்குவோம் என்கிறார். இவை போன்றன பல சமண நூல்களில் காணலாம்.

இவை போன்றனவற்றால் இறைவன் யார்? அவனை நாம் ஏன் வணங்க வேண்டும் என்ற வினாக்களுக்கு விடையளிப்பதுதான் திருக்குறள் கடவுள் வாழ்த்து. நேரிய நெஞ்சத்தோடு ஆராய்வார்க்குக் குறள் போற்றும் கடவுள் ஆதிபகவனே என்பது புரியும்.

ஏதோ சமயப் பற்றின் காரணமாக ஒவ்வொரு சமயத்தாருமே தங்கள் தங்கள் கடவுளையே குறளாசிரியர் வணங்கியுள்ளார், குறளாசிரியர் தங்கள் சமயத்தவரே என நிலை நாட்ட முயல்கின்றனர். அது அவரவர்கள்

விழைவு. ஆனால் குறள் சுட்டும் இறைகுணங்கள் தங்கள் தங்கள் கடவுளர்களுக்கு பொருந்துமா என்பதை நேரிய நெஞ்சம் கொண்டு உணர்ந்து தெளிதல் வேண்டும். அக்குணங்களை உடைய இறைவனைத் தாங்கள் வழிபடுவாராயின் அதுவே திருக்குறளுக்குப் பெருமை சேர்த்ததாகும்.

******

6

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

## ஐந்தவித்தான்

பேரா. சி ரே. தன்யகுமார், எம்,எஸ்ஸி., எம்.ஃபில்

"நிலவுலகு எழுந்த நீதியினை அளித்த.

அலகில் பெருங்குணத்து **ஆதிஇடபன்''** திருக்குறளின் முதல் குறட்பாவில் **ஆதிபகவன்** எனப் போற்றப்படுகிறார். அவரது குணப்பேர்கள் அடுத்து வரும் குறட் பாக்களில் விளக்கம் பெறுகின்றன.

திருக்குறள் "ஒன்றாக நல்லது கொல்லாமை" என்ற இலக்கு வாசகத்துடன் எழுந்த நூலாகும்; கொல்லாமையினை வலியுறுத்தி நிலை நிறுத்தவும். தனி ஒரு விரதமாகக் காக்கவும் எழுதப்பட்ட ஒழுக்கவியல் படைப்பாகும். எல்லா சமயங்களிலும் அன்பும். அருளும் பேசப்பட்டாலும். கொல்லாமையும் புலால் உண்ணாமையும் சமயச் சிறப்புக் கொள்கைகளாக - அடையாளப் பண்புகளாக போற்றப் படுவது - பின்பற்றப்படுவது - சமணத்தில் மட்டுமே!

சமண அறவோர்கள் தாம் எழுதும் நூல்களை அவர்களது முன்னோர்கள் காட்டிய வழியில் நெறிதவறாது நூற் பொருள், எடுத்துக் காட்டுகள் ஆகியனவற்றினை மாற்றாமல் - மறைக்காமல் குறைக்காமல் அமைப்பர். மரபாக வரும் நூற்பொருள் அல்லாது கற்பனை கலக்கப்படும் பொழுது அதை வெளிப்படையாகச் சொல்லி விடுவர். இதற்கு எடுத்துக்காட்டாக **நீலகேசி** ஆசிரியரின் **"பண்டு ஆகமத்துப் பயிலா உரை"** என்று தமது நூலினைச் சான்றோர்கள் விலக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதைச் சுட்டலாம்.

மரபு தவறாது எழுதுவதும் தத்துவ அடிப்படையினை அறிவு எனும் உரை கல்லில் உரைத்துக் காட்டுவதும் சமண அறவோர் கருத்தாகும். அவர்களது நூல்கள் **ஐங்குரவர்** எனப் போற்றப்படும் **பஞ்சபர மேட்டிகள்** (அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள்) வணக்கத்துடனோ அல்லது அருகர், சித்தர் வணக்கத்துடனோ துவங்குவது இயல்பு.

பகுத்தறிவிற்கு ஒவ்வாத கற்பனையும் புனைந்துரையும் கடவுள் வாழ்த்திலோ அல்லது தத்துவ விளக்கங்களிலோ கலக்கப்படுவதில்லை. முன்னோர்கள் சொல்லியதையே தாங்களும் எழுதுவதால் பெரும்பான்மையான ஆசிரியர்கள் தங்கள் பெயர்களைக் கூட குறிப்பிடவில்லை. இதுவும் சமண அறவோர் நூல்களின் சிறப்பாகக் கருதப்படுகிறது.

இத்தகைய பாரம்பரியத்தில் வந்த சமண அறவோர் செய்த தனிஅல்லது தொகுப்பு நூலே திருக்குறள்

எனலாம். ஒவ்வொரு சமயத்திற்கும் அதற்கே உரித்தான **தத்துவம், இலக்கியம், சடங்குகள்** என மூன்று சிறப்பு அம்சங்கள் உண்டு. சமண அறவோர்கள் தாம் செய்யும் நூல்களில் இவற்றை வெளிப்படையாக உருவகம் செய்யாமல் அனைவரும் அறியும் வகையில் விளக்குவர் மனிதன் வாழ்வில் கையாளப்பெறும் கற்பனை தத்துவ விளக்கத்தில் காட்டப்படுவதில்லை.

எல்லா சமயங்களின் தத்துவத்திலும் தனிஅம்சமாக விளங்குவது **கடவுள் கொள்கை** ஆகும். சமணத்தில் கடவுளர் **அருகர் சித்தர்**என இருவர் சுட்டப் பெறுவர். மற்ற சமயங்களில் கடவுளர் எனத் தனியே ஒருவரையோ அல்லது பலரையோ கற்பனை செய்து கொண்டு அவர் மீது மனிதப் பண்புகளை ஏற்றி வழிபடுவர். ஆனால் சமணர்கள் மனித உருவில் கடவுள் பண்புகளைப் போற்றித் தாமும் அவற்றை அடைய வேண்டுமென வேண்டி வணங்குவர்.

**இத்தகைய வணக்கமே திருக்குறளில் காணப்படுகிறது.**

சமண தத்துவத்தின் குறிப்பாக கடவுள் கொள்கையின் அடிப்படையாக இருப்பது உயிர் தத்துவமாகும். உயிர் என்றும் அழிவில்லாதது; உயிர்ப் பொருள் கருமத்துகளுடன் இணைந்து பல்வேறு உடல்களை ஏற்று நால்வகை (மனித, தேவ, நரக, விலங்கு) கதிகளில் பிறந்து உழல்கிறது. இந்த இணைப்பு துண்டிக்கப்படுமாயின் உயிர் தூய்மை அடைந்து பரம ஆன்ம நிலை - கடவுள் நிலை எய்தி வீட்டுலகில் என்றென்றும் நிலையாக நீடுவாழும். இந்நிலை எய்திய பின் உயிர் மீண்டும் பிறப்பதில்லை; அவதாரம் செய்வதில்லை. இத்தகைய உயிர்களையே சமணர்

கடவுளராகப் போற்றி வணங்குவர். இத்தகைய உயிர்கள்-சித்தர்கள் உலகின் உச்சியிலுள்ள சித்தசீலா எனும் பகுதியில் எவ்வித மாற்றமும் சலனமும் இல்லாமல் வாழ்கின்றனர். இவற்றுள் அருகநிலை அடைந்து உயர்ந்த சித்த உயிர்களும் அந்நிலை எய்தாமல் உயர்ந்த சித்த உயிர்களும் அடங்கும்.

பிறப்பு ஒக்கும் எவ்வுயிருக்கும்; அனைத்து உயிர்களும் முயன்று முக்தி அடைய முடியும்; சித்த நிலை எய்த முடியும்; என அறிவித்து அதற்கான நெறியினைக் காட்டியவர்கள் **அறப்புணைவோர்கள்** எனப் போற்றப் பெறும் தீர்த்தங்கரர்கள் ஆவர். அவர்களையே **அருகர்** எனப் போற்றி வணங்குவர். பிறப்பில் ஒப்புமையும் சமத்து வத்தையும் சுட்டியவர்கள் ஆன்மீக வாழ்விலும் சமத்துவத்தினை வலியுறுத்தினர்.

சித்த நிலையினை அடையும் வழியாக மும்மணி பாதை (நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம்) யினை வகுத்து அருளினர். இதனைப் பின்பற்றி ஒழுகினால் மாற்று உயிர் எனும் **சம்சார உயிர்** பிறப்பு நீங்கி - தூய்மை அடைந்து **முக்தி உயிராகி** உலகு உச்சி அடைநது நீடுவாழும் என்று காட்டினர். அவர்கள் அடைந்த நிலையினை அவருக்குச் சமமாக - தானும் அடைய வேண்டும் என்பதே கடவுள் துதி - பக்தியின் நோக்கமாகும்.

இந்த முயற்சிக்கு தானம், தவம் என்ற இல்லறம் - துறவறம் எனும் பாதைகளை வகுத்தனர். இது நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் எனும் மும்முனை முயற்சியாகும். இம்முயற்சி **மாற்று, சுழற்சி, பொய், இடர்** எனும் சொற்களால் குறிக்கப்பெறும் பிறவி நோய் நீக்கும் நெறியாகும்.

இத்தகைய நெறியினை - வழியினை - வகுத்து அருளியவர் **ஆதிபகவன்** எனப் போற்றப்பெறும் முதல் தீர்த்தங்கரர் ஸ்ரீ விருஷப தேவர் ஆவார். அவர் வகுத்த வீட்டு நெறி இலக்கணத்திற்கு அவரே இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர். அவரையே திருக்குறள் ஆசிரியர் தேவர் பெருமான் கடவுள் வாழ்த்துப் பகுதியில் நினைந்துப் போற்றுகிறார். இந்த நோக்கில் திருக்குறளின் 6வது குறள் கூர்ந்து நோக்கப்படுகிறது; ஆழ்ந்து சிந்திக்கப்படுகிறது.

"பொறிவாயில் ஐந்துஅவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ் வார்."

இங்கு ஆதிபகவன் **ஐந்து அவித்தான்** எனப் போற்றப் படுகிறார். மற்ற சமயத்தினர் திருக்குறளைச் சொந்தம் கொண்டாடுவதற்கு முன்பிருந்தே சமண அறவோர்கள் திருக்குறளைத் தம் வேதமாக (ஒத்து)ப் போற்றி வந்துள்ளனர்.

சூளாமணி ஆசிரியர் தோலா மொழித்தேவர் திருக்குறளிலிருந்து மேற்கோள் காட்டி, அதனைப் 'புகழ்ச்சி நூல்' எனப் போற்றியுள்ளார்.

இகழ்ச்சி யில்கெடு வார்களை எண்ணுக
மகிழ்ச்சி யின்மனம் மைந்துறும் போழ்து எனப்
புகழ்ச்சி நூலுள் புகன்றனர் ......................
...................... (628)

நீலகேசிக்கு உரை எழுதிய சமயதிவாகரர் எனும் சமண அறவோர் திருக்குறள் கருத்துகளை எடுத்துக்

காட்டும் இடங்களில் "எம் ஓத்து" (ஆகமம்) என்று சிறப்பித்துள்ளார்.

F.W. எல்லீஸ் அவர்கள் குறளுக்கு எழுதிய உரையில் சமண நூல்கள் பலவற்றிலிருந்து மேற்கோள்களைக் காட்டி உள்ளனர்.

சமண அறவோர்கள் செய்த நூல்கள் பலவற்றிலும் குறட்பாக்களோ அல்லது கருத்துகளோ கையாளப் பட்டுள்ளதைக் காணலாம். இது திருக்குறள் காட்டும் நெறி ஆதிபகவன் தந்த நெறி என்பதை உடன்பட்டதால் எழுந்தது.

**ஐந்து அவித்தான்** எனும் தொடர் திருக்குறளில் இரண்டு குறட்பாக்களில் (6,25) ஆளப்பட்டுள்ளது. சில குறட்பாக்களில் ஐம்புலன்களை அடக்குதல் பற்றிப் பேசப் பட்டுள்ளது. எனினும் **அவித்தல்** எனும் சொல்லாட்சி இவ்விரு பாக்களில் மட்டுமே கேவல ஞானம் பெற்றவர் குறிக்கப் பெறுகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

வினைகளை மேலும் சேர்க்காமல் ஈட்டிய வினைகளைக் கெடுக்க வேண்டும் எனில் ஆறு பொறிகளையும், அடக்கல், கெடுத்தல், வசமாக்குதல், விடுதல், வெல்லுதல், அவித்தல் ஆகிய முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும் என்பதே சமணம் காட்டும் வீட்டு நெறியாகும். மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என பொறிகள் ஆறு; இவற்றின் வழி பெறப்படும் புலன்கள் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், எண்ணம் என ஆறாம். இப்பகுப்பு சமண தத்துவத்தின் பாற்படும். பொறிகளை அடக்குவதற்கு தவம் மேற்கொள்ள

வேண்டும். இதன் மூலம் **ஈராறு அடக்கம்** பாவித்தல் அவசியமாகும். இது பிராணி சம்யமம், ஆறு; விஷய சம்யமம் ஆறு என பன்னிரு வகைப்படும்.

ஐம்புலன்களை அடக்குவது, விடுவது, மற்றும் வசமாக்குதல் வீடுபேறு முயற்சியின் படிநிலைகளாகும். இதனால் தீவினைகள் உயிரைச் சேருவதில்லை. ஆனால் புண்ணியம் புணருவதற்கு வாய்ப்பு உண்டு. இது உயிரை நற்கதிக்கு அழைத்துச் சென்று, சில பிறவிகளுக்குப் பின், வீடு அடையும் வாய்ப்பினைத் தரும். புலன்களைப் பரிசக ஜெயம் மூலம் அவித்தலே வீடுபேறு தருவதாகும். இதனையே தீர்த்தங்கரர்கள், முனிகள் மேற்கொண்டனர்; மற்றவர்களுக்கும் போதித்தனர். இவர்களையே திருக்குறளாசிரியர், **குணஸ்தவம்** என்ற துதிவகையால் வணங்குகிறார்.

**ஐந்து அவித்தான்** என்பதைக் கடவுள் வாழ்த்திலும், நீத்தார் பெருமையிலும் குறிப்பிடுகிறார். ஐம்புலன்களின் செறிவு இல்லாமல் இருப்பதே அவிந்த நிலை. இது புறநானூறு பாடலில் "ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர்" என்று குறிக்கப் பெற்றுள்ளது. ஐந்து அவித்தோர் வாலறிவு எனப்படும் கேவல ஞானம் பெறுவர். இதனை உணர்ந்த தேவேந்திரன் பூவுலகிற்கு வந்து சிறப்பு செய்வான். இத்தகைய சிறப்பு முதன் முதலாக ஆதிபகவனுக்குச் செய்யப்பட்டது. அப்பொழுது ஆதிபகவனின் உருவினையும், எழில்மாட்சியினையும் ஜோதியினையும் கண்டுகளிக்க இரு கண்கள் போதாது எனத் தனது **விகுர்வணை** ஆற்றலின் உதவியுடன் - தற்காலிகமாக - ஆயிரம் கண்களை நிருமித்துக் கொண்டு ஆனந்தம் அடைந்தான் என்பது சமண ஆகம அடிப்படை வரலாறு ஆகும். இதற்கு மற்றவர்கள்

காட்டும் விபரீத வரலாறு பொருள் சிறப்பற்றது என்பதை உணரலாம்.

ஆதிபகவன் வினையின் தீர்ந்து விளங்கிய அறிவினைப் பெற்ற பின்னர் வீட்டு நெறியினைத் தந்தார்; வாலறிவு பெற பொறிகளையும் புலன்களையும் அவித்தார்; எனவே அவர் காட்டிய வழி பொய் எனப்படும் சம்சாரத்தினையும்; மித்யை எனும் மாயையினையும் தீர்க்கக் கூடியது பொய்தீர் ஒழுக்கம் எனப் போற்றப்படுகிறது.

இங்கு வேறு ஒரு சிறப்பும் உள்ளதை காணலாம். பொறி - என்பதற்கு நல்வினை என்ற பொருளும் உண்டு என்பதை சீவக சிந்தாமணி சொல்லாட்சி வழி அறியலாம்: "பொறியிலாதேன்" (1726) பொறியின் ஆக்கம் (நல்வினையின் இலாபம்) 1359) பொறிகள் அவிந்த நிலை விருப்பு வெறுப்பு அற்ற நிலை. அந்நிலையில் வெளியிடப்பட்ட நெறி என்பதால் குற்றங்கள் இல்லாதது; குறை இல்லாதது; முழுமையானது, மயக்கம், சந்தேகம் இல்லாதது; பிறவியை அகற்ற கூடியது.

முக்தியை நிச்சயம் தரக்கூடியது என்பதைக் குறிக்கவே பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வார்" என்றார். நீடுவாழ்தல் என்பது முக்தி உயிரின் நிலைத்த தன்மையினைக் குறிக்கிறது. இந்த தத்துவம் - முக்தி ஜீவன் மீண்டும் பிறவாமல் உலகின் உச்சியில் தொடர்ந்து வாழ்வது - சமணத்திற்கு உரியது; இதனை வெளிப் படுத்தியவர் ஆதிபகவன். இந்த தத்துவத்தினை ஒட்டியே குறளாசிரியர் நீடுவாழ்வார் என்றார்.

இத்தகைய நெறியினைத் தந்த ஆதிபகவன் பலவாறாக சமண நூல்களில் போற்றப்படுகிறார்.

நீலகேசி ஆசிரியர் அவித்தல் என்பதற்கு ஏற்ப **"எரிக்கும் வாயில் வரித்தோய் நீ"** என்றும் நீடுவாழ்தலை **"சிதைவில் எண் தன்மையின் நித்திய மாகி நிலையுளது"** என்றும் பாடியுள்ளார்.

தவம் செய்து அறம் விளக்கியவர் சமணர் போற்றும் ஆதிபகவன். வேறு சமயக் கடவுளர் அத்தகைய நெறியினைக் காட்டவும் இல்லை; கடைபிடிக்கவும் இல்லை.

சீவசம்போதனையில்,

**"அருந்தவனாய் அறம் பகர்ந்த அறிவன் நீயே"**

**"பொறிவாயில் ஐந்தவித்தான் புண்ணியன் பொற்பாத நெறி"**

**"பொறிவாயில் ஐந்தவித்த புனிதன் நீயே!**

எனப் போற்றப்பட்டுள்ளார்.

இளங்கோவடிகள் **"ஐவரை வென்றோன்"** என்பார்.

**"பொறிவரம்பாகிய புண்ணிய முதல்வன்"** என்று திருத்தக்கத் தேவர் போற்றுகிறார்.

இக்குறட்பாவின் கருத்தும் - சொல்லாட்சியும் சமண நூல்கள் பலவற்றிலும் எதிர் ஒலிப்பதை உணரலாம்.

**"அருங்கலச் செப்பு"** என்பது திருக்குறள் போன்று குறள் பாவினத்தைச் சார்ந்தது. இந்நூல் ஆசிரியர் இன்னார் என்று அறியக் கூடவில்லை.

பொய்தீர் ஒழுக்கம் என்பதை **"குற்றம் ஒன்று இன்றி"** என்றும் நீடுவாழ்வார் என்பதற்கு,

"உலகம் மறியினும் ஒன்றும் அறியார்
நிலைய நிலை பெற்றவர்"

எனவும் குறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

வாமன முனிவரின் மேருமந்தர புராணம் எனும் தமிழ்க்காவியம், திருக்குறள் ஆசிரியர் எனப் போற்றப் பெறும் ஸ்ரீகுந்தகுந்தரின் பிராகிருத நூலான **"சமயசாரம்"** போன் று கருத்துச் செறிவும் தத்துவ தரிசனமும் உடையது ஆகும். இதில் வரும் பல பாடல்கள் திருக்குறள் பாக்களையும் அவற்றின் கருத்துகளையும் விளக்குவனவாக உள்ளன. சில பாடல்களில் சொற்றொடர்கள் அப்படியே வந்திருப் பதையும் காணலாம்.

பொய்தீர் ஒழுக்கத்தினைக் சுழற்றிதீர் மருந்து, யாதுமோர் குற்றமில்லாநெறி, சேமமுடை நெறி, பந்தம் பரியும் நெறி, பற்றிற் செறிவிலா நெறி எனப் பலவாறாக விவரித்துள்ளார்.

இக்குறட்பாவின் கருத்தினைப் பெரிதும் ஒத்துவரும் பாடல்:

**உறவியைப் பெரிது ஓம்பி ஒழுக்கத்தை நிறுத்தி உள்ளம்
பொறிவழி படர்ச்சி நீக்கிப் பிறர்க்கு நன்று ஆற்றி பொய்தீர்
நெறியினைத் தாங்கி நீங்கா வீட்டின்பம் விழைதல்**
..............................................................................

**மே.ம.பு.(352)**

மேலும் நெறிநிற்றலை **"அறத்தைச் சீலமருவி நின்று ஒழுகல்"** எனவும் விளக்குவார். ஐந்து அவித்தலை உரைகாரர், "மோட்சார்த்திகள் தவம் பொருந்தி, த்யானம்

குலையாமல், சம்யமத்தில் நிற்க வேண்டின் தங்களுக்கு நேரிடும் கஷ்டங் களைப் பரிகரிக்க முயலாது அவைகளை ஸயிக்க வேண்டும்" என்பார். "**அகத்துப் பரிசை மூன்றும் வென்றான்**" எனப் படுகிறது. இதனை பரிசகஜெயம் எனவும் குறிப்பிடுவர். இதனை ஒட்டியே 'பொறியிலா அறிவன் நீயே' (1000) எனப் படுகிறார். இதுவே பொறிவாயில் ஐந்தவித்தான் நெறி நிற்றலாகும். இந்த நெறியில் நின்றால் வீடுபேறு, கைவலம் அடைதல் உறுதி என்பதை

**இணையிலா உலகம் புக்கான் இது**
**அறத்தின் இயற்கை யாமே.** (812)

என்று பாடியுள்ளார்.

நீடுவாழ்வார் என்பதை "**மூவுலகின் உச்சி நிற்றல் கைவலம்**", "**அருந்தவன் திரிந்து வாராக்கதி**" என்று விளக்குதை அறியலாம்.

இதுபோன்று சமணத்தமிழ் நூல்கள் பலவற்றிலும் இக்குறள் கருத்தும் சொல்லாட்சியும் காணப்படுவதை அறியலாம்.

தமிழ்நூல்கள் மட்டுமின்றி சமஸ்கிருத, பிராகிருத நூல்களிலும் காணலாம். திருக்குறள் போன்று "பாகுடம்", "**கரண்டகம்**" ஆகிய சுருக்கமான நூல்கள் பலவற்றினையும் சமண அறவோர்கள் செய்துள்ளனர். அவற்றிலும் இக் குறளின் கருத்து தெளிவு பெறுவதை உணரலாம்.

ஆதிபகவன் அருளிய நெறியினை எப்படி திருக்குறள் **பொய்தீர்** ஒழுக்க நெறி என்று விளக்குகிறதோ அதே போன்று சமஸ்கிருத நூல் "**இரத்தின கரண்டகம்**"

பாடலும் விளக்குகிறது. இதன் ஆசிரியர் சமந்தபத்ரர் உறையூர் வாழ்ந்த சமண அறவோர், இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த அறிஞர் C.R. ஜெயின் விளக்கம் குறிப்பிடத் தக்கது; " ... is that, it is by itself capable of destroying falsehood. This is only natural for it is pecularity of the scientific method which, being commendable to the most exacting and critical intellect, cannot but destroy all forms of error, doubt, ignorance the three constituents of falsehood.

நெறி, அறம், மார்க்கம், ஒழுக்கம், இன்பமாக்கும் சொல், பொற்பாதநெறி, எம் மோத்து என்று போற்றப்படும் "ஆன்மீய அறிவியலை" அளித்து அருளிய ஆதிபகவனே திருக்குறள் கடவுள் வாழ்த்தில் போற்றப்படுகிறார்; அதில் சமணத்தின் கடவுள் கோட்பாடு இடம்பெறுகிறது. இவர் குற்றங்கள் இல்லாத, குணத்தால் நிறைந்த, நல்லார் வணங்கப்படும், பிறப்பு இறப்பு இல்லாத ஒள்நிதிச் செல்வன் ஆவார்.

இக்கருத்தினை, நடுநிலையோடு ஆய்வு செய்த தமிழ் அறிஞர்கள் பலரும் ஆதரித்துள்ளனர். இவர்களுள் மகாவித்வான் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளையினைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இவர் தனது "தமிழ் அன்றும் இன்றும்'' எனும் நூலில், இத்தனை இடர்பாடுகளும் "ஆதிபகவன்'' என்னும் ஆதி தீர்த்தங்கரராகிய சமணரைக் குறிப்பதை மறைக்க வகுத்த வகையால் ஏற்பட்டனவே எனக் கூறலாம்", என்று விளக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஐந்தவித்தான் என்பது சமணக் கடவுளரைக் குறிப்பாக ஆதிபகவன் விருஷபதேவரைக் குறித்து

எழுதியது என்பதை விளக்கப்பட்டது. விரிவஞ்சி மேலும் பல எடுத்துக் காட்டுகளைச் சேர்க்க இயலவில்லை. நடுநிலையான தமிழ் உணர்வோடும் பற்றுடனும் ஆய்வாருக்கு 'ஆதிபகவன்' நெறி புலப்படுவது இயல்பு.

******

7

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

## தனக்குவமை இல்லாதான்

**சிந்தாமணிச் சுடர். புலவர். J. பானுராசன்.**

தமிழ் மொழியில் சிறப்பார்ந்த தனிப் பெருமையோடு விளங்கும் அறநூல் திருக்குறள். மக்கள் இனத்திற்கு மாண்பினைச் சேர்ப்பதும் மற்ற உயிர்களுக்கும் அரணாக அமைவதுமான அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பொருள்களை மூன்று பகுதிகளாகக் கொண்டு அறத்துப் பால், பொருட்பால், இன்பத்துப்பால் (காமத்துப்பால்) என்னும் பெயரில் தமிழினத்திற்கே தனிப்பெருமையைத் தேடித் தந்தது திருக்குறளேயாம்.

பிராக்ரதம், சமஸ்கிரதம் ஆகிய மொழிகளில் நிகரற்ற ஆகம நூல்களை ஆக்கித்தந்த மாமுனிவர், ஆசாரியர் குந்தகுந்தரே இத் திருக்குறளையும் படைத்தளித்துத் தமிழ் மொழிக்கு உலகளாவிய புகழைச் சேர்த்தார் என்பதில் ஐயமில்லை.

இந்நூலின் முதற்பகுதியாகிய அறத்துப்பால், பாயிரம், இல்லறவியல், துறவறவியல் என மூன்று

பிரிவுகளை யுடையது. முதல் பிரிவாகிய பாயிரத்தில் முதல் அதிகாரமாக விளங்குவது 'கடவுள் வாழ்த்து' இவ்வதி காரத்தில் அமைந்துள்ள பத்து குறட்பாக்களும் இறை வனுடைய பல்வேறு தன்மைகளை - சிறப்புக்களை அற்புதமாக எடுத்துரைக்கும் ஆற்றல்பெற்றவையாகும்.

அவற்றுள் **'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் - மனக்கவலை மாற்றல் அரிது'** என்னும் குறளில் குறிக்கப்பட்டுள்ள 'தனக்குவமை இல்லாதான்' என்னும் தொடர்பற்றி ஒரு விளக்கம் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ள பத்து குறட்பாக்களும் சமணர்களால் பயன் கருதி மூல மந்திரமாக ஓதப்படும் 'பஞ்சபரமேட்டிகளில்' அருக பெருமானைப் பற்றியும், சித்தபரமேட்டிகளைப் பற்றியும் சிறப்புற விளக்குகின்றன. அவற்றுள் 'தனக்குவமை இல்லாதான்' என்னும் சிறப்புப் பெயர் அருக பெருமானுக்கே உரியது. எவ்வாறெனின் உவமிக்கப்படும் பொருளும், உவமைப் பொருளும் நன்கு அறிந்தவையாக இருத்தல் வேண்டும். ஆகமநோக்கிலாகட்டும் மற்ற நோக்கி லாகட்டும் தரிசிக்கும் வாய்ப்பினை நல்கிய அருகபெருமான் பெரிதும் போற்றப்படுகின்றார். சித்தர் காட்சிக்கு அப்பாற்பட்டவர், அனுமானித்து உணரும் உயர்நிலை எய்தியவர்.

**கடையிலா அறிவொடு காட்சிவீரியம்**
**கிடையிலா இன்பமும் கிளந்த அல்லவும்**
**உடையதம் குணங்களோடு ஓங்கி விண்தொழ**
**அடைதலான் மேலுலகு அறியப் பட்டதே.**

என்னும் சிந்தாமணிச் செய்யுளும் இதை நன்கு உணர்த்துகின்றது. எனவே, உவமிக்கப்படும் பொருளாகிய சித்தர் காணமுடியாதவராகின்றார். அப்படி இருக்க அவருக்கு நிகராக வேறொன்றைத் தேடுவது தேவையற்ற தாகின்றது.

கட்புலனுக்குக் காட்சிதரும் அருகபெருமானுக்கு நிகர் உலகத்தில் உளதோ! எனத்தேடிப்பார்க்கலாம். மாமுனிவர்களும் இந்திரர்களும் அவருக்கு இணையாக ஒருவருமில்லை ஒருபொருளுமில்லை என்பதை உணர்ந்தனர். எனவே அருக பெருமான் தனக்குவமை இல்லாதவனாகின்றான்.

அருக பெருமான் ஆயிரத்தெட்டு அங்க இலக்கணங்களையும், ஆயிரத்தெட்டு திருப்பெயர் களையும் உடையவர் அவற்றுள் ஒன்றுதான் 'தனக்குவமை இல்லாதான்' என்பது.

இதையே,

'ஒருவனாயினை ஒப்பவரின்மையான்'

என மேருமந்தரமும் - (1300)

'இணையாருமில்லா பெரியோர்க்கு ....'

என திருநூற்றந்தாதியும் (9)

சொஸ்மான் பாது நிரஜனோ 'நிருபமம்'

சர்வர்த்ர சூட்சமச்சிவம்'

என அகளங் காஷ்டகமும் (10) இன்னும் பல்வேறு ஆகமங்களில் 'உவமாதீதன்' எனவும் குறிக்கப் பட்டுள்ளளது.

பொதுவாக இணையற்றவர் நிகராகமூன்று உலகிலுமில்லை எனக் கூறிவிட்டால் மட்டும் போதுமானதன்று. மிகச் சாதாரணமானவர்களும் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் மற்றவர்க்கில்லாத மேலான மாண்புகள் விளக்கம் பெறுதல் வேண்டும்,

ஜைன ஆகமங்களில் அருகப்பெருமானது பெருமையைக்கூறாத இடமே இல்லை எனலாம். எல்லா நூல்களிலிருந்தும் அரியவற்றை எடுத்துரைக்கலாமென்றாலும், அனைத்தும் விளக்கமாக அமைந்துள்ள, ஸ்ரீபுராணம், பதார்த்த சாரம் ஆகிய மிகச் சிறந்த ஆகமங்களில் இருந்து மிகவும் எளிமையாக எடுத்துரைத்தல் போதுமானதாகும்.

இனி அருகபெருமானின் பெருமைகளையும் வைபவங்களையும் அந்நூல்கள் வழிநோக்குவோம்.

புண்ணியங்களிலேயே மிகச் சிறந்ததான தீர்த்தங்கர நாம மகா புண்ணிய கர்மத்தை எய்தியவன் - மாதாவின் மணிவயிற்றில் கருக்கொள்வதற்கு முன்பே இந்திராதி தேவர்களால் போற்றப்பட்டவன், கர்ப்பாவதரணம் என்னும் முதல் கல்யாணத்தைப் பெற்றவன்., அவதரிக்கும் போதே மதி, சுருதி, அவதி என்னும் மூவகை ஞானங்களோடும் தோன்றியவன், ஜன்மாபிஷேகம் என்னும் இரண்டாம் கல்யாணத்தைப் பெற்றவன், இயல்பான அதிசயங்கள் பத்தினை எய்தியவன், உலகம் நலமனைத்தையும் எய்தக் காரணமானவன், அனைத்தையும் துரும்பெனத் துறந்து தீட்சா கல்யாண மெய்தி நிர்வாண தபத்தை மேற்கொண்டு காதிகர்மங்களைக் கழித்தவன், அதன்

பொருட்டு பத்து அதிசயங்கள் தோன்றப் பெற்றவன், மூவுலகத்தையும் - ஒருங்கேஅறியும் வாலறிவு எய்தியவன், கேவலக் ஞான கல்யாணத்தைப் பெற்றவன், தெய்வீகாதிசயம் பதினான்கும் அடையப்பெற்றவன், சமவ சரண வைபவத்தோடு பன்னிரு கணங்களால் சூழப்பட்டு எண்வகைஅற்புதங்களை எய்தியவன், கோடி சூரியப் பிரகாசத்தோடு கூடியபரம ஔதாரிக திவ்ய சரீரத்துடன் திவ்யத் தொனியின் மூலம் பதினெண் மொழிகளில் உயிர் முதலாகிய திரவியங்களின் இயல்பினைஇயம்பியவன், நூறு இந்திரர்களால் வணங்கப் பெற்றவன், இல்லற, துறவற நெறிகளைத் துல்லியமாக உணர்த்தியவன், இதுகாறும் அனந்த சதுஷ்டயங்களுடன் விளங்கி 'பாவ சித்தன்' எனப் போற்றப்பட்டு எஞ்சிய கர்மங்களையும் கெடுத்ததால் எண்வகை குணங்களுடன் மூவுலகுச்சியை எய்தியவன் பரிநிர்வாணம் எனும் கல்யாணத்தைப் பெற்றவன் என்றென்றும் - நிலைத்து நின்று இறைவனாகியவன்.

மனிதப் பிறவியில் தோன்றி இத்தகுதகுதிகளை எய்தி உயர்ந்து நின்று, தனக்கு நிகர் வேறு - ஒருவரில்லை என்பது உறுதியானதால்,

'தனக்குவமை இல்லாதான்' எனப்போற்றப்படு கிறான். இத்தகையோன் மேற்கொண்ட நெறியை ஏற்று இறைமை எய்த முயற்சிப்பதுதான் மனிதப் பிறவியின் பயன்.

எத்தகைய பிறப்பாயினும் துன்பமல்லது பிறிதில்லை அத்தகு பிறவித்துன்பத்தைப் போக்க வேண்டுமாயின் இறை வழி நடத்தல் வேண்டும்.

இல்லையேல் மனக்கவலை மாறாது தொடரும், வேறுமுறையாலும் மாற்ற இயலாது என்பதைத் தெளிவாக உரைக்கும் குறள்தான்.

> **தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந் தார்க்கல்லால்**
> **மனக்கவலை மாற்றல் அரிது.**

என்பதாகும்.

******

**8** அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

## அறவாழி அந்தணன்

**பேரா. Dr. கனக. அஜிததாஸ்,** M.Sc., M.Phil., D.H.Ed., Ph.D.,

*திருக்குறள் என்ற ஒப்பிலா நூல் மெய்ப்பொருள் காட்டி உயிர்களனைத்துக்கும் அரண் செய்து வழிகாட்டும் ஓர் உயிர்த்துணை நூல். துன்பங்களின்று விடுதலை காண வழிகள் கூறும் உபாய நூல்; மனிதனை எவர்க்கும் - ஏன்? இறைவர்க்கும் அடிமையில்லை என்று சிந்திக்க வைத்துத் தன்முயற்சி யாளனாக்கும் உறுதி உரைக்கும் நூல். இத்தகு சிறப்பு வாய்ந்த திருக்குறள் போற்றும் நெறி எது? போற்றும் கடவுள் யார்? என்பதை அறிய கடவுள் வாழ்த்தில் முதலில் புகுவதைத் தவிர்த்து உட்புகுதல் வேண்டும். ஏனெனில் திருக்குறள் வாழ்த்தில் குறிப்பிடப்பட்டுள்ள வணக்கத்திற்குரிய பெயர்களில் திருக்குறள் போற்றும் நெறிகள் அடங்கியுள்ளன. திருக்குறள் நெறியை உள்ளவாறு அறியாதவர்களுக்கு இப்பெயர்களில் அடங்கியுள்ள மறைபொருள் அறியப்படாத ஒன்றே!*

கொல்லாமை, வாய்மை, புலால் உண்ணாமை, உயிர்ப்பலி ஓம்பாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, அவாவறுத்தல், மிகுபொருள் விரும்பாமை, உழவின் மேன்மை, இருவினை, தவத்தின் மாட்சி, தீவினையஞ்சுதல், தவமுடையார்க்கு உடம்பும் மிகை என்ற திகம்பரத் துறவு முதலானவற்றையெல்லாம் பட்டியலிட்டுப் பரத கண்டத்தின் சமயங்களில் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு மேற்குறிப்பிட்ட கொள்கைகளை முன்னுக்குப் பின் முரண் என்பதே இல்லாமல் முக்காலத்தும், எவ்விடத்தும் முழுதுமாகத் தம் நெறியின் அடிப்படை - அச்சு இவை என உறுதிபடக்கூறும் தகுதி படைத்த சமயம் எது என வினவினால் ஒரே ஒரு நெறியினர் - அருகர் நெறியினர் மட்டுமே - இக்கொள்கைகள் எமது எனக் கூறமுடியும். அஃது அறவாழி அண்ணலாகிய ஆதிபகவன் காட்டிய நெறியாகும்.

திருக்குறளின் சுவடுகள், திருக்குறளார் வழி வந்த நூல்களில் - சிலம்பில், சிந்தாமணியில், சூளாமணியில், நாலடியில், அறநெறிச் சாரத்தில், அருங்கலச் செப்பில், ஏலாதியில், சிறுபஞ்ச மூலத்தில், வளையாபதியில், மேருமந்தரத்தில், ஸ்ரீபுராணத்தில், மகாபுராணத்தில், இரத்தினகரண்ட சிராவகாசாரத்தில், சமயசாரத்தில், தத்வார்த்த சூத்திரத்தில் என எல்லாவற்றிலும் அருக - நெறி நூல்கள் அனைத்திலும் மிகத் தெளிவாக உள்ளன. சிலவற்றில் திருக்குறளின் அதிகாரங்கள் அப்படியே உள்ளன! அருக நெறியினர்க்கு இதுவியப்பல்ல! திருக்குறளின் சுவடுகள் - திருக்குறளின் பிரதி பிம்பங்கள் பின்னரெழுந்த சமண நூல்கள் அனைத்தும். அப்படியெனில் திருக்குறள்? ஆம்! ஆதிபகவன், அறவாழி

அந்தணன் உரைத்த அறநெறிகளின் பிரதிபிம்பமே திருக்குறள்! எனவேதான் திருக்குறளின் ஆசிரியர் - தம் பெயர் குந்தர் குந்தர் என்றபோதிலும், ஆக்கியோன் தான் எனத் தன்பெயரிடாது பேரறம் புரிந்தார்! என்ன? ஆம்! ஆதிபகவனே; அறவாழி அந்தணனே திருக்குறளின் மூலாசிரியன்! பேராசிரியன்!

இனி, 'அறவாழி அந்தணன்' என்ற பெயரின் மறை பொருளையும், இப்பெயருக்குரிய பெரியோன் யார்? என்பதையும் காண்போம். திருக்குறள் போற்றும் இறைவனது பெயர்கள் அருகநெறியினர் நன்கு அறிந்தவையாகும். நாள்தோறும் செய்யப்படும் வழிபாட்டில் கையாளப்படும் சொற்களே இவை. ஜினாலயங்கள் சிலவற்றில் எழுந்தருளியிருக்கும் அருகப் பெருமானது பெயர்களில் (ஆதிபகவன். ஆதிபட்டாரகன், ஆதிநாதன் எண்குண இறைவன்), தத்தம் குழந்தைகளுக்கு சூட்டி மகிழும் பெயர்களில் திருக்குறள் பெயர்களும் (ஆதிநாதன், அறவாழி) உள்ளன. திருக்குறள் இறைவன் பெயர்கள் சமணர் நூல்களில் எல்லா மொழி நூல்களிலும் மிகவும் சரளமாகக் கையாளப்படும் பெயர்களே.

> **அறவாழி யந்தணன் தாள் சேர்ந்தார்க்(கு) அல்லால்**
> **பிறவாழி நீந்தலறிது.**

என்பது அருகப் பெருமானை நன்றியின் பொருட்டுத் தேவர் பெருமான் போற்றி வணங்கும் பாடலாகும்.

அறவாழி என்பது யாது? அறவாழி என்பதற்கு அறக்கடல் என்றும் அருட்சக்கரம், தரும சக்கரம் என்றும்

இருபொருள்கள் தரப்படுகின்றன. திருக்குறளாசிரியர், இங்குக் குறிப்பிட்டுள்ளது அருட்சக்கரத்தையே என்பது கீழ்க்கண்ட பலகாரணங்களால் தெளிவாகிறது. இச்சான்றுகளை அறிந்து கொள்ள ஊகமோ, ஆழ்ந்த சிந்தனையோ, பிறர்கூறுவதில் நம்பிக்கையோ தேவையில்லை. நேரடியாக, தம் கண்களால் பார்த்து உண்மையை அறிந்து கொள்ளலாம்! என்னதாம் அச்சான்றுகள்? இந்த அறவாழி என்பது எல்லா ஜினாலயங்களிலும் (அருகப்பெருமான் ஆலயங்களில்) உலோக பிம்பமாக சமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. இதனைத் தரும சக்கரம் என்பர். இது ஜிநதருமமத்தின். அருக நெறியின் பிரதி பிம்பமாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு ஜினாலயத்திலும் நவதேவதை (அ) உயரிய ஒன்பது என்ற வழிபாடியற்றப்படும் படிமங்கள் உள்ளன. இந்த உயரிய ஒன்பதாவன: அருகர். சித்தர், ஆச்சாரியர், உபாத்தியாயர், சர்வ சாதுக்கள் ஆகிய பஞ்ச பரமேஷ்டிகள், ஜிநதருமம் (தருமசக்கரம்) ஜிந ஆகமம், ஜிநர் படிமம். ஜினாலயம் என்பனவாகும். இவற்றில் ஜிநதருமம் என்பது தரும சக்கரமாகவே உருவகப்படுத்தப் பட்டுள்ளதை நேரடியாக, கண்களாற் கண்டு அறிந்து கொள்ளலாம். வழிபட ஓதும் மந்திரங்களைக் கேட்டு உண்மையைத் தெளியலாம். எனவே அறவாழி என்பது தருமசக்கரம். அருகர் நெறியின் பிரதி பிம்பம் என்பதே உண்மை. இதுமட்டுமன்றி, தரும சக்கரம் என்பது தனிப்படிமமாகவே உருவாக்கப்பட்டுச் சிறப்புச் செய்யப்படு வதையும் இன்றும் ஜினாலயங்களில் காணலாம்.

ஜினாலயங்களில் உள்ள கொடித்தூண் (துவஜஸ்தம்பம்) அடிப்பாகத்தில் பொறிக்கப்படும்

திருஉருவங்களில் அறவாழியும் ஒன்றாகும். ஜினாலயங் களில் உள்ள அருகர் படிமைகளின் வலப்புறத்தில், அப்பெருமான் பக்கத்தில் அறவாழி நிறுவப் பட்டுள்ளதைக் கண்கூடாகக் காணலாம். அருகப் பெருமான் திருவுருவம் உள்ள பீடத்தில் அறவாழி பொறிக்கப்பட்டுள்ளதையும் காணலாம்.

*வழிபடும் ஓவியத்தில் அறவாழி:*

தீர்த்தங்கரர் ஆகக் கூடிய வினை பெற்ற மாபெரும் துறவி, வாலறிவு பெற்றவுடன் அருகப் பெருமான் எனப் போற்றப்படுகிறார். அப்போது அவர் அறமுரைத்திட சமவசரணம் என்னும் ஒப்பரிய திருநிலையம் ஏற்படுத்தப் படுகிறது. ஆங்கே அந்தத் திருநிலையத்தின் மையத்தில் அமைந்துள்ள மூன்று மேடைகளில் உச்சி மேடையில் தாமரை மலர் மீது நான்கு விறற்கடை விட்டு மேலே அருகப் பெருமான் எழுந்தருளி அறவுரைபகர்வார். இத்தகு சிறப்பு வாய்ந்த மூன்று மேடைகளில் - அடியில் உள்ள முதல் மேடையின் நான்கு புறங்களிலும், தர்ம சக்கரங்கள் பக்கத்திற்கு ஒன்றாக இருக்கும். இதனைத் தேவர்கள் தாங்கி நிற்பர். (மஹாபுராணம், ஸ்ரீபுராணம், கிரியாகலாபம், மேருமந்தரபுராணம்) இந்தச் சமவசரண அமைப்பு ஜைனர்களின் இல்லங்களிலும், ஜினாலயங்களிலும், திருமலை போன்ற மலையில் உள்ள குகை ஓவியங்களிலும் காணலாம். சமவசரணம் வழிபாடு செய்யப்படுவதை, வணங்கப்படுவதைத் திருக்குறள் ஆராய்ச்சி அறிஞர்கள் தம் கண்களால் கண்டு மகிழலாம் - மேலும், அருகப்பெரு மானாகிய அறவாழி அந்தணன், ஆதிபகவன் அறஉரை பகர பல இடங்களுக்கும் எழுந்தருளும்போது அவர்முன் அறவாழி செல்லும்

என்பதைச் சமண சமய சமஸ்க்ருத, தமிழ் நூல்கள் விவரிக்கின்றன. இவ்வாறு அறவாழி என்பது தருமசக்கரமாக, அருட்சக்கரமாக, அருகப் பெருமானுடைய மங்கலச் சின்னங்களில் ஒன்றாக, பொருள் கொள்ள அழுத்தந்திருத்தமாக ஆதாரங்கள் பல உள்ளன. ஊகத்துக்கு இடமின்றி, நேரடியாகக் கண்டு அறிந்து கொள்ளக் கூடிய ஆதாரங்கள் இவை. எனவே அறவாழி என்பது அருட்கடல் அறக்கடல் என்று உரைப்பது. இங்கு, திருக்குறளில் பொருத்தமாக இல்லை. 'கௌ' என்றபதத்திற்கு நீர், வாக்கு, பூமி, பசு, திக்கு, மயிர், வஜ்ரம், ஆகாசம், அம்பு, கிரணம் ஆகிய பல பொருள்கள் இருப்பினும் வழக்கத்தில், பழக்கத்தில் இருப்பதைக் கொண்டு 'பசு' என்று பொருள் கொள்வதுதானே சிறப்பு; உயிரின் குணங்கள் பலவாயினும் அதனைக் குறிப்பிடும்போது 'அறிவுள்ளது' என்று கூறுவது தானே சாலப் பொருந்தும். எனவே திருக்குறளில் ஆளப்பட்டுள்ள அறவாழி என்ற சொல் தருமசக்கரத்தையே குறிக்கும் என்பதில் ஊகத்திற்கு சிறிதும் இடமில்லை. திருக்குறளாசிரியர் அருகநெறியாளர். அவர் முன்னோர் அருகப் பெருமானை எவ்வாறு கண்டனரோ, சிறப்பித்தனரோ, வியந்து வாழ்த்தினரோ அவ்வாறே இவரும் தன் ஒப்பற்ற ஞானத்தினால் அருகப் பெருமானை காண்கிறார் சிறப்பிக்கிறார் - வாழ்த்துகிறார். திருக்குறளாசிரியர் பின் வந்த அருகநெறியினரும் இவர் போன்றே இன்றும் ஆதிபகவனை அறவாழி அண்ணலாகவே காண்கின்றனர், சிறப்பிக்கின்றனர், விதந்து போற்றுகின்றனர். பரிமேலழகரும், பிற சான்றோர்களும் அறவாழி என்பதற்கு வேறு பொருள் உரைக்கிறார்களெனில் அது 'அறிபவருடைய அபிப்ராய'மாகும்.

திருமால் கரத்தில் ஆழி உள்ளதே! அது அறவாழியாகாதோ? என்று கருதுவது இயற்கையே! திருக்குறள் கூறும் நெறி 'தவத்தோர்க்கு உடம்பும் மிகை' என்ற முழுத்துறவு நெறி! இப்படியிருக்க, பகையாக எண்ணும் சில உயிர்களை வதை செய்யவே திருமால் கையிலேந்தப்பட்ட ஆழியைத் திருக்குறளார் குறிப்பிடுவது எங்ஙனம்? எனவே திருக்குறளாசிரியர் குறிப்பிடும் ஆழி ஆதிபகவனுடைய - அருகப் பெருமானுடைய அறவாழியே.

அடுத்து, அந்தணன் என்ற சொல் மிகச்சிறந்த உயரிய நெறிகளைக் கைக்கொண்டொழுகும் பெரியோனைக் குறிக்கும். அந்தணன் என்போன் அறவோன்; செந்தண்மை பூண்டொழுகுபவன்; இங்குத் திருக்குறளில் குறிப்பிடப்பட்டுள்ள அந்தணன், பெரியோர்க்கும் பெரியோன்; அறிவினாலறியாத அறிவன்; அறவேந்தன்; ஏனெனில் இவன் அறவாழியை உடையோன் ஆதலால்; அறவாழி உடைய சிறப்பு அருகப் பெருமான் ஒருவர்க்கே உண்டு. வாலறிவு பெற்ற அந்தணர் ஒருவர்க்கே அறவாழி சிறப்பு உண்டு. 'ஆதிக்காலத்து அந்தணன்' என ஆதிபகவனைத் திருத்தக்கதேவர் போற்றி மகிழ்வதை சிந்தாமணியில் காணலாம். அடுத்து பிறவாழி என்பது பிறவிக்கடல் என்றும் பொருள் மற்றும் இன்பக்கடல் என்றும் விளக்கப்படுகின்றது. பிறவிக்கடல் என்று பொருள் கொண்டாலும், பிறவியை ஏற்படுத்தக் கூடிய பொருளும், உலகவியல் இன்பமும் என்றும் பொருள் கொண்டாலும் இக்குறளுக்கு ஒப்ப அமைகிறது. எனினும் கடவுள் வாழ்த்துப் பாக்களில் இறுதிப் பாவாகிய பிறவிக்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார் என்பதில்

பிறவிக்கடல் என்ற ஆளுகை இருப்பதால், அறவாழி அந்தணன் என்ற குறளில் இதே கருத்தை முன்கூறி பின்னரும் குறிப்பிடுவாரோ ஒப்பற்ற ஞானியாகிய குந்தகுந்தப் பெருமான் என்று வினா எழுப்பாமல் இருக்க முடியவில்லை. இரண்டு இடங்களில் ஒருபொருளை விளக்கினார் என்பதைவிட, ஒவ்வொரு குறளிலும் வெவ்வேறு அறநெறிகளைக் குறிப் பிட்டுள்ளார் என்பது சிறப்பான சிந்தனையன்றோ? நல்வினையையே ஒரு கட்டத்தில் விலக்கும்போது பொருள், இன்பம் இவற்றை விட்டொழிக்க வேண்டு மன்றோ? பொருள் மற்றும் இன்பக் கடலினின்றும் தப்பி வெளியேறிட அற வேந்தன்தாள் துணையாம். அதன்பின் எய்துவது வீடன்றோ?

## அறவாழியும் அருகனும், பிறகடவுளர்களும்: ஓர் ஒப்பாய்வு

தமிழில் இலக்கணம், இலக்கியம் போன்றே முக்கியமான அங்கமாக இடம்பெறுவன நிகண்டு களாகும். அறவாழி அண்ணல் என்பது அருகன் திருநாமங்களில் ஒன்றெனை நிகண்டுகளில் குறிக்கப் பட்டுள்ளதைக் காணலாம். கண்டபின் வேறெந்தக் கடவுளர்க்கு ஆழி உள்ளதென் பதையும், அது அறவாழியா மறவாழியா என்பதையும் திருக்குறள் நெறிநின்று காண்போம். சொற்களின் பொருள்களை அறிய தெளிவுபெறத் துணையாய் நிற்பவை, நிகண்டுகள் ஆகும்.

## நிகண்டுகளில் 'அறவாழி' என்ற பெயர் யாருக்கு?

திவாகரத்தில் 43 பெயர்கள் அருகனுக்குக் குறிப்பிடப் பட்டுள்ளன. குறட்பெயர்கள் பலவும்

உள்ளன. அவற்றில் அறவாழி அந்தணன் என்ற பெயரும் உண்டு.

*அருகன் பெயராக*

அறவாழி அந்தணன் (திவாகரம்)
அருளாழிவேந்தன் (திவாகரம்)
அறவாழி வேந்தன் (பிங்கலம், சூடாமணி நிகண்டு)
அறவாழி அண்ணல் (கயாதரம்)
அறத்தினாழியன் (தமிழ் உரிச்சொல் பனுவல்)
படையிலி (தமிழ் உரிச்சொல் பனுவல்)
கொல்லாவேதன் (சூ.நி)
சாது (சூ.நி)
தருமராசன் (சூ.நி)
அருட்கொடையாளன் (தமிழ் உரிச்சொல் பனுவல்)
அறத்தின் மன்னன் (தமிழ் உரிச்சொல் பனுவல்)
ஆழியன் (தமிழ் உரிச்சொல் பனுவல்)
கொல்லா மறையோன் (தமிழ் உரிச்சொல் பனுவல்)
பொறையன் (தமிழ் உரிச்சொல் பனுவல்)

இதுவரை அருகனுக்கு அறவாழியந்தணன் என்ற பெயர் எந்தெந்த நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளன என்று பார்த்தோம்.

பிறநெறிக் கடவுளர்க்கு இந்தப் பெயர் எந்தெந்த நிகண்டுகளில் உள்ளதென்பதைக் காண்போம்.

*சிவபெருமானுக்குப் பொருந்துமா?*

சிவபெருமான் குறித்து அறவாழி அந்தணன் என்ற பெயர் திவாகரத்தில் - ஒன்றுமேயில்லை

ஆனால் அரவாபரணன், அழலாடி, அழலேந்தி, ஆனையுரித்தோன், ஈமத்தாடி, கபாலமூர்த்தி, கறைமிடற்று அண்ணல், சடையோன், சுடலையாடி, நாரிபாகன், நீறணிகடவுள், பரசுபாணி, பிறைசூடி, பினாகபாணி, புலித்தோலுடையோன், பேயோடாடி, மழுவாளி என்ற நாமங்கள் வழங்கியதைக் குறிப்பிடுகின்றன. சிவனார் நெறியின் தத்துவத்தை உணர்த்தும் பெயர்களாக இவை இருக்கும் நிலையில், குறள் நெறிக்கு குறள் அதிகாரங்கள் பலவற்றிற்கு மாறானவை இப்பெயர்கள் என்பதும் வெள்ளிடைமலை. இதுபோன்றே பிற நிகண்டுகளிலும் பிறைசூடிய பெருமானுக்குப் பெயர்கள் அமைந்துள்ளன.

*திருமாலுக்குப் பொருந்துமா?*

சக்ராயுதன், ஆழிப்படை உடையவன் என திருமால். திவாகர நிகண்டில் குறிக்கப்படுவதால் அறவாழி அந்தணன் என்ற பெயரை இது குறிப்பிடாதோ என எண்ணுவது இயல்பே. திருமால் தன் கையில் தரித்திருப்பது அறவாழியன்று. அறத்தை நிலைநாட்ட பிறரைக் கொல்வதற்குத் தரித்த மறவாழி என்றே திருமாலின் திருத்தொண்டர்கள் கூறியுள்ளனர் என்பதை அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் தமது அறவாழி அந்தணன் என்ற கட்டுரையில் தெளிவுபட விளக்கியுள்ளார்.

“அடலாழி ஏந்தி அசுரர் வன்குலம் வேர் மருங்கறுத்தாய்” என்றும், “அமர்கொள் ஆழி” என்றும், “கனலாழிப் படையுடையவன்” என்றும், “கொலை ஆழி” என்றும், “கூர் ஆழி” என்றும் “கனலாழிப் படையுடையவன்” என்றும் “பேராழி கொண்ட பிரான்”

என்றும், "ஊன்திகழ் நேமி" என்றும், "ஈர்க்கின்ற சக்கரத்தெம்மான்" என்றும் திருமாலின் ஆழி (சக்கரம்) படை என்றே வர்ணிக்கப்படுகிறது" என்பதை மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். எனவே அறவாழி யந்தணன் என்ற பெயர் சிவபெருமானுக்குப் பொருந்தாமை போன்றே திருமாலுக்கும் பொருந்தாமை தெளிவாகிறதன்றோ?

## புத்த பிரானுக்குப் பொருந்துமா?

புத்த பிரானுக்கு நிகண்டுகளில் அறவாழியன் என்ற பெயரேதுமில்லை யெனினும் மணிமேகலைக் காப்பியத்தில் அறக்கதிராழியுருட்டுவோன் என்ற திருநாமம் சூட்டப் பட்டுள்ளது. புத்த தேவன் எனும் போதே அருள் வடிவம் தோன்றுவது குறித்து அருள் நெறி கரக்கும் செல்வன், அருளிடுவோன், அருளின் படிவன், அறத்தின் வேந்தன், தருமன், தருமராசன் என நிகண்டுகள் போற்றுகின்றன. ஆனால் புலால் மறுத்தலை கொல்லாமையை, வினைக் கொள்கையைப் போற்றாமையால், குறள் நெறியும், குறளின் இறைவனது பெயர்களும் இப்பெருமானுக்குப் பொருந்தாமை வெள்ளிடைமலை.

எனவே, பழைய நிகண்டுகளில் குறள் வாழ்த்தும் இறைவனது பெயர்கள் அருகதேவனுக்குக் குறிக்கப் பட்டிருப்பதையும், இதே நிகண்டுகளில் குறள் கூறும் இறைவனது பெயர்கள் பிறகடவுளர்க்குக் குறிப்பிடப் படாமையும், அதுமட்டுமன்றிக் குறளின் நெறிக்கு மாறான பொருள் உடைய திருப்பெயர்கள் அருகனல்லா பிற கடவுளர்க்கு அக்காலத்திலேயே வழங்கி

வந்துள்ளமையும் திருக்குறள் அருகநெறி நூல் என்பதற்கு அழுத்தமான சான்றாகும்.

திருக்குறள் கடவுள் வாழ்த்து அருகக் கடவுளைச் சார்ந்த தென்பதையும் மற்ற அதிகாரங்களில் உள்ளவை அருகநெறிகள் என்பதையும் விளக்கும் பொருட்டே இதர சமயங்களை ஒப்பிட வேண்டியதாயிற்று. இது தெளிவு கொள்ளவே யன்றிப் பிற சமயங்களையோ, பிற கடவுளர் களையோ குறை கூற அல்ல என்பதை உளத்தூய்மையோடு கூறுவதில் மனநிறைவேற்படுவது உண்மை.

இப்போது, அறவாழி அந்தணன், அறம் அருளியவன் என்பவை சமண சமய தமிழ், சமஸ்கிருத, பிராக்ருத இலக்கியங்களில், தத்துவ நூல்களில், சரளமாகக் கையாளப்பட்டுள்ளதை காணலாம்.

*சீவக சிந்தாமணியில்*

ஆதிக்காலத்து அந்தணன் (சீவக. 366)
கொலையிலாழி வலனுயர்த்த குளிர்
முக்குடையினிழலோய்நீ (சீவக.1244)
மறுவற வுணர்ந்தனை மலம் அறு திகிரியை
(சீவக.2563)
அறவாழி யண்ணல் இவனென்பர் (சீவக.1611)
அருமறை தாங்கியி அந்தணர் தாதையை (சீவக.2561)
தண்மதிபோல் நேமி அரண் உலகிற்கு ஆய அறிவரன்

நீயே (சீவக.1246)
திருவறம் வளர்க (சீவக.இறுதி வாழ்த்து)
ஆதிவேதம் பயந்தோய்நீ (சீவக.1242)

உலகமிருள் கெடவிழிக்கும் ஒண்மணி அறவாழி
அலகையிலாக் குணக்கடலை (சீவக. முக்தி 425)

*சூளாமணியில்,*

ஆதிநாள் அறக்கதிர் ஆழி தாங்கிய சோதியான்
(சூளா.மந்திர 147)

அழல் அணங்கு தாமரை ஆர் அருளாழி
உடையகோன்
(சூளா - 1039)

ஆழி அறவரசே (சூளா - 1913)

ஆர் அழல் அம்சோதி வாய்சூழ்ந்த அருள்
ஆழியானை
(சூளா - 1907)

ஓர் அருள் ஆழியை (சூளா - 216)

அறவாழி (சூளா - 156-158)

அருமறையை விரித்தாயை (சூளா - 184)

விளியாத மெய்ப் பொருளை நீவிரித்தாய்
(சூளா - 1906)

ஊழி மூன்றாவது ஒய்ந்து இறுதி மன்னுயிர்
சூழ்துயர் பலகெடச் சோதி மூர்த்தியாய்
ஏழ்உயர் உலகுடன்பரவ ஈண்டு அருள்
ஆழியாங் கிழமையெம் அடிகள் தோன்றினார்
(சூளா394)

*ஆதி பகவன் குறித்த அற்புத வர்ணனை). இதன் வரலாறு அருகநெறியாளரே அறிகுவர்.*

அருள்புரி அழலஞ்சோதி ஆழியான் (சூளா. துறவு- (27)

அருளாழிமுன் செல்லப் பின் செல்வதென்னோ
வடிப்படாதாய் நின்ற வகன் ஞால முண்டோ
(சூளா - துறவு - 68)

தாமரையி னங்கணடி வைத்தருளு மாதியா யாழி
யறவரசே யென்று நின் னடிபணிவ தல்லால்
(சூளா. துறவு 73)

பகைநாறும் அயிற் படைகள் பயிலாத திருமூர்த்தி
(சூளா - 183)

*மேருமந்தர புராணத்தில்*

அறவேந்தனே (மே.பு.634)
அறிவன் நீயே (மே.பு.999)
மறமிலிவிலாழியுடை மன்னவன் (மே.பு.1042)
சம்பவன் முன்பு நின்ற தருமச் சக்கரத்தினும்பர்
(மே.பு.1189)
பெருமையொடு மங்கலங்களறவாழி (மே.பு.1195)

*அப்பாண்டை நாதர் உலாவில்*

சினதர்மசக்கரத்தன் (10)
அருட்கடலுமாயினோன் (19)
அருளாழியான் (24)
அறவாழியான் (24)
தருமக்கடலான் (58)

நன்மையறவாழி நடக்க (444)
அறவாழி வேந்தன் (635)
அறவாழி சேர்த்தீசன் (943)
அறவாழி முத்தன் (993)
படைவாளும் இலான்

*திருமேற்றிசை அந்தாதியில்*

திருவருளாழி நடாத்தும் குடதிசைச் செங்கனி (347)

*திருநறுங்கொண்டை மலைப்பதிகம்*

இடர்திசை நீங்கநின்றார்க்கு அறமாயுதம் (151)
படைகளொன்றின்றி இருவினையெனும் பண்டை
முதுபகைபுறங் கண்டவன்

*திருக்கலம்பகத்தில்*

சயங்கொள் ஆழியங்கடவுளே (திருக்கல.35)
பேரறங்க ணேமி கொண்டு வென்ற சோதி யெங்க
ளாதியே (திருக்கல.24)
உலகமேழும் வந்திறைஞ்ச அருளாழி வலங்கொண்டு
ஏத்துஞ் சிகர மணிநீல வண்ண (திருக்கல.31)

*திருநூற்றந்தாதியில்*

அருளோடெழும் அறவாழி அப்பா (திருநூற்.5)

அற ஆழிகொண்டே வென்ற அந்தணனே
(திருநூற்.27)
அருட்சக்கரம் ஏந்திய சங்கரன் (திருநூற்.67)

*திருநறுங்கொண்டைத் தோத்தி மாலை - மந்திரப்பத்து*

தரும சக்கரா (53)
தரும சாரணன் (60)
மறுவிலா அறவாழி அந்தணனே (68)

நீலகேசியில்

உயிர்கட்கு இடர்தீர்த்து உயிர் இன்பம் ஆக்கும்
சொல்லான் தருமச்சுடரான்
அங்கம் பயந்தான் அறைந்தசுதக்கடல் (நீல.660)
தீதுஇல் நன்னெறி பயந்து (நீல.155)
அங்க பூவமது அறைந்தாய் அறிவர்தம் அறிவர்க்கும்
அறிவா (நீல.157)
அன்னான் பயந்த அறஆர் அமிர்து (நீல.2)
அறங்கூர்மாரி பொழிந்தோய் (நீல.139)

*திருவெம்பாவையில்*

பள்ளியுணர்ந்திலையோ பாவாய் நீ முன்வந்தென்
வள்ள லறவாழி நாதன் மலரடியை

*உரைமேற்கோள்*

அருள்நெறி நடத்திய ஆதி தன்
திருவடிபரவுதும் சித்தி பெறற் பொருட்டே (உ.மே.44)
ஈர்அறம் பயந்த ஓர் அருள் ஆழியை (உ.மே.11)
அறவாழியினான் (உ.மே.20)
அறவாழியனே (உ.மே.29)
படை ஒன்றிலான் (உ.மே.31)

அறப்புணையே புணையாக மறுகரைபோய்க் கரைஏறி
இறப்பு இலநின் அருள் புரிந்தாங்கு எமக்கு எல்லாம் அருளினையாய்
மறவாழி ஒளிமழுங்க மனையவர்க்கும் முனையவர்க்கும்
அறவாழி வலன்உயரி அருள் நெறியே அருளியோய் (உ.மே.138)

*அறவாழியின் அமைப்பு*

கனல்வயிரம் குறடு ஆகக் கனல்பைம்பொன் சூட்டு ஆக
இனமணி ஆரமா இயன்று இருள் இரிந்து ஓட
அந்தரத்து உருளும் நின்அலர்கதிர் அறவாழி
இந்திரனும் பணிந்து ஏத்த, இருவிசும்பில் திகழ்ந்தன்றே
(உ.மே.39)

அல்லல் நீக்கற்கு அறப்புணை ஆயினை (உ.மே.37)
அருளினை நீ (உ.மே. 37)

நனைஇல்காட்சி நல்லறத்தலைவ (உ.மே.41)
அறமும் நீ (உ.மே.37)
அறவன்நீ (உ.மே.40)

*சிலப்பதிகாரத்தில்*

அருண்முனி
அருளறம் பூண்டோன்
தரும முதல்வன்
தருமன்

*யசோதர காவியத்தில்*

திருமொழி அருளும் தீர்த்தகரர்களே துயர்கள் தீர்ப்பர் (ய.சோ.53)

*தர்மசக்ரம் குறித்து கிரியாகலாபம் நந்தீஸ்வரபக்தியில் (சமஸ்கிருதத்தில் ஆசார்யர் பூஜ்யபாதர் அருளியது)*

ஸ்புரதர ஸஹஸ்ரருசிரம் விமலமஹா
ரத்ந கிரண நிகர பரீதம்
ப்ரஹஸித ஸஹஸ்ர கிரணத்யுதி மண்டல
மக்ரகாமி தர்மஸுசக்ரம் (கிரியாகலாபம் - 192 - நந்தீஸ்வர பக்தி)

*ஜோதி மயமானதும், ஆயிரம் ஆரக்கால்களை உடையதும், மனோகரமானதும், நிர்மலமானதுமான*

மிகச்சிறந்த மணிகளாலாம் வட்டைகளால் சூழ்ந்துள்ளதும், சூரியன் ஒளியை மிஞ்சத்தக்க காந்தியோடு விளங்குவதும், (சமவ சரணத்தின்) நாற்புறமும் உள்ளனவுமாகிய சிறந்த தர்மசக்கரம் பகவான் முன் தொடர்ந்து செல்லும்.

இதுவே மேருமந்திரத்தில்

**சக்கரன் சாபம் போலத் தனுவில்லை யுமிழச் சென்னி**
**மிக்கமா மணிசெ யாரம் விளங்குமா யிரத்த தாகித்**
**திக்குலாம் பொழுது காத நான்கதாய்ச்**
**செறிந்திருந்தால்**
**விற்கண்மூன்றாய அறப்பேராழி தான் விளங்கு**
**நின்றே (மே.பு.1171)**

சமவசரணத்தில் மூன்று வில், உயரமுடைய அறவாழி அருகப்பெருமான் ஆங்காங்கே எழுந்தருளும் போது அவருக்கு முன்னே நான்குகாதம் என்னும் தொலைவில் செல்லும்.

அறவாழி அருளட்டும்

*(கிரியாகலாபம் - சாந்தி பக்தி - 9)*

**க்ஷேமம் சர்வப்ராஜாநாம் ப்ரபவது**

. . . . . . . . . . . . .

**ஜைநேந்த்ரம் தர்மசக்ரம் ப்ரபவது ஸததம்**
**ஸர்வ ஸௌக்ய ப்ரதாயி -**

**. . . . . இவ்வுலக உயிர்களனைத்திற்கும் இன்பத்தைத் தருகின்ற ஜிநேந்திரர்களின் அறவாழி எப்போதும் நிலைப்ப தாகுக.**

தர்மசக்கரம், அருகத்பரமேஷ்டிக்கு வாலறிவு தோன்றிய உடன் ஏற்பட்ட 24 அதிசயங்களுள் ஒன்றாகும். சமவசரணத்தின் நாற்றிசைகளிலும், பூதங்களால் தரிக்கப்பட்ட ரத்ன மயமான தர்மசக்ரம் நான்கும் திசைக்கு ஒன்றாக விளங்கும்.

- கிரியாகலாபம்.

## மஹாபுராணத்தில்

**ஸ்ரீமதே ஸகலக்ஞான சாம்ராஜ்ய பதமீயுஷெ!**
**தர்மசக்ரப்ரதே பத்திரதே நம: சம்சார பீமஷெ!!**
**- மகாபுராணம் - கடவுள் வணக்கம்.**

சகல ஐஸ்வர்யத்தோடும் கூடி கேவல ஞானப் பேரரசினைப் பெற்றவரும், பிறவித்துன்பத்தினை விலக்கு பவரும் தர்மசக்ரத்தை உடையவரும் ஆகிய அருக பகவானை நான் வணங்குகிறேன்.

## அமரசிம்மம் அருகன் நாமமாலை

அமரசிம்மம் அருகன்பேர்வழி ஸ்லோகத்தில் தர்மசக்ரம், அருள்சக்ரம், அசாதாரணசக்ரம், சித்த சக்ரம், சார்வசக்கரம் கூறப்பட்டுள்ளன.

## மஹாபுராணத்தில்

(மாமுனிவர் ஜினசேனாசாரியாரால் அருளப்பட்டது)

*சமஸ்க்ருத மொழியில் இயற்றப்பட்ட மஹாபுராணத்தில் அருகப்பெருமானைப் போற்றும் 1008 திருநாமங்கள் உள்ளன. இதில் 64ஆவது திருநாமம் தர்மசக்ரினே, 840ஆவது தர்மசக்ராயுதனே! 1008ஆவது திருநாமம் தர்மசாம்ராஜ்ய நாயகன் என்பனவாகும்.*

*அறவாழி அந்தணன் அருகனைக் குறித்தது என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உள்ளன. இந்நூல் அறவாழி அந்தணன் என்ற பெயருடன் திருக்குறள் கடவுள் வாழ்த்து இறைவன் பெயர்கள் அனைத்தையும் ஆய்வதற்கு உருவாக்கப்படும் நூல் என்பதால் விரிவஞ்சி நிறைவு செய்யப்படுகிறது.*

"தெருளாமையால் வினவற்பால தொன்றுண்டு
திருவடிகள் செம்பொனார் அரவிந்தம் ஏந்த
இருளாழி ஏழுலகும் சூமொழியின் மூழ்க
இமையாத ரெங்கண்ணின் இமையோர் வந்தேத்த
உருளாழியானும் ஒளிமணி முடிமேற் கைவைத்(து)
ஒருபாலில்வர, உலகம் நின்றுழைபதாக
அருளாழி முன்செல்லப் பின்செல்வகென்னோ?
அடிப்படாதாய் நின்ற அகன் ஞாலம் உண்டோ?

- சூளாமணி

அறவாழி அந்தணன்தாள் போற்றி! போற்றி!

******

**9** கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

## எண் குணத்தான்

பேராசிரியர். வி. அசோக்குமாரன்
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி - புதுவை

ஜினர் என்ற வடசொல்லுக்கு வெற்றி பெற்றவர் என்று பொருள். முப்போதும் எப்போதும் அறக்கள வேள்வியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட இந்த துறவரசர்களுக்குப் புறப்பகைவர்கள் எவருமிலர். அப்படியே இருந்தாலும் அவர்களை எளிதில் வென்றனர். ஆனால் இவர்தம் அகப்பகைவரை வெல்ல இவர்கள் கடுமையாகப் போராடினர். காரணம் அந்த அகப்பகைவர்களிடம் எண்வகை வினைகள் (அஷ்டகர்மங்கள்) என்ற பலம் பொருந்திய ஆயுதங்கள் இருந்தன. அந்த ஆயுதங்களை ஒருகாலத்தில் வடிவமைத்து மெருகேற்றியவர்களும் இவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தனக்குள் இரண்டறக்கலந்து அநாதி காலந்தொட்டு வாழ்கின்ற அந்த வினைப்பகைவரை அடையாளங்கண்டு, அவரை வென்று அடக்குகின்ற ஒரு புதுமையான ஆனால் கடுமையான ஒரு போரில் அந்தத் துறவரசர்கள் இறங்கினர். எட்டு வினைகளை வென்று எட்டு குணங்களைப் பரிசாகப் பெற்றனர்.

1. கடையிலா அறிவு
2. கடையிலா காட்சி
3. கடையிலா வீரியம்
4. கடையிலா இன்பம்
5. நாமமின்மை
6. கோத்திர மின்மை
7. ஆயுளின்மை
8. அழியா இயல்பு

என்பனவே அந்த எட்டு குணங்கள்.

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவ ரும், இந்தத் தூய துறவரசர்களின் வழியைப் பின்பற்றி, தத்தமது அகப் பகைவருடன் போராடும் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்பது குறளாசிரியர் விருப்பம்.

**"கோளில் பொறியல் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை"**

என்று ஓர் அழகிய உவமை மூலம் இந்தக் கருத்தை விளக்குகிறார் அவர்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம் பொறிகளும் தத்தமக்குரிய, புலன்நுகர்வுகளைப் பெறவில்லை என்றால் அவைஇருந்தும் பயனில்லை. இதைப் போலவே தலையைப் பெற்ற ஒவ்வொரு மனிதனும், எண்குணத்தானின் தாளை வணங்கினால் தான், தலைபெற்றதன் பயனை அடைவான். இவ்வாறு

அவன் எண்குணத்தான் தாளை வணங்கவில்லை என்றால், அவன் தலையிருந்தும் பயனில்லை என்கிறார் குறளாசிரியர்.

கடவுள் வாழ்த்துப் பகுதியில் ஒன்பதாவது குறளாக இது இடம் பெறுகிறது. இதில் எண்குணத்தான் என்ற தொடர் இடம் பெறுவதால், எட்டு குணங்களைப் பூரண மாகப் பெற்ற சித்தபரமேட்டியை இது குறிக்கும். குறிக்கவே, இதன்வழி, சித்தர் வணக்கம் கூறுப்படுகிறது என்று அறிஞர் பலரும் கருதுகின்றனர்.

இக்குறட்பாவிற்கு விளக்கம் கூற முற்பட்ட ஜைன உரை காரர், எண்குணத்தான் தாளை வணங்காதவன் பிணத்திற்குச் சமம் என்று சாடுகிறார். புலன் நுகர்வு அற்ற பொறிகள் செத்தொழிந்தமைக்குச் சமம். இதைப் போலவே எண்குணத்து எம்மானை, அணியாவழகனை அறிந்து போற்றாத தலையும், உயிரற்ற ஜடத்திற்குச் சமம் என்பது அவர் கருத்து.

இக்குறட்பாவில் இன்னொரு நுட்பமும் மறைந்து கிடக்கிறது. எண்குணத்தான் தாளை வணங்குவதே தலையின் தலையாய பணி. இப்பணி செம்மையுற நடைபெற வில்லை என்றால், அந்தத் தலை வேறு யாரையாவது வணங்கும் சூழ்நிலையும் ஏற்படலாம். இதனால் இரண்டு குற்றங்கள் நேரிடுகின்றன. வணங்க வேண்டியவனை வணங்காமல் விடுவது ஒன்று. வணங்கத் தகுதியற்றவரை வணங்குதல் மற்றொன்று.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

என்று குறளாசிரியர் குறிப்பிடுவதை இங்கு நோக்குதல் வேண்டும்.

எனவே, மனித வாழ்வின் உறுதியான- இறுதியான ஒரே குறிக்கோள் ஆன்ம விடுதலை என்பதும், அந்த ஆன்ம விடுதலைக்கு தடையாக இருப்பவை அவரவர் இயற்றிய இயற்றுகின்ற எண்வகை வினைகளே என்பதும் அந்த வினைகளுக்கு ஊற்றிடமாக அமைவன ஐம் பொறிகளே என்பதும், அந்தப் பொறிகளைப் பக்குவப் படுத்தி நம்வசமாக்கினால், எண்வகை வினைகளை வென்று - எண்வகைக் குணங்களைப் பெறலாம் என்பதும், இந்தக் கடினமான செய்முறைப் பயிற்சியைச் செய்து காட்டிய எண்குணத்தானைப் பின்பற்றி ஒழுகுவதே எளியவழி என்பதும், இக்குறள் மூலம் பெறப்படுகிறது.

இக்குறட்பாவில் அமைந்து கிடக்கின்ற நல்ல நயம் என்னவென்றால், எண்வகை வினைகள் வருவதற்கும். ஐம்பொறிகளே காரணம். அவற்றைப் போக்கி. அழிப்பதற்கும், இந்த ஐம்பொறிகளே உதவுகின்றன என்பதுதான்; வயலுக்கு நீர் பாய்ச்சும்போது, ஏறின மடை வழியாகவே நீர் இழந்து விடுவதைப்போல. எந்தப் பொறி புலன்களைப் பற்றுக் கோடாகக் கொண்டு வினைகள் வந்தனவோ. அந்தப் பொறி புலன்களின் உதவியாலேயே. அந்த வினைகளை அகற்ற முடியும். எட்டு குணங்களையும் பெற முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்ற குறள் இது.

ஐந்து பொறிகளின் கூட்டுருவமாக தலை விளங்குகிறது. அந்தத் தலையைச் சாட்சியாக வைத்து. எட்டு வினைகள் வருகின்றன. அல்லது தொலைகின்றன

என்பதைக் கூறாமல் கூறுகிறது இக்குறள். எனவே, எண்குணத்தான் தாளை வணங்குவதே நமக்கு வேலை என்பதும். அப்போது தான் நமது தலை, தலையாக மதிக்கப்படும் என்பதும் இதன் மூலம் உணர்த்தப்படுகிறது.

******

**10** பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

## பிறவிப் பெருங் கடல் நீந்துவார்

**பேராசிரியர். ஜெ. ஸ்ரீசந்திரன்**

பொதுவாகச் சமண சமயக் கடவுள் வணக்க முறை நால்வகைச் சரணத்தை உள்ளடக்கி யிருக்கும். இம் முறையிலேயே திருக்குறள் கடவுள் வாழ்த்தும் அமைந்துள்ளது. ஏழு குறள்களில் அருக சரணமும், 'கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்' என்னும் குறளில் சித்த சரணமும், 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்னும் குறளில் சாது சரணமும், 'இருள் சேர் இருவினையும் சேரா' என்னும் குறளில் தன்ம சரணமும் அமைந்துள்ள நயம் அறிந்து இன்புறத்தக்கது. (குறிப்பு: பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கம் என்பது ஐந்து பொறிகளையும் அடக்கிய சாதுக்களின் ஒழுக்க நெறிகளில் ஒன்றாகிய பொய்தீர் காட்சியைக் குறிக்கும். **காட்சி** என்பது **நற்காட்சி; பொய்தீர் காட்சி** என்பது **தூயநற்காட்சி.** இதனை வடநூலார் **தரிசன விசுத்தி** என்பர். ஷோடஸ பாவனை என்னும் பதினாறு சிந்தனைகள் சாதுக்களுக்கு உரிய ஒழுக்க நெறிகளாகும். இவை அருகருக்கு அல்ல. அருகர்

பொறிகளின் உதவியின்றியே, மூவுலகும் முக்காலமும் உணர்ந்தவர்; பொறியொடு வல்வினை கடந்த புனிதர்; சாதுக்களை விடப் பலபடி உயர்ந்தவர். ஐந்தவித்தல் என்ற பேச்சுக்கே அருக நிலையில் இடம் இல்லை. சாது நிலையிலேயே அனைத்தையும் வென்றவர் அவர். எனவே இந்தக் குறளில் உள்ள 'ஐந்தவித்தான்' என்பதை மட்டும் நோக்காது 'பொய்தீர் ஒழுக்கத்தை'யும் சேர்த்துப் பொருள் கொண்டால் இக்குறள், சாதுக்களையே குறிப்பிடுகிறது என்பது புலனாகும். எனவே இது சாது சரணம் ஆயிற்று. இது போலவே 'இருள்சேர் இருவினையும் சேராத, இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு' என்னும் குறளில் வரும் 'பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு' என்பது இறைவனின் புகழ்மிக்க ஆகமங்களை (புகழ் சேர் பொருள்) போற்றிப் பின் பற்றுவாரிடத்து, இருவினையும் சேரா எனப்பொருள் கொள்ள வேண்டும். எனவே, இக்குறள் தன்ம சரணம் ஆயிற்று. சிலர், அருக சரணமும் சித்த சரணமும் 'கடவுள் வாழ்த்தில்' கூறுகிற ஆசிரியர், 'நீத்தார் பெருமை'யில் சாது சரணமும், தன்ம சரணமும் கூறுகிறார்' என்பர். ஆயினும் ஆழ்ந்து நோக்கினால் நால்வகைச் சரணத்தையும் இக்கடவுள் வாழ்த்து அதிகாரத்திலேயே காணலாம். மேலும் குந்தகுந்தரைப் போன்ற ஆசாரியர்கள் நால்வகைச் சரணத்தையும் ஒரே இடத்தில் தான் அமைப்பரே அன்றி இங்கொன்றும் அங்கொன்றுமாக அமைக்க மாட்டார் எனத் தெளிக.

இவ்வாறு அருக சரணம், சித்த சரணம், சாது சரணம், தன்ம சரணம் என்னும் நால்வகைச் சரணங் களையும் சமண இலக்கியங்கள் அனைத்திலும் காணலாம்.

'நல்அறத்து இறைவனாகி நால்வகைச் சரணம் எய்தி' முத்தி அடைந்தவன்நம் சீவகன் என்பதும் இங்குக் கருதத்தக்கது.

திருக்குறள் அறங்களைப் பெரிதும் போற்றும் பிற சமயத்தார், 'இவர் எம்மதத்தவர்தான்; இவர் எம்மத்தவர்தான்' எனப் போட்டி போட்டுக் கொண்டு வாதிடுகின்றனர். ஆயின் நடு நிலையிலிருந்து ஆய்வோர்க்குத் திருக்குறள்ஆசிரியர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி என விளங்கும்.

சமண சமயத் தீர்த்தங்கரர் அனைவரும் பல பிறவிகளைக் கண்டவர்கள். இத்தகைய ஒரு நிலை சிவ பெருமானுக்கோ, திருமாலுக்கோ இல்லை. சிவபெருமானோ, தாய் வயிற்றில் பிறக்காதவர் - 'பிறவா யாக்கைப் பெரியோன்' எனப் போற்றப்படுபவர். திருமாலோ எனின் உலகைப் படைத்தவரே அவர்தான் என அவரைப் போற்றுவோர் கருதுகின்றனர். இவ்விரு கடவுளர்க்கும் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை. எனவே இவர்கள் வினை வயப்பட்டவர் அல்லர். ஆனால் அருகப் பெருமானோ நம்மைப் போல் ஒரு தாய் வயிற்றில் பிறந்து வினை வயப்பட்டுப் பின் வினையின் நீங்கி வீடு பேறடைந்தவர். அருகர் இருபத்து நால்வராவர். அவருள் முதல்வராகத் திகழ்பவர் விருஷபதேவர் எனப் போற்றப் படும் ஆதிபகவன் ஆவார். இவரையே 'கடவுள் வாழ்த்தில் போற்றுகிறார், குறளாசிரியர். எனவே அவரைச் சமணர் எனச் சொல்லவும் வேண்டுமோ?

'உலகியற்றியான்' முதலிய சொற்களைக் காட்டிச் சிலர், குறளாசிரியர் படைப்புக் கொள்கையே ஒப்புக் கொள்கிறார் என்று வாதிடுகின்றனர். 'இயற்றினான்' என்பதற்குச் சமணர் காணும் பொருள் வேறு. ஆதிபகவானாகிய விருஷபதேவர் உயிர்கட்குத் தொழில் முதலியவற்றை ஒழுங்குபட இயற்றினார் என்று ஸ்ரீபுராணம் போன்ற சமண நூல்கள் கூறுகின்றன.

இதுபோலவே,

**'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது'**

என்னும் குறளுக்கும் 'உலகில் வாழும் முறையை ஆதியில் அமைத்துத் தந்த ஆதிநாதர் காட்டிய வழியை அல்லாமல், கோடிக்கணக்கில் செல்வத்தைத் தேடித் தொகுத்தார்க்கும் அவற்றை நுகர்தல் இயலாது' என்று பொருள் கொள்ள வேண்டும்.

சிவன், திருமால் முதலிய சொற்களை மட்டும் கொண்டு சிலர் சமய முடிவு காண்கின்றனர். இந்த முறையும் சரியன்று. முருகப் பெருமானுக்கும், சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் இணையானவன் சீவகன் எனப் பல இடங்களில் சீவக சிந்தாமணி சுட்டிக் காட்டும். இதனால் சிந்தாமணியை யாரும் சமண காப்பியம் அன்று என்று சொலவதில்லை! சைவ, வைணவ நூல்களில் காணப்பெறும் கடவுளின் ஆயிரம் திருப்பெயர்களைச் சமண நூல்களிலும் காணலாம்.

ஆர்வமும் செற்றமும் அகல நீக்கிய வீரர் அருகர். அவர்கள் நம்மைப் போல் மனிதராகப் பிறந்தவர்.

ஆனால் மெய்யுணர்வு கொண்டு வாலறிவு என்னும் கேவல ஞானம் பெற்று உலகு உய்ய நல்லறங்களை உபதேசித்தவர். எப்படி வாழ வேண்டும் என்பதனை வெறும் போதனையால் மட்டுமின்றிச் சாதனையாலும் விளக்கியவர். வினையின் நீங்கிப் பிறவிப் பெருங்கடலைக் கடந்து பிறவாத முத்திக் கரையை அடைந்தவர்கள். அவர்கள் அருளிய ஆகமக் கருத்துக்களை - வாழ்ந்த வாழ்க்கையை எப்போதும் நினைக்க வேண்டும். அத்தகையோர்

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.**

இறைவனுடைய அடிகளை நினைத்துக் கொண்டிருப்பவர்கள் பிறவியாகிய பெரிய கடலினை நீந்திக் கடப்பார்கள். நினைக்காதவர்கள் கடக்க மாட்டார்கள். (அதனுள் அழுந்தித் துன்புறுவர்)

பிறவியைப் பெருங்கடல் என்றது ஏன்? கடலின் ஆழத்தை - கரையைக் காண முடியாதது போல் பிறப்பின் எல்லையையும் அறிய முடியாது. ஒவ்வொரு தீர்த்தங்கரரின் பூர்வ பவங்களும் இதற்குச் சான்றாகும். ஆதிநாதர் முதல் வர்த்தமானர் வரை 24 தீர்த்தங்கரர்க்கும் பூர்வ பவங்கள் கூறப்படுகின்றன. அதிலும் மகாவீரரின் பூர்வ பவங்கள் குறிப்பிடத்தக்கன.

தன் முற்பிறப்பில் கோடானுகோடி ஆண்டுகள் பலப்பல பிறவிகளில் உழன்று உழன்று துன்புற்று, வர்த்தமானராகப் பிறந்து மகாவீரராக உயர்ந்து இறுதியில் முத்தி அடைந்தவர் அவர்! முற்பிறவிகளைக் கணக்கிட்டு - அளவிட்டு - அறுதியிட்டுக் கூறமுடியாது. இதனால் பிறவியைப் 'பெருங்கடல' என்றார். பழமையான நம்

முற் பிறவிகளை எண்ணிக் கணக்கிடுவோமானால் அவை, கடலின் மணலும் ஒப்பிடப் போதாத அளவுடையன.

> 'தொல்லை நம் பிறவி எண்ணின் தொடுகடல்
> மணலும் ஆற்றா எல்லைய'

எனச் சிந்தாமணி கூறுவதை நோக்குக.

அத்தகைய பிறவிகள் பலவற்றிலிருந்தும் நீங்கி வீடுபேறடைய வேண்டின், இறைவன் அடிகளைச் சரண் அடைதல் வேண்டும். சரண் அடைந்து அப்பெருமான் அருளிய ஆகமக் கருத்துக்களை எப்போதும் எண்ணிப் பார்க்க வேண்டும். நான்கு கதிகளும் துன்பம்தான்! யாக்கையும் நிலையில்லை! மாறி மாறி வரும் பொருள்கள் இறுதியில் பேரவலத்தைத் தோற்றுவித்து மறைகின்றன. இந்த உலகில் எதுதான் மறையவில்லை? யார்தான் இறக்க வில்லை? நினைத்துப் பாருங்கள்! எத்தினம் உலகில் எமன் வரா நல்தினம்?

பெற்றோரும் உறவினரும் நண்பரும் செல்வமும் எந்த அளவு உயிருக்குப் பாதுகாவலாக அமைய முடியும்? மரணப் பிடியில் நாம் சிக்கும்போது நமது உயிரைக் காப்பாற்ற யார் வருவார்? யாரால் முடியும்? பெற்ற தாயும் உற்ற மனைவியும் மகளிரும் 'ஐயோ!' என நிலை கலங்கி அலறித் துடித்து வீதிவரை வந்து நின்று செயலற்று ஏங்கி நிற்பர். பாசம் மிக்க தந்தையும் ஆசையுள்ள மகனும் கையால் தலைமோதித் தாங்கொணாத் துயரச் சுமையைச் சுமந்து கொண்டு சுடுகாடு வரை வந்து நின்று கையற்று மெய் சோர்வார்.

இந்த அளவோடு நின்று விடுகிறது செல்வமும் சுற்றமும்! பின் பார்த்த முகத்தை விட்டு - பழகிய இடத்தை விட்டுப் புதியதோர் உலகுக்குப் பயணம் செய்கிறது உயிர். அதனைத் தடுப்பார் இலர். ஆயினும் அது செல்லும் தேயத்துக்கு உறுதுணையாக இருப்பது நல்வினையே! என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். பிறவிப் பெருங்கடலைக் கடக்கும் வழி அருகப் பெருமானின் அருளுரையே எனக் கருதல் வேண்டும். வேறு புகலிடம் இல்லை என அடிக்கடி நினைக்க வேண்டும்.

தொல்லை
முரணார் வினைப் பகைவர் மூளுங்கால் வாமன்
சரணார விந்தங்கள் அல்லால் - அரணாய்நீர்
எண்ணும் பொருள் சுற்றம் யாக்கை என்றின்ன வெல்லாம்
நண்ணும் சரணாக நாடன்மின்

-திருக்கலம்பகம். பா. 76. வரி 7-10

எனவே நிலையில்லாத பொருள்களின் மீது சிந்தை செல்லாமல் நிலையான உயிரின் ஆக்கத்திற்கு ஏற்ற புண்ணிய கருமங்களைச் செய்தல் வேண்டும். சமண ஆகமங்கள் தானம், விரதம், தவம், தியானம் எனப் பல்வேறு புண்ணிய காரணங்களை விளக்கியுரைக்கின்றன. அவற்றைப் போற்றிப் புண்ணியத்திற்குரிய நல்வினைகளைப் புரிதல் வேண்டும்.

புண்ணியம் மிக உயர்ந்த அமைதியைத் தருகிறது; தாயைப்போல் உயிரைப் பேணி வளர்க்கிறது; தந்தையைப் போல் பாதுகாக்கிறது; நண்பனைப் போல் இன்பம் தருகிறது; உடன் பிறந்தோரைப் போல்

நேசிக்கிறது; குருவைப் போல் நற்போதனை அளிக்கிறது; பாவப் பகைவனிடமிருந்து உயிரைப் பாதுகாக்கும் கேடயமாக இருக்கிறது; உயர் பதவிகள் அனைத்தையும் தருகிறது; எல்லாவற்றிற்கும் மேலாகத் தீர்த்தங்கராகி முத்திப் பேற்றைப் பெறவும் வாய்ப்பளிக்கிறது. இடையறாது இறைவனைப் பற்றிய சிந்தனையில் திளைப்பதும் புண்ணிய காரணமே ஆகும்.

இங்கு ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். திருக்குறள் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் வரும் பத்தில் ஏழு குறள்களில் இறைவனின் 'அடி' என்னும் சொல் வருகிறது.

**'வாலறிவன் நற்றாள்' (அடி)**
**'மலர்மிசை ஏகினான் மாண் அடி'**
**'வேண்டுதல் வேண்டாமை இலான் அடி'**
**'தனக்கு உவமை இலாதான் தாள்' (அடி)**
**'அறவாழி அந்தணன் தாள்' (அடி)**
**'இறைவன் அடி'**
**'எண்குணத்தான் தாள்' (அடி)**

ஏன் முழு வடிவத்தையும் கூறாமல் 'அடி'யை மட்டும் கூற வேண்டும்? அடியை வணங்குகிறோம் என்றால் அவர் சென்ற வழியைப் போற்றுகிறோம் என்பது பொருள். வீடுபேறு அடைய அந்தத் திருப்பாதங்கள் எந்த வழியில் சென்றனவோ அந்த வழியில் செல்ல விரும்புகிறோம் என்பது பொருள்! ஆதலால் அருகப் பெருமானின் திருவடிகள் போற்றப்படுகின்றன. இடையறாத சிந்தனை செயலில்

இறங்கத் தூண்டும். எனவே அப் பெருமானின் திருவடிகளைச் சார்தல் வேண்டும் - அத் திருவடிகளை எப்பேதும் மனத்தில் இருத்தல் வேண்டும்.

அருகப் பெருமானின் திருவடிகள் நெஞ்சத்தில் இருக்குமானால் ஐம்பொறிகளையும் ஆட்டிப்படைக் கின்ற 'ஆசை' என்னும் நச்சரவு மனத்திற்குள் புக முடியாது.

ஆறுகள் அனைத்தும் கடலில் வந்து வீழ்ந்த போதும் கடல் நிரம்புவதில்லை; இதுபோலவே உலகுள பொருளெலாம் வந்து குவிந்தாலும் ஆசை நிரம்பாது. இந்த ஆசைக்கு மனத்தில் இடம் கொடுத்தால் பிறவிப் பெருங் கடலைக் கடக்க முடியாது என்பது மட்டுமன்று. ஆன்மாவைச் சீரழித்து மீண்டும் மீண்டும் பிறவிக்கு வித்திட்டு விடும். எனவே முதலில் ஆசையை அகற்ற வேண்டும். ஆசையே எல்லாப் பிறவிகளுக்கும் வித்து; பிறவிக்கு மட்டுமன்று; எல்லா வினைகளுக்குமே இதுவே தாய்! ஞானாவரணீயம் முதலான மாயப் பிசாசுகளைத் தோற்றுவிக்கும் கோரப் பேய் இது! எல்லா வினைக் குப்பைகளையும் உயிரிடத்தில் கொண்டு வந்து கொட்டுவதும் இதுவே! உயிர் முத்தி அடையாமல் தடுத்து நிறுத்திக் கெடுப்பதும் இந்த ஆசையே! எல்லாப் பிறவிகளுக்கும் பகையாக இருப்பதும் இந்த ஆசையே! நரகத்தில் தள்ளுவதும் ஆசையே! எல்லாவற்றிலும் பாவத்தைச் சேர்ப்பதும் ஆசையே! தருமம் கெடுமாறு செய்வதும் ஆசையே! ஒருபோதும் நிரம்பாத தன்மை யுடையதும் ஆசையே! மூவுலகிலும் வலிமை பொருந்தியதும் ஆசையே! முனிவர் தன்மைக்கு இடையூறாய் இருப்பதும் ஆசையே! ஆசையற்றவர் நல்ல முனிவர் ஆவர்.

மோகமே, பிறவிக்கு நல் வித்தது;
மோகமே, வினை தன்னை முடிப்பது;
மோகமே, முடிவைக் கெட நிற்பது;
மோகமே, பகை முன்னை உயிர்க்கெலாம்.

- மேரு 324

மோகமே, திரியக்கிடை உய்ப்பது;
மோகமே, நரகத்தில் விழுப்பது;
மோகமே, மறமாவது முற்றவும்;
மோகமே, அறமாகுற நிற்பதும்.

-மேரு 325

மோகமே, நிறையா நிறை யாயது;
மேகமே, மூவுலகின் வலியது;
மோகமே, முனிமைக்கு இடையூறது;
மோகம் இல்லவர் நல்ல முனிவரே.

- மேரு 326

*இத்தகைய ஆசையால் மீண்டும் மீண்டும் தோன்றும் பிறவியாகிய பெருங்கடலை. வைராக்கியம் என்னும் தோணி கொண்டு கடக்க வேண்டும். அந்தத் தோணி நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் என்னும் கயிற்றால் உறுதியாகக் கட்டப்பட வேண்டும். அப்போதுதான் கவலை என்னும் அலையாலும், பேராசை என்னும் சூறாவளி யாலும், காமம் என்னும் திமிங்கலத்தாலும் சிறிதும் சேதம் அடையாமல் ஆன்மா முத்தி என்னும் கரையை அடைய முடியும்.*

நாளும் நல்லறம் செழிப்பதாக!

# திருவள்ளுவரின் திருமேனி தாங்கிய தங்கக்காசு

*ஐராவதம் மகாதேவன்*

திருவள்ளுவப் பெருமானின் திருவுருவம் பொறித்த, ஒரு தங்க நாணயம் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி அரசால் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது என்பது இதுவரை எவருக்கும் தெரிந்திராத ஒரு வியப்பான செய்தி யாகும்.

## கும்பினியார் வெளியிட்ட காசு

கல்கத்தாவில் உள்ள இந்திய அருங்காட்சியகத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள நாணயங்களின் பட்டியலின் முதல் தொகுதியில் இந்தத் தங்க நாணயத்தைப் பற்றிய ஒரு சிறு குறிப்பு முதன்முதலாகக் காணப்படுகிறது. இரட்டை வராகன் என்று அழைக்கப்பட்ட ஒரு தங்க நாணயத்தின் முன்புறத்தில் அமர்ந்த நிலையில் 'விஷ்ணு' வின் திருவுருவமும், பின்புறத்தில் ஐந்துமுனை நட்சத்திரமும் பொறிக்கப்பட்டுள்ளன என்று இக்குறிப்பு தெரிவிக்கிறது. இக்காசு ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினியின் சென்னை அரசால் 1819 -க்கு முன்னர் வெளியிடப்பட்டது என்றும். இது புத்தம் புதியதாகக் காணப்படுவதால் அச்சிடப்பட்டும் பழக்கத்திற்கு வெளியிடப்படாத நாணயமாக இருக்க வேண்டும் என்றும், இதேபோன்று நான்கு நாணயங்கள் மட்டுமே கிடைத்துள்ளன என்றும் அவற்றில் இரண்டு கல்கத்தாவில் இந்திய அருங்காட்சியகத்திலும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன என்றும் இக்குறிப்பிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

மேற்கண்ட குறிப்பில் இக்காசில் காணப்படும் உருவம் 'விஷ்ணு' என்று தவறாக அடையாளம் காட்டப்பட்ட தாலும், நாணயத்தின் படம் அந்த நூலில் தரப்பட்டதாலும், சென்னையிலிருந்து கும்பினி அரசு வெளியிட்ட பல 'நட்சத்திரப் பகோடா' காசுகளில் 'இதுவுமொன்று என்று கருதி நாணயவியல் அறிஞர்கள் இந்த அரிய நாணயத்தைப் பற்றி மேலும் ஆய்வு செய்யாமலேயே விட்டுவிட்டனர் என்று தோன்றுகிறது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு அண்மையில் கல்கத்தா பல்கலைக்கழகத்து வரலாற்றுப்பேராசிரியர் பி.என்.முகர்ஜி கல்கத்தா இந்திய அருங்காட்சியகத்தில் சேகரித்து வைக்கப் பட்டுள்ள தங்க நாணயங்களின் பட்டியலை மட்டும் மிகத் தெளிவான வண்ணப் படங்களுடன் வெளியிட்டுள்ளார்.

இந்நூலில்தான் முதன்முதலாக இங்கு குறிப் பிடப்படும் தங்க நாணயத்தின் வண்ணப்படம் (படம் - I) வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இந்திய நாணய வரலாற்றிலேயே மிகச் சிறந்த தங்க நாணய வெளியீடுகளில் இதுவுமொன்று என்று இந்த நூல் சுட்டிக் காட்டியிருக்கிறது. காசின் முன்புறம் அமர்ந்த நிலையில் காணப்படும் திருவுருவம் ஒரு 'முனிவராகவோ அல்லது தெய்வமாகவோ' இருக்கலாம் என்று முகர்ஜி கருத்து தெரிவித்துள்ளார்.

### நாணயத்தைப் பற்றிய விவரங்கள்

காசின் முன்புறத்தில் அமர்ந்த நிலையில் ஒரு முனிவரின் திருவுருவம் காணப்படுகிறது. அவர் ஒரு பீடத்தின்மீது பத்மாசனமிட்டு தியானநிலையில்

அமர்ந்திருக்கிறார். வலது கை வலது தொடை மீதும் இடது கை சின்முத்திரை நிலையிலும் உள்ளன. இடையில் தட்டுச் சுற்றாக வேட்டியும் இடது தோளில் மடித்துப் போட்ட துண்டும் அணிந்திருக்கிறார். மழித்த தலை; தலைக்கு மேலே ஒரு குடை; அவருக்கு முன் ஒரு சிக்குப் பலகையில் விரித்த நிலையில் ஒரு நூல் வைக்கப்பட்டுள்ளது. காசின் பின்புறத்தில் ஐந்துமுனை நட்சத்திரம் புள்ளிகளாலான வட்டத்துக்குள் பொறிக்கப்பட்டுள்ளது.

## யார் இந்த முனிவர்?

காசின் முன்புறம் காணப்படும் உருவத்தின் மேனியில் எந்தவிதமான ஆபரணங்களும் இல்லாததாலும், சுற்றிலும் கொடி, ஆயுதம் போன்ற எந்தவிதமான சின்னங்களும் காணப்படாததாலும் இவ்வுருவம் எந்த ஒரு தெய்வத்தையோ அல்லது அரசனையோ குறிக்கவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது. மேலே உள்ள குடை, அமர்ந்துள்ள பீடம், பத்மாசனமும் சின்முத்திரையும் கொண்ட தியான நிலை, எளிய உடை ஆகியவற்றிலிருந்து இத்திருவுருவம் ஒரு முனிவரைக் குறிக்கிறது என்று நிச்சயமாகக் கூறலாம். மேலும் அவருடைய இடையிலுள்ள வேட்டி தட்டுச் சுற்ற சாக இருப்பதினாலும், தோளில் துண்டை மடித்துப் போட்டிருக்கும் பாங்கிலிருந்தும் இவர் ஒரு தமிழ் முனிவர் என்று அடையாளம் காண முடிகிறது. இவருக்கு முன்னால் விரித்த நிலையில் வைக்கப்பட்டுள்ள நூல் இவர் ஓர் ஆசானாகவோ பெரும்புலவராகவோ இருக்க வேண்டும் என்று உணர்த்துகிறது. யார் இந்த முனிவர்? இவருடைய திருவுருவம் கும்பினியார் போட்ட தங்கக்

காசில் எப்படி இடம் பெற்றது? காசில் எழுத்துகள் இல்லாத நிலையில் இக்கேள்விகளுக்கு பலதரப்பட்ட அகச்சான்றுகளையும் புறச் சான்றுகளையும் கொண்டுதான் விடை காண முடியும்.

எளிய உடையுடன் தியான நிலையில் ஒரு குடையின் கீழ் அமர்ந்து முன்னே வைக்கப்பட்டுள்ள ஒரு நூலுடன் சித்திரிக்கப்பட்டுள்ள இத்திருவுருவம் திருவள்ளுவப் பெருமானுடையதாக இருக்கலாமோ என்று ஓர் எண்ணம் என் மனதில் பளிச்சிட்டது. இந்த யூகத்தை உறுதிப்படுத்திக் கொள்ள சென்னை ஆவணக் காப்பகத்தில் சேகரித்துப் பாதுகாக்கப்பட்டு வரும் கும்பினி அரசாணைகளையும் அக்கால நாணய சாலையின் அறிக்கைகளையும் பார்வை யிட்டதில் சில முக்கியமான தடயங்கள் கிடைத் துள்ளன. இவ்வாய்வுக்கு எல்லா வசதிகளையும் செய்து உதவிய ஆவணக் காப்பகத்தின் ஆணையர் திரு.எம்.பரமசிவம் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக் கிறேன்.

## காசின் காலம்

இக் காசின் பின்புறத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஐந்துமுனை நட்சத்திரச் சின்னத்திலிருந்து ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி அரசு சென்னையிலிருந்து 19-ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வெளியிட்ட 'நட்சத்திரப் பகோடா' அல்லது 'வராகன்' என்று அழைக்கப் பட்ட பல தங்க நாணயங்களில் இதுவுமொன்று என்று தெரிகிறது. மேலும் இக்காசு இயந்திரத்தின் மூலம் மிகவும் நேர்த்தியாக அச்சடிக்கப்பட்டுள்ளது. கும்பினி அரசு சென்னை ஜார்ஜ்

கோட்டையில் முதன் முதலாக 1807-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இயந்திர நாணய சாலையை நிறுவி தங்கம், வெள்ளி மற்றும் செப்புக் காசுகளை வெளியிடத் தொடங்கியது. 1817-ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் தங்க வராகன்கள் அச்சடிப்பது நிறுத்தப்பட்டு விட்டது. ஆகையால் இக்காசு 1807-ம் ஆண்டு முதல் 1817-ம் ஆண்டு வரையிலான பத்தாண்டு காலத்திற்குள் வெளியிடப் பட்டிருக்க வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

## எல்லிஸ் துரையும் திருக்குறளும்

அக்கால கட்டத்தில் ஃபிரான்சிஸ் வைட் எல்லிஸ் என்னும் ஆங்கிலேய அதிகாரி சென்னை மாவட்டக் கலெக்டராகப் பணியாற்றி வந்தார். 1796-ம் ஆண்டு ஆட்சிப் பணியில் சேர்ந்த அவர் சில ஆண்டுகளிலேயே தமிழ் முதலிய தென்னிந்திய மொழிகளிலும் வட மொழியிலும் பெரும் புலமை பெற்றுவிட்டார். தமிழ் நூல்கள் அச்சேறியிராத அக்காலத்திலேயே அவர் ஏட்டுச் சுவடிகளிலிருந்து முறையாகத் தமிழைக் கற்றுத் தேர்ந்தார். தமிழ் முதலிய திராவிட மொழிகள் சமஸ்கிருதம் போன்ற இந்தோ - ஆரிய மொழிகளிலிருந்து வேறுபட்டவை என்ற உண்மையை முதன்முதலாக உலகுக்கு அறிவித்த பெருமை இவரையே சாரும்.

எல்லிஸ் துரைக்கு திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் அளப்பரிய பற்று இருந்தது. திருக்குறளிலிருந்து பல குறள்களைத் தெர்ந்தெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தெளிவான உரையுடன் ஓர் அரிய நூலை இவர் எழுதினார். இதுவே திருக்குறளின் முதல் ஆங்கில மொழி பெயர்ப்பாகும். துரதிருஷ்டவசமாக அந்நூல் முற்றுப்பெறு முன்னரே எல்லிஸ் துரை

இராமநாதபுரத்தின் அருகே முகாமிட்டிருந்தபோது தற்செயலாக விஷ உணவை அருந்தி அகால மரணமடைந்தார். அவர் இறந்தபின் வெளிவந்த அந்த நூலை மீண்டும் சிறந்த முறையில் ரா.பி.சேதுப்பிள்ளை பதிப்பித்துள்ளார். இந்நூலில் எல்லிஸ் துரை முந்நூறுக்கும் மேற்பட்ட பழந்தமிழ் நூல்களிலிருந்து காட்டியுள்ள மேற் கோள்களிலிருந்து அவருடைய ஆழ்ந்த புலமை வெளிப் படுகிறது. இன்று காணாமற் போய்விட்ட வளையாபதி போன்றசங்க நூல்களிலிருந்தும் இவர் மேற்கோள்களைக் கையாண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கல்வெட்டில் திருக்குறள்

எல்லிஸ் துரை திருவள்ளுவர் மீதும் திருக்குறளின் மீதும் கொண்டிருந்த பற்றுக்கு எடுத்துக்காட்டாக இரு அரிய கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. சென்னை நகரில் 1818-ல் கடும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது சென்னைக் கலெக்டராக இருந்த எல்லிஸ் துரை பெரு முயற்சி செய்து நகரில் 27 இடங்களில் குடிநீர்க் கிணறு களைத் தோண்ட ஏற்பாடுகள் செய்தார். அக்கிணறுகளில் ஒன்று இராயப்பேட்டை பெரியபாளையத்தம்மன் கோயிலில் இன்றும் உள்ளது. இக்கிணற்றின் கைப்பிடிச் சுவரில் பதிக்கப்பட்டிருந்த ஒரு கல்லில் எல்லிஸ் துரை 1818-ம் ஆண்டில் ஒரு நீண்ட கல்வெட்டை வெட்டி வைத்தார். (இக்கல்வெட்டு இப்பொழுது தமிழ்நாடு தொல்லியல் துறையின்மதுரை அருங்காட்சியகத்தில் உள்ளது) அதில்

**.... சயங்கொண்ட தொண்டிய சாணுறு நாடெனும்**
**ஆழியிலிழைத்த வழகுறு மாமணி**

குணகடன் முதலாக குடகடலளவு
நெடுநிலந்தாழ நிமிர்ந்திடு சென்னப்
பட்டணத் தெல்லீசனென்பவன் யானே
பண்டார காரிய பாரஞ்சுமக்கையிற்
புலவர்கள் பெருமான் மயிலையம்பதியான்
தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்
திருக்குறடன்னிற் றிருவுளம் பற்றிய
"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு"

என்பதின் பொருளை யென்னுளாய்ந்து....

என்ற வரிகளில் ஓர் அழகிய குறளை மேற்கோளாகக் கையாண்டிருக்கிறார். மேலும் எல்லிஸ் துரை அக்காலத்தில் சென்னப்பட்டணத்து பண்டாரகாரிய பாரம் சுமந்திருந்ததையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. அக்காலத்தில் நாணயசாலை பண்டாரத்தின் (Treasury) மேற்பார்வையில் செயல்பட்டு வந்தது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

மற்றொரு கல்வெட்டு திண்டுக்கல் நகரிலுள்ள எல்லிஸ் துரையின் கல்லறையின்மீது பொறிக்கப் பட்டுள்ளது. இதில் "எல்லீசன் என்னும் இயற்பெயருடை யோன்"

திருவள்ளுவப் பெயர்த் தெய்வஞ் செப்பி
யருள் குறணூலுளறப்பாலினுக்குத்

**தங்கு பல நூலு தாரண கடலைப் பெய்**
**திங்கி வீசுதனி விணங்க மொழிபெயர்த்தோன்....."**

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளிலிருந்து எல்லிஸ் துரையின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் அவருக்குத் திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் இருந்த மிகுந்த ஈடுபாடும் தெளிவாகத் தெரிகின்றது.

## *திருவள்ளுவரின் திருமேனியே!*

எனவே எல்லிஸ் துரை 1810 - 19-ம் ஆண்டுகளில் சென்னைக் கலெக்டராகப் பணியாற்றி வந்தபோதே பண்டார காரியத்தையும் செய்து வந்தார் என்றும், அதே சமயத்தில் திருக்குறளை முற்றிலும் ஓதி உணர்ந்து அதன் அருமை பெருமைகளை அறிந்து அதற்கு ஆங்கிலத்தில் ஓர் உரை எழுதினர் என்றும் மேற்குறிப்பிட்ட கல்வெட்டுச் சான்றுகள் மூலம் தெரிய வருகின்றது. எல்லிஸ் துரை தமது அரசுப் பணியில் கிடைத்த வாய்ப்பைப் பயன் படுத்திக்கொண்டு தாம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த திருக்குறளை இயற்றிய திருவள்ளுவப் பெருமானின் திருவுருவத்தைக் கும்பினி அரசின் பெரிய தங்க நாணயமான இரட்டை வராகனில் பதிப்பிக்க ஏற்பாடுகள் செய்தார் என்று நம்ப இடமிருக்கிறது.

சென்னையிலுள்ள ஆவணக்காப்பகத்தில் நான் ஆய்வு செய்தபோது, சென்னை நாணய சாலையில் அச்சடிக்கப்பட்ட தங்க நாணயங்களின் மாதிரிகள் பெட்டிகளில் வைக்கப்பட்டு அவற்றுடன் சென்னை அரசு மூலமாகக் கல்கத்தாவிலிருந்த மத்திய அரசுக்கும்

லண்டனில் செயல்பட்ட கும்பினி டைரக்டர்களின் ஆணையத்திற்கும் அனுப்பப்பட்ட குறிப்புகள் கிடைத்தன. ஆயினும் அக்கடிதங்களுடன் இணைக்கப்பட்டிருந்த பட்டியல்களின் நகல்களோ, காசுகளின் வரைபடங்களோ கிடைக்காததால் இவ்வாண்டுகளில் அச்சிட்ட இரட்டை வராகன்களில் இதுவும் ஒன்றா என்று கண்டு பிடிக்க முடியவில்லை." என்றாலும் இக்காசுகள் லண்டனிலும் கல்கத்தாவிலும் உள்ள அருங்காட்சியகங்களில் மட்டுமே கிடைப்பதால் அவை மேற் கூறியவாறே அந்த இடங்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்க வேண்டும் என்பது தெளிவு.

அச்சிடப்படும் இந்தத் தங்க நாணயம் புழக்கத்திற்காக ஏன் வெளியிடப்படவில்லை என்ற கேள்விக்கு இப்பொழுது விடை காண்பது கடினமே. ஒருக்கால் இக்காசின் மாதிரிகள் கல்கத்தாவில் இருந்த மத்திய அரசிற்கும், லண்டனில் இருந்த கும்பினி ஆணையத்திற்கும் போய்ச் சேருமுன்னர் இனிமேல் வராகன்களை அச்சடிப்பது இல்லை என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம்; அல்லது திருவள்ளுவப் பெருமானின் அருமை பெருமைகளை உணராது, மத்திய அரசும் கும்பினி நிர்வாகமும் இக்காசை வெளியிடும் திட்டத்தை நிராகரித் திருக்கலாம். மேலும் ஆவணங்கள் கிடைத்தால்தான் இப்பிரச்சினைக்குத் தெளிவான விடை கிடைக்கக்கூடும்.

அக்காலத்திய நாணய சாலை ஆவணங்கள் இப்பொழுது மிகவும் சிதிலமாகவும் இன்னும் சீர்படுத்தப்படாமலும் இருப்பதால் அவற்றை முற்றிலும் ஆய்வுசெய்ய இயலவில்லை. எனினும் கிடைத்துள்ள

எல்லாச் சான்றுகளையும் தொகுத்து ஒருங்கே நோக்கினால் இத்தங்க நாணயத்தில் திருக்குறளுக்கு உரை கண்ட எல்லிஸ் துரையின் செல்வாக்கால் திருவள்ளுவப் பெருமானின் திருவுருவம் பொறிக்கப் பட்டிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. சென்னை ஆவணக் காப்பகத்தில் மேலும் தேடினால் இம்முடிவுகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

## திருவள்ளுவரின் திருவுருவ அமைப்பு

இக்காசில் காணப்படும் திருவுருவத்தையும் சென்னை மயிலையில் உள்ள திருவள்ளுவர் கோயிலில் அண்மையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையும் (படம் - 2) ஒப்பிட்டுப் பார்க்கலாம். சுமார் 14 - 15-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் இக் கற்சிலையைப் பற்றி தமிழ்நாடு தொல்லியல் துறை ஆய்வாளர் சகிருஷ்ணமூர்த்தி பின்வருமாறு கூறுகிறார்:

''இச்சிலையின் உருவம் பீடத்தில் இரு கால்களையும் மடக்கி அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. தியான நிலையில் வலக்கை சின்முத்திரையுடன் அக்கமாலை ஏந்தியும் இடக்கை ஓலைச்சுவடி ஏந்தியும், இச்சிலை காணப்படுகிறது. இவ்வுருவத்தின் தலையை முடிந்த கொண்டையும், முகத்தில் நீண்ட தாடியும் உடலில் ஓடும் பட்டையான அங்கியும், இடையில் ஆடையும் அணி செய்கின்றன". இன்று தமிழக அரசின் மூலம் பிரபலமாகி யிருக்கும் திருவள்ளுவரின் திருவுருவப்படமும் (படம் - 3) ஏறத்தாழ இக்கற்சிலையின் அமைப்பை ஒத்துள்ளது எனலாம்.

இக்காசில் காணப்படும் திருவுருவத்திற்கும் மற்ற இரு உருவகங்களுக்கும் இடையில் பல ஒற்றுமைகள் கண்கூடாகத் தெரிகின்றன. ஆயினும் ஒரு முக்கிய வேறுபாடும் பளிச்சென்று தெரிகிறது. காசில் உள்ள முனிவரின் திருவுருவத்தில் தலை மழித்தும் முகத்தில் தாடி மீசையின்றியும் இருப்பது குறிப்பிடத்தக்க வேறுபாடாகும்.

## திருவள்ளுவர் சமணரா ?

இக்காசில் முனிவரின் தலைமீதுள்ள குடையையும், மழித்த தலையையும், முகத்தையும் காணும்போது இவரை உருவகப்படுத்தியவர்கள் இவர் ஒரு சமண முனிவர் என்று கருதியுள்ளார்கள் எனத் தெளிவாகத் தெரிகிறது. திருக்குறளில் 'ஆதிபகவன்', 'மலர்மிசை ஏகினான்', 'அறவாழி அந்தணன்' போன்றுவரும் சொல் தொடர்கள் வள்ளுவப் பெருமான் சமண சமயத்தினர் என்று கொள்வதற்கு வலுவான சான்றுகளாகும்.

## வேண்டுகோள்

வள்ளுவப் பெருந்தகையின் திருவுருவத்தைத் தாங்கி நிற்கும் பொற்காசு ஓர் அரிய கலைப் பொக்கிஷம் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. திருவள்ளுவப் பெருமானின் திருவுருவம் பொறிக்கப்பட்டிருக்கும் நான்கு தங்க நாணயங்களில் இரண்டு லண்டன் பிரிட்டிஷ் மியூசியத்தில் நமக்கு எட்டாக்கையில் உள்ளன. நம் நாட்டிலேயே கல்கத்தாவில் இந்திய அருங்காட்சியகத் தில் உள்ள மற்ற இரு காசுகளில் ஒன்றையாவது நிரந்தரக் கடனாகப் பெற்று அக்காசைத் திருவள்ளுவப் பெருமான் அவதரித்த

*சென்னை மாநகரின் அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்க தமிழக அரசு ஆவண செய்ய வேண்டுமெனக் கோருகின்றேன்.*

*இக்காசை முன் மாதிரியாகக் கொண்டு மத்திய அரசு ஒரு வெள்ளி ரூபாய் நாணயத்தை வெளியிட வேண்டுமென்றும் தமிழக அரசு கோர வேண்டும். இத்தகைய காசு வெளியானால் அது திருவள்ளுவரின் புகழை மேலும் பரவச் செய்வதுடன் எல்லிஸ் பெருமகன் கண்ட கனவையும் நனவாக்கிவிடுமல்லவா?*

நன்றி 'தினமணி சுடர் - 4.3.95'

## பின்இணைப்பு

### குந்தகுந்தர் இயற்றியருளிய நூல்கள்

### (நமக்குக் கிடைத்துள்ளவை)

1. பஞ்சாஸ்திகாயம், 2. பிரவசன ஸாரம், 3. சமய ஸ்ாரம், 4. ரயண ஸாரம், 5. நியம ஸாரம், 6. ஜோணி ஸாரம், 7. கிரியா ஸாரம், 8. ஆராதனா ஸாரம், 9. லப்தி ஸாரம், 10. க்ஷபணா ஸாரம், 11. பந்த ஸாரம், 12. தத்வ ஸாரம், 13. அங்க ஸாரம், 14. திரவிய ஸாரம், 15. தர்சன பாகுடம், 16. சுத்த பாகுடம், 17. சாரித்ர பாகுடம், 18. போத பாகுடம், 19. பாவ பாகுடம், 20. மோட்ச பாகுடம், 21. தோய பாகுடம், 22. சரண பாகுடம், 23. சமவாய பாகுடம், 24. நய பாகுடம், 25. பிரக்ருதி பாகுடம், 26. சூர்ணி பாகுடம், 27. பஞ்சவர்க்க பாகுடம், 28. கர்மவிபாக பாகுடம், 29. வஸ்து பாகுடம், 30. புத்தி பாகுடம், 31. பயர்த்த பாகுடம், 32. உத்பாத பாகுடம், 33. திவ்ய பாகுடம், 34. ஸிக்க பாகுடம், 35. ஜீவ பாகுடம், 36. ஆசார பாகுடம், 37 ஸ்தான பாகுடம், 38. பிரமாண பாகுடம், 39. ஆலாப பாகுடம், 40. சூளி பாகுடம், 41. ஷட் தரிசன பாகுடம், 42. கம பாகுடம், 43. பயா பாகுடம், 44. வித்தியா பாகுடம், 45. உகாத பாகுடம், 46. திருஷ்டி பாகுடம், 47. சித்தாந்த பாகுடம், 48. நிதாய பாகுடம், 49. ஏயந்த பாகுடம், 50. விஹய பாகுடம், 51. ஸாலம்பி பாகுடம், 52. துவாதஸாநுப்ரேட்சை மற்றும் 53. ஷட்கண்டாகமம் என்னும் நூலில் முதல் மூன்று காண்டத்திற்கு எழுதப்பட்ட உரைநூல். 54. பத்ம நந்தி பச்சீஸ், 55. திருக்குறள்

*(மேற்குறிப்பிட்ட நூல்களில் முதல் 52, பிராகிருத மொழியிலும் அடுத்த இரண்டும் சமஸ்கிருத மொழியிலும், இறுதிநூல் தமிழ் மொழியிலும் இயற்றப்பட்டவையாகும்.)*

## ஸ்ரீ குந்த குந்தரைப் புகழ்ந்து பேசும் சில தனிச் சுலோகங்கள்

தட்சிண தேசே மலயே
ஹேமக்ராமே முநிர்மஹாத்மாஸீத்
ஹேலா சார்யோ நாம்நா
த்ரவிள கணாதீஸ்வரோ தீமான்॥

*பொதிகை மலையை எல்லையாக உடைய தென்னாட்டில் பொன்னூர் கிராமத்தில், திராவிட நிர்கந்த மாமுனிவர் சங்கத்தின் கணதர பதத்தைப் பெற்றவராயும் மாமேதையாயும், மகாத்மாவாயும் உள்ள பெயரினால், ஏலாச் சாரியார் என்னும் நிர்கந்த மாமுனிவர் இருந்தார்.*

## சமய ஸாரப்ராப்ருத முகவுரை

தஸ்யாந்வயே பூ விதிதேப பூவ
ய: பத்ம நந்தி ப்ரதமாபி தாந:
ஸ்ரீ குந்த குந்தாதி முனீஸ்வராக்ய:
ஸத் ஸம்யமா துக்தத சாரணார்த்தி:

*இவ்வுலகில் பெருமைபடைத்த தம்முடைய குலத்தில் பத்ம நந்தி என்னும் பெயருடையவராய் இருந்தவர் எவரோ? அவரே நல்ல தவயோகத்தினால் குந்த குந்தர் முதலிய பெயர்களையுடையவராய் சிறந்த முனிபுங்கவராய், சாரணரித்தியை அடைந்தருளினார்.*

## சிராவண பெளிகுளம் கல்வெட்டு

வந்த்யோ விபுர்புவி நகை
    ரிஹ கொண்ட குந்த:
குந்தப்ரபா ப்ரணயிகீர்த்தி
    விபூஷி தாஸ:
யஸ்சாரு சாரண கராம்
    புஜ சஞ்ச ரீக:
சக்ரேஸ்ரு தஸ்ய பரதே
    ப்ரயத: ப்ரதிஷ்ட:

*எவர், அழகிய சாரணர்களுடைய கைகளாகிய தாமரை மலர்களுக்கு வண்டு போன்றவராயும், ஐம்பொறிகளை வெற்றி கொண்டவராயும், இப்பாரத நாட்டின்கண் மெய்யான சாத்திரங்களை நிலைக்கச் செய்தவராயும் விளங்கினாரோ, அப்படிப்பட்ட, கொருக்கத்தி மலரின் காந்தி போன்று புகழினால் திக்கெங்கும் இசை போக்கிய குந்த குந்தர் என்னும் பிரபுவை இவ்வுலகில் வணங்கி வாழ்த்தாதார் உளரோ?*

### இவற்றையும் தெரிந்து கொள்வோம்!

*1*

*ஸ்ரீ மகாவீர வர்த்தமானர் பரிநிர்வாணம் அடைந்தபின் அநகார கேவலிகளும் ஆசாரியர்களும் ஜைன சமய தத்துவங்களைப் போதிக்கும் தலைவர்களாய் குருபீடத்திற்கு வந்தார்கள். அவ்வாறு வந்தவர்களின் பட்டியல் நீளமானது. அவர்களில் அருகத்*

பலி ஆசாரியரே, நான்கு கணங்களை நிறுவியவர் ஆவார். ஒவ்வொரு கணத்திற்கும் ஒவ்வொரு சங்கம் ஏற்படுத்தினார். நந்தி சங்கம், சேன சங்கம், வீரசங்கம், தேவ சங்கம் என்பனவே அவைகள். குந்த குந்தர் நந்தி சங்கத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

2

மயிலையில் அரசு புரிந்திருந்தவன் மயிலைமான் என்னும் பெயரினன். அப்பழைய மயிலை நகரம் கடல் கொள்ளப்பட்ட பிறகு, அருகிலிருந்த 'அப்பூர்' என்னும் சிற்றூர், மயிலாப்பூர் என இக்காலம் வழங்கிவருகிறது. அங்கு நேமிநாதருக்கு ஆலயம் ஒன்றும் இருந்தது.

3

தமிழ்நாட்டில் வசிக்கும் ஜைனர்கட்கு மட்டும் 'நைனார்' என்னும் சிறப்பு பெயர் ஏற்பட்டிருக்கிறது. இது வடமொழிச் சொல்லின் திரிபு. 'ந + ஏந:' என்று இதைப் பிரிக்க வேண்டும். 'ஏந' என்பது பாபத்தையும் 'ந' என்பது 'இல்லை' என்பதையும் குறிப்பன. இதோடு தமிழ்மொழி மரபிற்கு ஏற்ப 'ஆர்' என்னும் பல்பார் விகுதி சேர, நைநார் என்று உச்சரிக்கப்படுகிறது. 'பாவம் இல்லாதவர் என்பது இதற்குப் பொருள். இக்காலத்தில் இச்சொல் நைனார் எனவும் நயினார் எனவும் சிலரால் எழுதப்படுகிறது.

4

குருவின் ஆணையின்படி, திருக்குறளை மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றி வரச்சென்றவரும் ஒரு நயினாரே! அவரது பெயர் திருவுள்ளம் நயினார்

என்பது புறச்சமயத்தினர், இவர் பெறை திருவள்ளுவ நாயனார் எனத் திரித்துத் திருக்குறளைச் செய்தவர் இவரே என்றும், 'ஏலாச்சாரியார்' என்னும் பெயரையும் 'ஏலேலசிங்கர்' என்று திரித்து இவரிடம் திருவள்ளுவர் நூல் வாங்கி நெசவுத் தொழில் செய்தார் என்றும் கற்பனைக் கதைகளைக் கட்டி உலவிட விட்டனர்.

*5*

குந்த குந்தர் தாம் செய்த தவப்பயனாகச் சர்வார்த்த சித்தியில் போய் பிறந்துள்ளார் அல்லவா? அங்கு அகமிந்திரனாகி, எல்லையற்ற இன்பத்தைத் துய்த்தாலும், இறுதியில் இம்மண்ணுலகில் தோன்றி, எண்வகை வினைகளும் மாயமீண்டும் தவமியற்றினால்தான் முக்தி பெறமுடியும் என்பதை அறிய வேண்டும். குந்த குந்தர் இதற்கு விலக்கல்ல!

*6*

மகாஞானியாகிய ஏலாச்சாரியார் நீலகிரியின் (பொன்னூர் மலையின்) மிசை தேகவியோக மடைந்ததால் அம்மலையின்மீது, அவரது நினைவாக இரண்டு பாதங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆண்டின் மாரிக்காலம் தவிர்த்து மற்ற காலங்களில் தைத்திங்கள் தொடங்கி, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும், தென்னாட்டு ஜைனச் சான்றோர்கள், பெருந்திரளாக வந்து, முனிவரது பாதங்கட்குச் சிறப்பியற்றி வழிபட்டுச் செல்கிறார்கள்.

*7*

ஏறக்குறைய 65 ஆண்டுகட்குமுன்பு, வடநாட்டின் ஆராப்பட்டினத்திலிருந்து வந்த, திருமிகு.

தரணேந்திரதாஸ் என்னும் செல்வச் சீமான் அவர்கள் ஆசாரியரின் பாதங்களைத் தரிசனம் செய்து மகிழ்ந்ததோடு, மலையின் வட புறத்தில் 'ஆசிரமம்'

ஒன்றும் நிறுவிச் சென்றார். அவ்வாசிரமம் இருந்த இடத்திலேயே, பஞ்சகூட ஜினசைத் தியாலயம் ஒன்றும், அதன் அருகில் ஆசாரியர் குந்த குந்தர் தத்துவப் பரப்புமையம் ஒன்றும் விசாக ஆசாரியர் அஞ்சினான் புகலிடம் (உதாசீன ஆசிரமம்) ஒன்றும் உள்ளன. இவைகள் அமைந்துள்ள பகுதி, தற்பொழுது குந்த குந்த நகர் எனப்படுகிறது.

## வேதம் மற்றும் இந்துபுராணங்களில் பகவான் விருஷதேவர்

*ரிக்வேதத்தினின்று: (101-21-26)*

*ரிஷபம் மா ஸமாநநம் ஸபத் நா நம்*

*விஷெஹி பந்தநம்*

*சத்ரூ நாம் தநி விரஜாக் பிதம் காவம்.*

*மஹாதேவர் ரிஷப ரன்றி வேரல்ல என்பதாக ரிக் வேதத்தில்:*

*த்ருத பந்தோ ரிஷபோர் ஆராவிதி*

*மஹா தேவ மார்த்யான விவேஸ*

*மற்றொன்று:*

*மருவன் இந்தர ரிஷப ரனயபி*

*வஸோ மனுஷ்ய ஜட் பம மதாய*

*அஸிதேஹஸ்வ ஜடாரே மத்வே கார்மித்வ*

*ராஜஸி ப்ரதி பத் சுதாந.*

*யஜுர்வேதம்: (அத்யா) 19 மந்த்ரம் 14:*

"ஓ அர்ஹன்! நீ போதனா விதியாக வஸ்துஸ்வ ரூபம் என்பதை அம்பாக வைத்திருக்கிறாய். எல்லை அற்ற நான்கு குணங்களை ஆபரணமாகப் பூண்டு போதிக்கும் முறையாகவும் ஆக்கிக்கொண்டாய்.

ஓர் அர்ஹன்! நீ எல்லை அற்ற ஞானம் பெற்றாய் அதில் பிரபஞ்சம் பிரதிபலிக்கிறது: ஓ அர்ஹன்! காமத்தை வென்றவனே! உலக உயிர்களைக் காப்பாற்றுகிறாய், ஆக உன்னிலும் மிக்கானும் தீரனும் ஸமானமானவனும் இல்லை.

*மற்றொன்று:*

*"ஓம் நமோ அர்ஞதோ ரிஷபோ*

*ஓம் ரிஷபா பவித்நம் புருஹூதே*

*மத்வாஸம் யக் - நேஷூநக் ந ஸே*

*பரமம் மஹே ஸமஸ் த்யதம் ஸத்ரும்*

*ஜயம் தம் பாஷிந்தரே மௌரிதி ஸ்வாஹா."*

*ஸாமவேதம்:*

*"அப்பாதாதி மேயமான் ரோதஸி*
*இமகே விஸ்வ புவனானி மன்மனா*
*யோதேனா நிஷ்ட ரிஷப விராஜஸ்*
*அர்ஹம் இதம் தயஸே விஸ்வமயம்."*

*ஆரண்யகா:*

*ரிஷப ஏவ பகவான் ப்ரஹ்மே*
*பாகவத் பிரஹ்மகே ஸ்வாமேவ சிரானாநி*
*ப்ராஹ்மநாதபோஸ்ச ப்ராப்தா ஹா*
*பரம் பதம்.*

## ஹிந்து புத்த கிரந்தங்கள்

*சிவ புராணம்:*

*மஹிமை பெற்ற கைலாஸ மலையில் வந்திறங்கிய சர்வ வல்லமை யுள்ள தயா மூர்த்தியான ரிஷப தேவனே.*

*இத்யம் ப்ரபாவ ரிஷ போவதார*
*ஸங்கராஸ்யமே ஸமத தாம்கித்தினா பந்து.*
*நவ மாஹா ஹ காதிதஸ்தவனா ஹா.*

(ஆக என் ஒன்பதாவது அவதாரம் ரிஷபா. ரிஷபாவாகஅவதார மெடுத்ததின் காரணமாக உலக தர்மமானது புத்துயிர் அளிக்கப்படும் ஆதரவற்றவர்கள் காக்கப்படுவார்கள்.)

*பிரம்மாண்ட புராணம்:*

மருதேவி தெய்வீகமான குழந்தை பெற்றாள் ரிஷபா என்ற பெயரில்: க்ஷத்ரியர்களில் தலையாயவனும் மன வலிவு பெற்றவனுமாகும்.

*பிரபாஸ புராணம்:*

பகவான் நேமிநாதர் வருகை தந்ததால் கிர்நாரில் ரேவதி கிரி புனிதமுற்றது. பகவான் ரிஷப தேவர் வருகை தந்ததால் சத்ருஞ்ஜய கிரி புனிதடைந்தது: ஆகவே இவ்விரு மலைகளும் முக்தி மார்க்கத்தை அனுசரிக்கும் முனிபுங்கவர்களுக்கு நிர்வாண பதம் அடையும் புனிதஸ்தலங்களாகியது:

*ஸ்கந்த புராணம்:*

சத்ருஞ்சய கிரியையும் ரேவதி கிரியையும் வணங்கி கஜபத குண்டத்தில் நீராடினால் பிறப்பு இறப்பு தனை நீங்கி புனிதமடைகிறார்கள். ஆகவே உண்மையும் தூய்மையும் முற்று உணர்ந்து மேம்பாடுற்ற ரிஷப தேவனைக் குறிக்கோளாக மனம் சுருக்கி பயபக்தியுடன் வணங்குகிறார்கள்.

நாக புராணம்:

"இப்புவியில் உள்ள 68 தீர்த்தங்களில் யாத்திரை செய்து நீராடி கிடைக்கக் கூடிய புண்ணியமானது ஒரு வினாடி ஆதி நாதனைச் சிந்தித்தால் கிடைக்குமே."

அக்னி புராணம்:

"மருதேவிக்கு ரிஷபா மகனாகவும், பரதன் ரிஷபருக்கு மகனாகவும் பிறந்தனர். அப்பெயராலேயே இந் நன்நாடு "பாரத வர்ஷம்" என வழங்கப்படுகிறது.

மனுஸ்ருதி:

"இந்த யுக தோற்றத்து முற்பகுதியில் தோன்றிய ஆதி ஜிநநாகிய ரிஷபா வானுலகோரும் வந்தித்து வழிபட தத்வார்த்த வீரனாக உலக மஹா நியதிகளை தபஸ்விகளுக்கும் வகுத்தளித்த முதல்வனாகும்."

பாகவத புராணம்:

"தர்மத்தை நிலைநிருத்த ஈஸ்வரன் உலக ஆசான் ரிஷபாவாக அவதரித்தார். அவர் காலத்தில் மக்கள் வாழ்வின் உண்மையான இன்பமனு பவித்தனர்."

நியாய பிந்து:

"யதாஹா ஸர்வஜ்ஞா ஆப்தோவா ஸ
ஜ்யோதிக்ஜ ஞானாதிக முபதீஸத்வ யதா
ரிஷபா வர்த்தமானாதி:"

******